# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா


பொழிவு - 6
குவிப்பு - 07
பக்கங்கள் - 12

விலை ரூபா 12.00
ஜூலை, 2003

THE ONLY TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, Mannar, Sri Lanka. T.P:- 023. 2232 377


# நாம் வாழும் இக்காலத்தில் மிகப்பெரிய தலைவர் திருத்தந்தை!

## அமெரிக்க அதிபர் ஜோர்ச் புஷ் புகழாரம்



நாம் வாழும் இக்காலத்தில் மிகப்பெரிய தலைவர் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் என்று புகழாரம் சூட்டினார் அமெரிக்க அதிபர் ஜோர்ச் புஸ். போலந்து நாட்டின் கக்குவாரா நகரிற்கு வந்த புஷ் திருத்தந்தை ஆயராக இருந்த பாபில் பேராலய வளாகத்தில் நிகழ்த்திய உரையில் இங்கு இளைஞனாக, குருவாக இருந்த, கரோல் வொய்த்தீவா (திருத்தந்தையின் இயற்பெயர்) மக்களின் துன்பத்தில் கலந்து தானும் துன்பப்பட்டார். எனவேதான் இன்று மனித மாண்புக்கு குரல் கொடுக்கும் மகோன்னத சிருஷ்டியாக அவர் விளங்குகிறார் எனக் குறிப்பிட்டார். தொடர்ந்து அதிபர் புஷ் கூறுகையில், திருத்தந்தையின் துணிச்சலும் தொலைநோக்கு சிந்தனையும் நாட்டிற்கும் இக்கண்டத்தின் பெரும் பகுதிக்கும் விடுதலையைக் கொணர்ந்தது என்றார். பிரான்சில் நடக்கும் ஜி 8 நாடுகளின் கூட்டத்திற்கு செல்லும் வழியில் போலந்துக்கு வருகை தந்தார் புஷ் என்பது குறிப்பிடத்தக்கது.

## நற்செய்திப்பணியில் 35 ஆண்டுகள்!

யாழ் மறைமாவட்டத்தில் பணிபுரியும் நிரந்தர மறையாசிரியர்கள் தமது பணிவாழ்வின் 35வது ஆண்டு நிறைவை இவ்வாண்டு ஆனி மாதம் 30ம் திகதி நினைவு கூர்ந்தனர். மறையாசிரியர்கள் எஸ். எவ். சவுந்தரம், சீ.சீ.பங்கிராஸ், எம். யேசுதாஸ், எஸ். அந்தோனிப்பிள்ளை, எஸ். ஆரோக்கியநாதர், இ.ம.ஜெயசீலன் ஆகிய ஆறுபேரும் யாழ் மறைமாவட்டத்தில் பல்வேறு வகையான மறைப்பணிகளை தொடர்ந்து ஆற்றி வருகின்றார்கள். இவர்களின் அர்ப்பணிப்பு மிக்க அன்புப் பணியினால் மன்னார்த் திருச்சபையும் பயன்பெற்றுள்ளது. எனவே இந்த நீண்ட பணிவாழ்வின் ஆண்டு நிறைவில் மன்னார் ஆயர், குருக்கள், இறைமக்கள் சார்பாக மன்னா தனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் செபங்களையும் இம்மூத்த மறையாசிரியர்களுக்கு மகிழ்வோடு அர்ப்பணிக்கின்றது.

## மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கான புதிய நியமனங்கள்

அருட்பணியாளர்கள்

1. டெஸ்மன் குலாஸ் - பங்குத் தந்தை - கற்கடந்தகுளம்
2. ஸ்ரீபன் ராஜா - பங்குத் தந்தை - செட்டிகுளம்
3. ஞானப்பிரகாசம் - பங்குத் தந்தை - பள்ளிமுனை / உதவி இயக்குனர் இளைஞர்பணி
4. அந்தோனிதாஸ் டலிமா - பங்குத் தந்தை - தலைமன்னார்/ இயக்குனர் சமுகத் தொடர்பு ஆணைக்குழு
5. மாக்கஸ் - பங்குத்தந்தை - முத்தரிப்புத்துறை
6. டேவிற் மாசில்லாமணி சே. ச. (இயேசு சபைக்குரு)- பங்குத் தந்தை - அளவக்கை
7. அடைக்கலராஜா ச. ச. (சலேசியசபைக்குரு ) - உதவிப்பங்குத் தந்தை பேராலயம் மன்னார்/ வார இறுதிப்பணி முள்ளிக்குளம்.
8. யூட் குரூஸ் - இயக்குனர் - அன்பியத் தொடர்பகம்
9. நேசன் - இயக்குனர் - திருமறைப்பணி நிலையம் / பதிப்பாசிரியர் - மன்னா பத்திரிகை.
10. வசந்தகுமார் - பங்குத் தந்தை - உயிலங்குளம்
11. எஸ். ஜெயபாலன் - பங்குத் தந்தை - பண்டிவிரிச்சான்.
12. இராஜநாயகம் - உதவிப்பணியாளர் - ஓமந்தை (இருப்பிடம் பம்பைமடு)

## இறை அழைத்தல் எனும் கொடையை ஏற்கத்துணியும் அன்பு சகோதரனே

இதோ மன்னார் மறைமாவட்டத்தின் இதயம் எனத்திகழும் மடுமாதா சிறிய குருமடத்தில் 2004ம் ஆண்டில் சேர அரிய வாய்ப்பு!



தை 2004ம் ஆண்டு மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் சேரவிரும்பும் மாணவர்களே இறை அழைத்தலுக்கு குரல் கொடுக்க உங்கள் இதயம் நாடினால்! 2003ம் ஆண்டு ஆவணி 9ம், 10ம் திகதிகளில் குருமடத்தில் நடைபெறவிருக்கும் வந்துபாருங்கள் எனும் தேவ அழைத்தல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இறை அழைத்தலின் மகிமையை உணர்ந்து பாருங்கள் குருமடத்தை வந்து சுவைத்து பாருங்கள்

2003ம் ஆண்டில் 8ம், 9ம், 10ம், 11ம், ஆண்டுகளில் கற்கும் மாணவர்களே வரவேற்கப்படுகின்றார்கள் (அதாவது 2004ம் ஆண்டில் 9ம் ஆண்டில் இருந்து மாணவர்கள் சேர்ந்து கொள்ளலாம்) எனவே இளம் உள்ளங்களே இக்குருமடத்தினுல் நுழையும் முன் இங்கு அளிக்கப்படும் மனித, ஆன்மீக, அறிவுசார்ந்த உருவாக்கத்தைப் பற்றிய அறிவைப்பெற இறை அழைத்தல் என்றால் என்ன என்பதை அறிய இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

இந்நிகழ்வு 2003ம் ஆவணி 9ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியில் இருந்து 10ம் திகதி ஞாயிறு பிற்பகல் 3 மணிவரை நடைபெறவுள்ளது.

உங்கள் இதயமதில் இறை அழைத்தல் எனும் மாபெரும் கொடையை இறைவனிடமிருந்து இலவசமாகப் பெற அன்போடு வரவேற்கின்றோம். அவர் அவர்களிடம் வந்துபாருங்கள் என்றார் (அரு. 2:39)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
அருட்பணி S.K. தேவராஜா, குருமட அதிபர்,
மடுமாதா சிறிய குருமடம், மன்னார்.

## யாழ் பத்திரிசியார் கல்லூரியில் கொழும்புப் பேராயர்



யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் 2003ம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழா யூலை மாதம் முதலாம் திகதி கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக கொழும்பு மறைமாவட்ட பேராயரும் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தருமான மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை கலந்துகொண்டார்.

## மக்களில் மனச்சான்றை உருவாக்கும் பணியில் திருப்பீடம்

மக்களின் மனச்சான்றுக்குக் குரல் கொடுக்கும் ஒழுக்க ரீதியிலான பலமுடைய உலக சத்திய திருச்சபை என உரோம் நகரில் அண்மையில் நடந்த கருத்தரங்கில் உரையாற்றினார் திருப்பீட அதிகாரி ஒருவர். உரோம் நகரில் கிறகரியன் பல்கலைக்கழகத்தில் "திருச்சபையும் சர்வதேச ஒழுங்குமுறையும்" என்ற தலைப்பில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் உரையாற்றிய திருப்பீட அவையின் வெளியுறவுத் துறையின் செயலாளர் பேராயர் ஜோன் லுயிஸ் சலாம் மக்களின் மனச்சான்றை வடிவமைத்து பலன் கொடுப்பதன் மூலம் சர்வதேச ஒழுங்கமைப்பை உருவாக்க திருப்பீடம் உதவுகின்றது என்றார். மக்களின் மனச்சான்றை உருவாக்குவதில் திருப்பீடம் ஏனைய மத பாரம்பரியங்களின் பங்களிப்பையும் குறைத்து மதிப்பிடுவதில்லை எனவும் குறிப்பிட்டார். நீதியும் ஒழுங்கமைப்பும் நிறைந்த உலகைக் கட்டி எழுப்புவதில் கிறிஸ்தவ சபைகளின் பங்கு குறித்து இக்கருத்தரங்கில் ஆராயப்பட்டது.

## மடுப்பதியில் திருச்சிலுவைக் கன்னியரின் வைத்தியப் பணி

மடுத்திருப்பதியில் உள்ள வைத்தியசாலையை திருச்சிலுவைக் கன்னியர்கள் பொறுப்பெடுத்துள்ளனர். வைத்தியப் பணியை தமது முக்கிய பணியாகக் கொண்டு செயற்படும் திருச்சிலுவைக் கன்னியர் மடு வைத்தியசாலையை பொறுப்பெடுத்தமை மடுப்பதியை அண்டிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு ஒரு ஆசீர்வாதமாகும்.

இவ்வைத்தியசாலைக்கு பொறுப்பான அருட்சகோதரி கிளேயா மடு நிலைமைகள் பற்றி தெரிவிக்கும்போது பாம்புக் கடியினாலும், கண் நோயினாலும், மலேரியாக் காய்ச்சலினாலுமே அதிகமானவர்கள் தம் வைத்திய நிலையத்தை நாடி வருவதாக தெரிவித்தார். குறிப்பாக இரவு வேளைகளில் பாம்புக் கடிக்குள்ளாகி வருவோருக்கு உடனடி சிகிச்சைகளை அளித்து அவர்களை அவசியத்திற்கு ஏற்ப வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க வேண்டிய அவசர பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றார்.

## யுத்த காலத்தில்தான் உயர் பாதுகாப்பு வலயம் அவசியம் சமாதான சூழலில் அது அவசியமற்றது

### - மன்னார் ஆயர் -

யுத்த காலத்தில்தான் உயர் பாதுகாப்பு வலயம் அவசியம். தற்கால சமாதான சூழலில் அது அவசியமற்றது. உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீள்குடியமர்த்தி மக்களை இயல்பு நடவடிக்கைகளுக்கு திருப்புதல் போன்ற செயற்பாடுகளை அனைவரும் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என மன்னார் ஆயர் யோசேப்பு ஆண்டகை அவர்கள் கருத்துத் தெரிவித்தார். மன்னார் மாவட்டத்தின் மீள்குடியேற்றம் மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் இரண்டாம் தடவையாக 11.07.2003 அன்று வாழ்வுதய நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே ஆயர் இக்கருத்துக்களை வெளியிட்டார்.

## செப்ரம்பர் 7ம் திகதி உலக இளைஞர் ஞாயிறு

தேசிய இளைஞர் ஞாயிறு தினம் இவ்வாண்டு செப்ரம்பர் 7ம் திகதி கொண்டாடப்படவுள்ளது. தேசிய கத்தோலிக்க இளைஞர் முன்னணியின் வேண்டுகோளை ஏற்றும் தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாகவும் இலங்கை ஆயர்கள் மன்றம் இத்தினத்திற்கான அனுமதியை வழங்கியுள்ளது. இதனோர் அங்கமாக அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் (மத்.5:9) என்ற தலைப்பில் சுவரொட்டிப் போட்டி ஒன்றும் நாடளாவிய ரீதியில் நடாத்தப்படவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"உம்மிடம் அடைக்கலம்! புகுவோர் அனைவரும் மகிழ்வர் (தி.பா 5 : 11)

37வது உலகச் செய்தி நாள் பற்றி

## திருத்தந்தையின் செய்தி

**"உங்கள் கடமையிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளமுடியாது"**
**கருப்பொருள்: தொடர்பு தாளங்கள் "மண்ணுலகில் சமாதானம்"**

*1.* பனிப்போரின் இருள் சூழ்ந்த நாட்களில், திருத்தந்தை 23ம் அருளப்பரின் மண்ணுலகில் சமாதானம் என்ற சுற்றறிக்கையானது நம்மனங்கொண்ட ஆண், பெண் அனைவருக்கும் ஒரு நம்பிக்கை ஒளியாய் வந்தது. அழுத்தமான சமாதானத்திற்கு, தெய்வீக அமைப்புள்ள ஒழுங்கு முறைகள் எவ்வளவு தேவைப்படுகின்றன என்பதை விளக்கியது அச்சுற்றறிக்கை. ஒரு சமாதானமான அமைதியான சமூகத்திற்கு உண்மை நீதி பிறர் அன்பு சுதந்திரம் ஆகியவையே தூண்கள் என்பதை சுட்டிக்காட்டினார். அன்றைய திருத்தந்தை 23ம் அருளப்பர் நீதி, சார்பின்மை ஆகியவை நாடுகளுக்கிடையே பரஸ்பர புரிந்துகொள்ளுதலுக்கு அடிப்படையானவை. அறிவியலாலும், தொழில்நுட்பத்தாலும் நாடுகளிடையே நல்லுறவை ஏற்படுத்துவதில் சமூகத் தொடர்பு சாதனங்கள் மிகப் பயனுள்ள சாதனங்களாகும். மற்றொரு நாட்டின் நற்பெயரைக் களங்கப்படுத்தி உண்மை, நீதி ஆகிய கொள்கைகளை உதறிவிட்டு, தொடர்பு சாதனங்களின் உதவியுடன் பரப்பப்படும் பொய்கள் பற்றி மிகவும் வருத்தமுடன் அச்சுற்றறிக்கை குறிப்பிட்டது.

*2.* மண்ணுலகில் சமாதானம் என்ற சுற்றறிக்கை 40வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இன்று, ஒருவரை மற்றவர் எதிர்க்கும் பிளவு சக்திகளாக மக்களைப் பிரித்தாளும் ஒரு கசப்பான நிலையில் நாம் இருக்கிறோம். இன்றும்கூட, உலகில் பல பாகங்களிலும் சமாதானம், நீதி. சமூக நிலையற்ற தன்மை ஆகியவை குறைந்தே காணப்படுகின்றன. பயங்கரவாதம், மத்திய கிழக்கு நாடுகளின் பல பகுதிகளில் நிலவும் குழப்பங்கள், அச்சுறுத்துதல்கள், அநீதிகள், சுரண்டல்கள், பிறப்பிற்கு முன்னும் பின்னும் மனித உயிர்களின் புனிதத்தன்மைமீதும், மரியாதைமீதும் ஏவிவிடப்படும் அடக்குமுறைகள் ஆகியவை இன்றைய காலக்கட்டத்தின் மிக வருந்துவதற்குரிய உண்மை நிலைகளாயிருக்கின்றன. இதற்கிடையே, மனித உறவுகளைச் சீர்ப்படுத்தவும் மிக்க வலிமையுள்ள தொடர்பு சாதனங்கள் நல்ல வழியிலும், தீய வழியிலும் வெகுவாக முன்னேற்றமடைந்துள்ளன. எனவேதான், முப்பத்தேழாவது உலகத் தொடர்பு சாதன நாளின் கருப்பொருளாக, மண்ணுலகில் சமாதானம் என்ற சுற்றறிக்கையின் தொடர்ச்சியாக, அழுத்தமான சமாதானத்தில், சேவையில் செய்தித் தொடர்பு சாதனங்கள் என்பது மிகவும் பொருத்தமான ஒன்றாகிறது. திருத்தந்தை 23ம் அருளப்பரின் செய்தியிலிருந்து உலகமும் மக்கள் தொடர்பு சாதனங்களும் கற்றுக்கொள்ள வேண்டியவை இன்னும் ஏராளம்.

### 3. தொடர்புச் சாதனமும் உண்மையும்

உண்மைக்குப் பணியாற்றுவதும் அதற்குரிய மதிப்பை வழங்குவதும் எல்லாத் தொடர்பு சாதனங்களின் அடிப்படைத் தார்மீகத் தேவைகளாக இருக்க வேண்டும். மனிதத் தொடர்பு சாதனத்திற்கு உண்மையைத் தேடுவதும், அதைப் பேசுவதும் சுதந்திரமும் மிகவும் அடிப்படை. உண்மைகள், விவரங்கள் பற்றியவை மட்டுமல்ல இது. இறைவனிடம் நம் தொடர்பு பற்றியதும், மனிதர்களது தனிப்பட்ட இயல்பு மற்றும் விதிகளைப் பற்றியதும், சமூகம் அதன் பொதுவான நன்மைகள் பற்றியதுமாகும். இவ்வகையில் மக்கள் தொடர்பு சாதனங்கள், தப்பித்துக்கொள்ள இயலாத கடமைகளைக் கொண்டவையாகும். ஏனெனில், எண்ணங்கள் பகிர்வுகளின் இன்றைய நிலைக்களன்களாக தொடர்பு சாதனங்கள் நிலைத்திருக்கின்றன. இவற்றின் வழியாக மக்கள் ஒற்றுமையிலும், ஒருவர் மற்றவரை புரிந்து கொள்வதிலும் வளரலாம். இதன் காரணமாகவே, திருத்தந்தை 23 அருளப்பர் மிகப் பலமாக ஒற்றுமையை ஆதரித்தார். அது என்னவெனில் உண்மையை புலனாய்வு செய்யும் உரிமையாகும். அதாவது, தார்மீக விதிகளின் எல்லைகளுக்குள்ளேயும் பொது நன்மைகளுக்குள்ளேயும், பேச்சுரிமையிலும், எழுத்துரிமையிலும் மிக அத்தியாவசியமான சமூக அமைதியின் நியதிகளாகும். (மண்ணுலகில் சமாதானம் இல.12)

சமுகத் தொடர்புசாதனமானது உண்மைக்காக துணிச்சலுடன் பணியாற்றுகின்றது. ஆனால் சில வேளைகளில் அவை நாட்டு, இன, மொழி மதத் துவேசமான ஆர்வங்களின் காரணமாக பிரச்சாரம், பொய்யான தகவல்கள் ஆகியவற்றை முன்னிறுத்தும் ஏவலாக ஆகிவிடுகின்றன. முதலாவதாக, சமூகத் தொடர்பு சாதனங்களில் ஈடுபட்டுள்ள ஆண், பெண் அனைவரும், திருச்சபையும் இதில் ஆர்வமிக்க மற்றக் குழுக்களும் இங்கே கூறப்பட்டுள்ளது போன்று தவறுகளை தொடர்பு சாதனங்களில் நுழைப்பதை முழுவதுமாக தவித்தல் வேண்டும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)




## வாசகர் எண்ணங்கள்

### புதுப்பொழிவுடன் தொடர்ந்து வருக!

மன்னா என்னுட் உணர்ட மனதிற்கு இன்மை ஊட்டக் கிறிஸ்தவ மக்களின் இனிய விருந்தே! நீ கொண்டுவரும் அத்தனை எண்ணங்களும் இனிது. சிரிக்க நீங்க ரெடியா? என்பதை பார்க்க முன்பே சிரிப்பு வருகின்றது. மன்னாவே நீ மென்மேலும் வளர வாழ்த்துகிறேன். உனது சேவை சிறக்க பல்லாண்டு காலம் - பொல் ஊண்டாமல் - உறுதியுடன் நிற்க வாழ்த்துகிறேன். என்றும் புதுப்பொலிவுடன் தொடர்ந்து வருக!

*அந்தோனிப்பிள்ளை லலிதா பாலினி, தரம் - 11, வ. வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம், வவுனியா*

### சுவிஸில் உள்ள எமக்கு மாதமொரு உணவு!

புலம் பெயர் வாழ் எமக்கு மறைபணியாளரைத் தந்து உதவுவது மன்னார் மறை மாவட்டமே. அந்த வகையில் எம் ஆத்ம பசிக்கான மாதமொரு உணவாக மன்னாவையும் தந்து உதவுவதையிட்டு மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள் துறவிகள் இவர்களுக்கும் இன்னும் மேலாக மன்னா பதிப்பாசிரியர் மற்றும் மன்னா பத்திரிகையோடு தொடர்புடைய அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். "விளக்கம் தேடும் விசுவாசம்" பகுதி பொலிவு பெற்று வருவதையிட்டு பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் கூறி நிற்கிறேன். நன்றி என்றும் அன்புடன்,

*திருமதி பி.அ.கி. ஜெயந்தினி, சுவிஸ்.*

### வளர்ந்து விரிந்து செல்கிறாய்!

அன்பின் மன்னாவே உனது ஆயிரக்கணக்கான வாசகர்களில நானும் ஒருத்தி. உனது சேவை மாதத்திற்கு மாதம் வளர்ந்து விரிந்துகொண்டே போகிறது. இன்னும் உனது சேவை நீடுழி வளர எனது வாழ்த்தும் ஆசியும் என்றும் உனக்கு உண்டு.

*ஜென்சி கொடுதோர், கற்கடந்தகுளம், முருங்கன்.*

### இதயங்களில் இடம்பிடித்த மன்னாவே!

பல திசைகளிலும் உள்ள மக்களின் இதயங்களில் உனக்கென இடம்பிடித்துள்ள மன்னாவே, உனது சேவை வளர வாழ்த்துகிறேன். மன்னாவே நான் எழுதும் ஒவ்வொரு ஆக்கத்தையும் சுமந்து வருவாய் என நம்புகிறேன்.

*த. தவறஞ்சன், அச்சங்குளம், நானாட்டான்.*

## உண்மையின் எண்ணங்கள்

### இன்றைய மறைப்பணியாளர்களின் ஆன்மீக வாழ்வு

என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும். (மத்தேயு16:24) இன்றைய மறைப்பணியாளர்கள் என்று கூறும் மறையாசிரியர்களின் வாழ்க்கை எண்ணங்கள் எத்தகைய நிலையில் இருக்கின்றது என்பதை சற்று சிந்திப்போம். இது பரபரப்பான காலம். போட்டிகள் நிறைந்த சூழல். மனச் சோர்வு, மன அழுத்தம் என பலவிதமான உடல் உள நோய்களுக்கு இன்று பலரும் உட்பட்டிருக்கின்றார்கள் இன்று தமது பங்கின் மட்டில் ஒரு மறையாசிரியருக்குரிய கடமை, பொறுப்பு என்ன என்பதை சில மறைப்பணியாளர்கள் சரிவர உணர்வதில்லை பெயரளவில் இன்று நிறைய பணியாளர்கள் இருக்கின்றனர். இவர்களின் ஆன்மீக வாழ்வானது மிகவும் பலவீனமான நிலையில்தான் உள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டிலிந்து ஒரு சிறு பகுதியை எடுத்தியம்ப ஆசைப்படுகின்றேன்.

*"தம்பணியை உண்மையுடன் நிறைவேற்றும் பொருட்டு தூய்மைமிகு நற்கருணையைச் சந்திப்பதன் மூலமும் தனிப்பட்ட முறையில் ஆராதனை செலுத்துவதன் மூலமும் நாள்தோறும் கிறிஸ்து ஆண்டவருடன் உரையாடுவதில் அவர்கள் அக்கறை காட்ட வேண்டும். விருப்புடன் தியானங்கள் செய்வதோடு அருள் வழி காட்டலையும் அவர்கள் பெரிதும் மதிக்க வேண்டும். பல வழிகளில் முன்மாதிரியாக வாழ்ந்து காட்ட வேண்டும். இன்றைய மறைப்பணியாளர்கள் தங்கள் பங்கு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு பங்குத் தந்தையுடன் இணைந்து நல்ல திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஆராதனைக்குரிய மனநிலையைத் தேடவும் அதற்காக கடவுளிடம் விடாது மன்றாடவு வேண்டும். உலக் சுகங்களை நாடாமல் இறைவனின் திருவிருப்பத்தை நிறைவேற்றுபவர்கள்தான் உண்மையான விசுவாசிகள். இந்த மனநிலையால் அவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பங்கு மக்களோடு சேர்ந்து புதிய உடன்படிக்கையில் இணைப்பாளரான கிறிஸ்துவுடன் நெருங்கிய முறையில் தங்களை இணைத்துக் கொள்கின்றார்கள். இதனால் அவர்கள் இறைவனின் பிள்ளையாக அப்பா தந்தாய் எனக்கூப்பிட முடியும்."*

மறைப்பணியாளர் என்பவர் எந்தவொரு நிலையிலும் தனது பொறுப்புணர்ந்து சேவை புரிய முன்வர வேண்டும். துன்பங்களை பொறுமையோடு ஏற்றுக்கொள்பவர்கள் இறைத் திட்டத்திற்குத் தங்களையே மனமுவந்து கையளிப்பவர்கள் ஆவர். அதனால் இறைவனின் எண்ணம் ஈடேறுகின்றது. சில மறைப்பணியாளர்கள் பங்கிலே பெயரளவில்தான் பணியாளராக வாழ்கின்றார்கள். இவர்களில் சிலர் தாய் தந்தையை பசியால் வாட்டி வதைத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் ஊருக்குள் சேவை செய்கின்றார் இப்படிப்பட்ட பணியாளருக்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

S. ஞானக்கோன் மார்க், அருள்பணி பேரவை உறுப்பினர், வங்காலை.

## உண்மையின் எண்ணங்கள்

### உங்கள் எண்ண அலைகளுக்கு எழுத்துருக் கொடுங்கள்!

*வாசகர்களே, எழுத்தாளர்களே, கிறிஸ்தவ வாழ்வின் பல்வேறு அம்சங்கள் பற்றிய உங்கள் எண்ணங்களை மற்றவர்ளோடும் பகிர்ந்துகொள்ளுங்கள். இந்த எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதென்பது தனிநபரையோ அல்லது ஒரு அமைப்பையோ குற்றம் சாட்டுவதற்காக அல்ல. மாறாக நம்மையே நாம் சுய மதிப்பீடு செய்து தவறுகளைக் களைந்து இறையரசைக் கட்டும் பணியில் நாம் முன்னேறிச் செல்வதற்காகவே. எனவே உண்மையின் எண்ணங்கள் என்ற தலைப்பில் எழுதுங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம். (பதிப்பாசிரியர்)*




### புனிதர் பொன்மொழி

"நற்கருணை அருந்தும்போது நாமும் இயேசுவும் ஒன்றாகிறோம்."

புனித அலக்சாந்திரியா சிரில் ஆயர் (376 - 444)

### புனிதர் பொன்மொழி

"கிறிஸ்துவுக்கு இவ்வுலகில் இப்போது உடலில்லை அவரது உடல் நீங்களே."

- அவிலா திரேசம்மாள் -
கன்னியர் - மறை வல்லுனர் (1515- 1582)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மாவட்ட

## மீள் குடியேற்றம் மற்றும் உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான இரண்டாம் கட்ட உயர் மட்டக் கலந்துரையாடல்

மன்னார் மாவட்டத்தின் மீள்குடியேற்றம் மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் இரண்டாம் தடவையாக 11.07.2003 அன்று வாழ்வுதய நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் மன்னார் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை ஜேசுராஜா, மன்னார் குருமுதல்வர் அருட்தந்தை சேவியர் குருஸ் அடிகளார் அவர்களும் மன்னார் மாவட்ட இராணுவ அதிகாரி (பிறிகேடியர்) K.S. பெனாண்டோ, தமிழீழ விடுதலைப் புலிகள் மன்னார் மாவட்ட அரசியல் பிரிவைச் சார்ந்த பிரதிநிதி திரு. குணாளன் மற்றும் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும், இக்கலந்துரையாடலை ஏற்பாடு செய்த பேரு நிறுவன பிரதிநிதிகள் ஆகியோரும் மன்னார் அரச அதிபரின் பிரதிநிதி திரு. எட்வேட் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர்கள் பிரதிநிதிகள் என பலர் இதில் கலந்துகொண்டனர்.

இவ்விதக் கலந்துரையாடல்களை இடையிடையே நடாத்தும்பொழுது இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும், பொது மக்களுக்கும் இடையே புரிந்துணர்வு ஏற்பட வழி உண்டு என்ற கருத்து அனைவராலும் ஏகமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இச்செயல் அமர்வை மன்னார் வாழ்வுதய நிறுவனம் முன்நின்று ஒழுங்குபடுத்தியமை குறிப்பிடத்தக்கது.



வாழ்வுதயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாணவர்களுக்கான உறவுப்பால நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படம் இது.

## யாழ் மறைமாவட்டத்தில குருக்களுக்கான புதிய நியமனங்கள்

அருள்திரு ஜே. நீக்கிலஸ் யாழ் மறைமாவட்ட குரு முதல்வர்
சமயத்துறை நடுவர் - Vicar General, Chancellor
அருள்திரு எச். றொசான் ஆயரின் செயலர்
அருள்திரு பாஸ்கரன் உதவிப்பங்குத் தந்தை பண்டத்தரிப்பு
அருள்திரு மகன் உதவிப்பங்குத் தந்தை கரவெட்டி
அருள்திரு எமில்போல் பங்குத்தந்தை மாங்குளம்
அருள்திரு ஜெயசீலன் கென்றியரசர் கல்லூரி இளவாலை
அருள்திரு ஜோசப் ஜோயல் S.J. ஆன்மீக அப்போஸ்தலத்துவம் கென்றியரசர் கல்லூரி இளவாலை.
அருள்திரு தே. ரவிராஜ் உதவிப்பங்குத் தந்தை, யாழ். மரியன்னை பேராலயம்.
அருள்திரு அ. அமலராஜன் உதவிப்பங்குத் தந்தை, குருநகர் யாகப்பர் ஆலயம்.
அருள்திரு ம. சரத்ஜீவன் உதவிப்பங்குத் தந்தை, யாழ் அடைக்கல அன்னை ஆலயம்.
அருள்திரு சா. ஜஸ்ரின் உதவிப்பங்குத் தந்தை, அந்தோனியார் ஆலயம் மானிப்பாய்.
அருள்திரு ம. கான்ஸ்போவர் உதவிப்பங்குத் தந்தை, தாழையடி
அருள்திரு மோ. சோபன் ரூபஸ் உதவிப்பங்குத் தந்தை பருத்தித்துறை.
அருள்திரு செ. றஞ்சிதராஜ் உதவிப்பங்குத் தந்தை ஊர்காவற்றுறை
அருள்திரு சி. லீயோ ஆம்ஸ்ரோங் உதவிப்பங்குத் தந்தை, மிருசுவில்.
அருள்திரு செ. நேசநாயகம் உதவிப்பங்குத் தந்தை, கிளிநொச்சி
அருள்திரு தி. வசந்தசீலன் மன்னார் மறை மாவட்டம்

நனறி - பாதுகாவலன்

## பிச்சக்குளத்தில் ஆலயத் திருவிழா

7.5.2003ந் பிச்சகுளம் செபமாலை அன்னையின் திருவிழா நவநாள் ஆரம்பமானது. அருட்தந்தை தேவசகாயம்பிள்ளை அடிகளாரின் தலைமையில் கற்கடந்தகுளம் பங்குத்தந்தை ஸ்ரீபன்ராஜ் அடிகளார் தலைமையில் செபமாலை அன்னையின் கொடியேற்றத்துடன் திருப்பலி ஆரம்பமானது. அன்றைய திருப்பலியின் மையக்கருத்து இறைவார்த்தை. அருட்தந்தை ஸ்ரீபன்ராஜ் அடிகளாரால் மறையுரை வழங்கப்பட்டது.

8.5.2003 அன்று அருட்தந்தை தேவசகாயம்பிள்ளை மற்றும் அருட்தந்தை ஸ்ரீபன்ராஜ் அடிகளாருடன் திருப்பலி ஆரம்பமானது. குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை என்ற மையக்கருத்துடன் அருட் தந்தை ஸ்ரீபன்ராஜ் அடிகளார் மறையுரை நிகழ்த்தினார். 9.5.2003 அன்று அருட்தந்தை தேவசகாயம்பிள்ளை அருட்தந்தை றெஜினோல்ட் அடிகளாருடன் வேஸ்பர் ஆரம்பமானது. நற்கருணை ஒன்றிப்பின் சமூகம் என்ற மையக்கருத்துடன் அருட்தந்தை றெஜினோட் அடிகளார் மறையுரை வழங்கினார். 10.05.2003 அன்று திருவிழா திருப்பலி ஆரம்பமாகியது. செபமாலை அன்னையில் நாம் கொண்டிருக்கும் விசுவாசம் பற்றிய மறையுரை அருட்தந்தை றெஜினோல்ட் அடிகளாரால் வழங்கப்பட்டு இறுதியில் திருச்சுரூப பவனியும் திருச்சுரூப ஆசீருடனும் திருவிழா நிறைவெய்தியது.

அ. அலெக்சாந்தர், தலைவர், ஆலயசபை



## பொற்கேணியில் புதிய ஆலய திறப்பு விழா

புல்லாச்சி பொற்கேணி புனித கார்மேல் அன்னை ஆலயம் 16.07.2003 மன்னார் மறைவட்ட ஆயர் அவர்களினால் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. ஆயர் தலைமையில் கார்மேல் அன்னை திருவிழாத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## சமாதான நீதவானாக பதவியேற்பு



உமநகரி நானாட்டானிலுள்ள உமநகரியைச் சேர்ந்த திரு.எஸ். எமிலியானுஸ்பிள்ளை என்பவர் மன்னார் மாவட்டத்துக்கான சமாதான நீதவானாக 18.06.2003ம் திகதியன்று மன்னார் மாவட்ட நீதவான் ஜெனாப் எஸ்.எம்.எம். அப்துல்லா அவர்களின் முன்னிலையில் சத்தியப்பிரமானம் செய்துகொண்டார்.

இவர் காலம் சென்ற சூசைப்பிள்ளை கிறிஸ்ரீனா ஆகியோரின் மகனும், நானாட்டான் மகா வித்தியாலயம் புனித சூசையப்பர் கல்லூரி அனுராதபுரம் ஆகியவற்றின் பழைய மாணவனுமாவார்.

விளையாட்டுத் துறையில் கூடிய ஆர்வம்கொண்ட இவர் பொது சேவையிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்வார். அத்துடன் நானாட்டான் பிரதேச சபையின் உத்தியோகத்தரான இவர் மன்னார் மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவருமாவார்.

## மறைக்கல்வி நிலையச் செய்தி மடல்

### 1. விவிலியப் போட்டி நிகழ்வு - 2003

வழமைபோல இவ்வருடமும் விவிலிய (பேச்சு, கட்டுரை, சித்திரம், பாட்டு, கவிதை) போட்டி நிகழ்வுகள் பாடசாலை ஆவணிமாத விடுமுறையின்போது இடம்பெறும்.

கருப்பொருள் "பணிவாழ்வு"

பங்கு மட்டத்திலும், மறைக்கோட்ட மட்டத்திலும் இறுதிப்போட்டி மறைமாவட்ட மட்டத்திலும் நடைபெறும். பங்கு மட்டத்தில் ஆவணி 31ம் திகதிக்கு முன்னர் நடாத்தி முடிக்கப்பட வேண்டும். போட்டிகள் ஒவ்வொன்றிற்கும் ஐந்து பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். தரமான ஆக்கங்கள் மன்னாவில் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். இப்போட்டியின் நோக்கம் தகுதி வாய்ந்த மாணவர்களைத் தெரிவுசெய்வது மட்டுமல்ல, எமது மறைமாவட்டத்தின் முக்கிய நிகழ்வுகள் பற்றிய அறிவை அனைவரும் பெற்று, பயனடைய வேண்டும் என்பதேயாகும்.

### 2. மறையாசிரியர் தேர்வு (1,2,3) 2003

இவ்வருடமும் இத்தேர்வு கார்த்திகை மாதம் 22ம் திகதி 4 தேர்வு நிலையங்களில் ( மன்னார், முருங்கன், ஆட்காட்டிவெளி, வவுனியா) நடைபெறும். தற்போது இதற்கான விண்ணப்பப் படிவங்கள் திருமறைப்பணி நிலையத்தினால் கோரப்படுகின்றன.

#### இத்தேர்விற்கான அடிப்படைத் தகுதிகள்

பங்கில் அல்லது பாடசாலையில் மறையாசிரியராக பணியாற்றிக் கொண்டிருக்க வேண்டும்.
1ம் தேர்வு சித்தி பெற்றவர் மட்டுமே தேர்வு 2ற்கு தோற்ற தகுதியுடையவராவார்.
தேர்வு 2ற்கு தோற்றியவர்கள் அடுத்த வருடமே தேர்வு மூன்றிற்கு தோற்றலாம்.
இவ்வருடம் புதிய பாடத்திட்டத்திற்கமையவே தேர்வுகள் நடைபெறும்.
தேர்வு 1ற்கான புத்தகங்கள் மட்டுமே எம்மிடம் விற்பனைக்கு உள்ளன.
2ம் 3ம் தேர்வுப் புத்தகங்கள் விரைவில் பெற்றுக்கொள்ளலாம்.
தேர்வுக்கான விண்ணப்பப் படிவம் (கட்டணம் உட்பட ரூபா 20) விவிலியப் போட்டி, மறையாசிரியர் தேர்வு என்பவற்றுக்கான விளக்கமான கடிதங்கள், பங்குகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## பங்குத் தள சங்கதிகள்

### இசைமாலைத்தாழ்வில் புதிய ஆலய திறப்புவிழா

புதிதாகக் கட்டப்பட்ட இசைமாலைத்தாழ்வு புனித பிலிப்பு நேரியார் ஆலயம் 28.06.2003 அன்று மன்னார் ஆயர் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டு திருப்பலியும் இடம்பெற்றது. திருப்பலி முடிவில் புனிதரின் ஆசீரும் இடம்பெற்றது. பெருந்தொகையான புனிதரின் பக்தர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டனர். அதனைத் தொடர்ந்து ஆயர் தமது உரையில் ஊர்மக்களின் ஒத்துழைப்பும், மக்கள் அன்று தொடக்கம் இன்றுவரை இறைவனில் கொண்ட விசுவாசமும், பங்குத் தந்தை ஸ்ரீபன் அடிகளாரின் தன்னலமற்ற சேவையுமே இவ்வாலயம் இந்தளவிற்கு உயர்வுபெறக் காரணம் எனக் கூறினார். அன்று மாலை 7.30 மணியளவில் கலை நிகழ்ச்சியும், புனிதரின் வாழ்க்கை வரலாற்று நாடகங்களும் இடம்பெற்றன. இதனை கண்டு களிப்பதற்கு பல கிராம மக்களும் வந்திருந்தனர். எங்கள் ஆலயம் உயர்த்தப்பட உதவிக்கரம் நீட்டிய ஒவ்வொரு உள்ளங்களிற்கும் 'மன்னா' வில் எமது நன்றிகளினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

### தேவன்பிட்டியில் புனித ஞானப்பிரகாசியார் விழா

எமது பங்கின் பீடப்பணியாளரின் பாதுகாவலரான புனித ஞானப்பிரகாசியாரின் திருவிழாத் திருப்பலி 05.07.2003 அன்று பங்குத் தந்தை அருட்திரு நீ. பாக்கிய றஞ்சித் அடிகளாரால் மிகவும் சிறப்பான முறையில் நிறைவேற்றப்பட்டது. இவர் தமது மறையுரையில் புனித ஞானப்பிரகாசியாரின் முன்மாதிரிகையான வாழ்க்கை முறையை எடுத்துக் கூறினார். இந்நிகழ்வின்போது எமது துணைப்பங்கான அந்தோனியார்புரம் மற்றும் அயல்பங்கான வலைப்பாடு ஆகிய இடங்களைச் சேர்ந்த பீடப்பணியாளர் 60 பேர் கலந்துகொண்டனர். திருப்பலியின் பின்னர் 10.30 மணியளவில் பீடப்பணியாளருக்கான சினேக பூர்வமான உதைபந்தாட்ட நிகழ்வு நடைபெற்றது. இதில் அந்தோனியார்புரப் பீடப்பணியாளர் வெற்றியீட்டி தேவன்பிட்டிப் பங்கின் பீடப்பணியாளரினால் வழங்கப்பட்ட வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக்கொண்டனர். பின்னர் பி.ப.2.00 மணியளவில் மதிய உணவு பரிமாறப்பட்டது.

தகவல் - பீடப்பணியாளர், தேவன்பிட்டிப் பங்கு

### வவுனியாவில் அன்பிய வாரம்

வவுனியா பங்கில் அன்பியவாரம் கடந்த மாதம் 22.06.2003 தொடக்கம் 29.06.2003 வரை கொண்டாடப்பட்டது. முதல் நாள் நிகழ்வாக கொடியேற்றத்துடன் ஞாயிறு திருப்பலியுடன் அன்பிய வாரம் ஆரம்பிக்கப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணி ஜெயபாலன் குருஸ் அன்பிய வாரநிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். அன்பிய ஊக்குவிப்பாளர்கள் அன்றைய திருப்பலி ஒழுங்குகளை மேற்கொண்டனர். அவ்வாரம் முழுவதும் நான்கு வலயங்கள் ஒன்றிணைந்து வழிபாடுகளை ஆயத்தம் செய்தனர். அதற்கு உதவியாக வேறு வலயங்களைத் தரிசித்து வழிபாடுகளை நடாத்தினர். அன்பின் அடையாளமான பகிர்வும் இடம்பெற்றது. நோயாளர்களைத் தரிசித்தல், ஆலயங்களில் சிரமதானம் போன்ற அறப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இறுதி நாளான (29.06.2003) ஞாயிறு திருப்பலி அன்பியவார சிறப்புத் திருப்பலியாக இடம்பெற்றது.

கலிஸ்ரா ரவீந்திரன், வவுனியா.

### குஞ்சுக்குளத்தில் பாலர் பாடசாலை ஆண்டுவிழா

பெரிய குஞ்சுக்குளம் புனித மரியாள் பாலர் பாடசாலையின் இருபத்திமூன்றாவது ஆண்டு விழா ஆடி மாதம் 7ம் திகதி கொண்டாடப்பட்டது. ஆரம்பத்தில் பாலர்களின் வழிபாட்டுடன் நன்றித் திருப்பலியும், அதனைத் தொடர்ந்து வருடாந்த விளையாட்டுப் போட்டியும் நடைபெற்றது. இதற்குப் பிரதம விருந்தினராக முருங்கன் கோட்டப் பொறுப்பாளர் அருட்சகோதரி சயந்தியும், சிறப்பு விருந்தினர்களாக பங்குத் தந்தை செ. ஸ்ரீபன் ராஜா அடிகளாரும், திரு:- ச. பீற்றர் செல்வம் (கிராம சேவையாளர்) அவர்களும் கலந்து நிகழ்வினைச் சிறப்பித்தனர்.

அ. அல்வீனா, குஞ்சுக்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பொழிவு

## தாயின் சொல்லை மதி
## சிறுவர் சிந்தனைக் கதை






ஒரு ஊரில் தாயும் மகனும் மகளும் இருந்தார்கள் தந்தை இறந்து விட்டார். அந்தக் குடும்பம் கஷ்டத்திற்கு உள்ளாகியது. இருந்தும் பிள்ளைகளிருவரையும் தாய் நன்றாகப் படிக்க வைத்தாள். ஆனால் மகன் நண்பர்களுடன் சேர்ந்து தீய பழக்கத்தில் ஈடுபட்டான். தாயின் வார்த்தையைக் கேட்பதில்லை. ஆலயத்துக்குச் செல்வதில்லை. நண்பர்களுடன் சேர்ந்து சினிமா பார்க்கச் செல்வான். ஒரு நாள் அவன் நண்பர்களை சினிமா பார்க்க அழைத்தான். அவர்கள் வர மறுத்து விட்டார்கள். நான் தனியாக போகிறேன் எனக் கூறிவிட்டு சென்றுகொண்டிருந்தான். போகும் வழியில் மோட்டார் வாகனம் ஒன்றில் மோதி இரத்த வெள்ளத்தில் கீழே விழுந்து கிடந்தான். அவனைத் தூக்கி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்கள். சில நிமிடம் மயக்க நிலையில் கிடந்தான். மயக்கம் தெளிந்ததும் அம்மாவைப் பார்த்து அழுதபடி நான் இனிமேல் ஆலயத்துக்குச் செல்வேன். உங்கள் சொல்லைக் கேட்டு மதித்து நடப்பேன் என்று கூறி மனம் மாறினான்.


எனவே நாமும் பெற்றோர், பெரியோரின் சொல் கேட்டு நடக்க வேண்டும். கிறிஸ்துவின் சாட்சிகளாய் வாழ வேண்டும்.

*வே. நோயலின், தரம் - 8, மாணவியர் இல்லம், முருங்கன்.*


## புனிதர் என்றால் யார் தெரியுமா? புனிதர் என்றால் யார் தெரியுமா?



படிப்படியாகவே வெற்றியை நாடுவர்



ஒவ்வொருவரினதும் தனித்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்



மடையர்போல் சில தருணங்களில் தோன்றுவார்கள்



தம் இதயத்தில் இறைவனைச் சிந்திப்பார்கள்

## சிறுவர் தொடர் கதை

# சிவந்த மணல்

அங்கம் 10

### புனித அருளானந்தர்



37. மே மாத இறுதியில் புளியாலை நோக்கிப் பயணமானார். அச்சமயத்தில் அப்பாளையத்தின் தலைவராக இருந்த சொக்குத் தேவன் என்பவர் இறைபக்தி மிக்கவர். எனவே தம் பகுதியிலே மறைப்பணி ஆற்ற நம் புனிதருக்கு அனுமதி அளித்தார். நம் புனிதரின் மறைப்பணியும் தொடங்கியது. தலைக்கிராமமான முனியூரில் இருந்தார் நம் புனிதர். மறவ நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த கிறிஸ்தவ மக்கள் முனியூரை நோக்கி வந்த வண்ணமாக இருந்தனர். அவர்களுக்குத் திருவருட்சாதனங்களை நிறைவேற்றியதுடன், பல்வேறு சாதி சமய மக்களையும் மெய்மறையில் சேர்த்தார். நம் புனிதருக்கு வலக்கரமாக விளங்கியவர்கள் உபதேசிமார்கள். அவர்கள் ஒவ்வொரு இடத்திற்கும் சென்று மக்களைக் கூட்டிச் சேர்த்து நற்செய்தி வழங்கினர். விசுவாச மந்திரத்தை பக்தியுடன் சொல்லி, மக்களின் நோய்களைக் குணப்படுத்தியதுடன், அவர்கள் மனதையும் பக்குவப்படுத்தி, பின் நம் புனிதரை அழைத்து திருமுழுக்கு அளிக்க ஏற்பாடு செய்தனர்.

38. வரம் கேட்கும் சிறு நகரம். ஆம் நம் புனிதரின் போதனையால் மனந்திரும்பியவர்களில் சேதுபதியின் சிற்றரசர்களில் ஒருவரான தடியத்தேவரும் ஒருவராவார். அரச வம்சத்தில் பிறந்தாலும், உண்மையைத் தேடியவர். அதை அடைவதில் அஞ்சா நெஞ்சுடன் உறுதியாய் இருந்தவர். ஆனால் இவருக்கு மனைவியர் ஐவர். மேலும் தீராத நோயினால் பீடிக்கப்பட்டு மருத்துவர்கள் அளித்த மருந்தினால் யாதொரு பயனும் காணாது படுத்த படுக்கையாய் இருந்தவர். இந்நிலையில் நம் புனித சந்நியாசியான அருளானந்தரின் உதவியை நாடினார். நம் புனிதர் நேரே வரமுடியாவிட்டாலும், அவரது சீடர் ஒருவர் வந்து தம்மைக் குணமாக்கினால் போதும் என்று வேண்டினார், அப்பாளையத் தலைவரான சிற்றரசர் தடியத்தேவர்.

39. தடியத்தேவரைச் சந்திக்க உடனே செல்லவில்லை நம் புனிதர். முதலில் அவரது நல்லெண்ணத்தை அறிய வேண்டுமல்லவா. எனவே முனியூரிலிருந்து தம் சிலுவை நாயக்கரை சிறுபாளைக்கு அனுப்பினார். அவர் சென்று, மறைபோதனை செய்து நற்செய்தியை வாசித்து, விசுவாச மந்திரம் சொன்னபோது படிப்படியாக தடியத்தேவரின் உடல் நோய் நீங்கி எழுந்து நடக்கின்ற இறையருளின் புதுமையைப் பெற்றார். எனவே நாயக்கர் திரும்புமுன் தானும் மெய்மறையில் சேர விரும்புவதாகக் கூறினார்.

40. சேதுபதி மன்னருடைய அரசவையில் செல்வாக்குடைய தடியத்தேவர் மனந்திரும்பி மெய்மறையில் சேர்ந்தால், ஒரு வேளை சேதுபதி மனந்திரும்பவும் வாய்ப்புண்டு. இதன் விளைவாக மறவநாடு முழுவதும் மெய்மறைக்கு மனந்திரும்பலாம்: அவ்வாறு இந்த நல்வாய்ப்பை நழுவ விட்டால் தூய ஆவியின் தூண்டுதலுக்குச் செவிசாய்க்காத குற்றத்திற்கு தான் ஆளாகலாம் என்ற எண்ணம் நம் புனிதருக்கு ஏற்பட்டது. அதே நேரத்திலே தடியத்தேவரின் மனமாற்றத்தினால் சேதுபதி மன்னன் கோபம் கொள்ளலாம், பாதகமான சூழ்நிலை ஏற்பட்டு அவரது மறைப்பணி தடைசெய்யப்படலாம், கிறிஸ்தவர்கள் துன்பத்திற்குள்ளாகலாம் என்ற எண்ணம் நம் புனிதருக்கு ஏற்பட, இது பற்றி தீவிரமாக ஆராய்ந்த பிறகே முடிவு எடுக்க நம் புனிதர் விரும்பினார். இறுதியில் கலந்தாலோசித்து, தடியத்தேவருக்கு திருமுழுக்கு கொடுப்பதென முடிவு செய்தார். அதன் காரணமாக தடியத் தேவரைச் சந்திக்கப் பயணமானார். ஆம் வேள்வித் தீ மூட்டப்பட்டுவிட்டது! (தொடரும்)

## படிச்சா சிரிப்பு வரும்



"நான் டாக்டருக்குப் படிக்கப் போறது எங்கப்பாவுக்குப் பிடிக்கலை"
"ஏன்?"
"மற்ற உயிரோட விளையாடுறது எங்கப்பாவுக்குப் பிடிக்காது!"



'பாட்டுப் பாடினதுக்காகவா உன் கணவரை அடிச்சே?"
"பின்ன... 'அச்சம் என்பது மடமையடா'னு என்கிட்ட பாடினா கோபம் வராதா?"



"வறுமைக் கோட்டுக்கு மேல இருந்த நீங்க, எப்படி கீழ வந்தீங்க?"
"என் பையனை ஸ்கூல்ல சேர்த்த அண்டைக்கே கீழே வந்துட்டேன்."

*சிரிப்புக்கள்*

சேர்:- ஏன்டா லேற்றா வாறா?
மாணவன்:- வர்ற வழியில ஒருவர் பத்து ரூபாவைத் தொலைச்சிற்றார்.
சேர்:- வெரிக் குட் அவரின் காணாமற்போன பத்து ரூபாவை நீயும் நின்று தேடினியா?
மாணவன்:- இல்ல சேர், அந்தப் பத்து ரூபா மேல நின்னுக்கிட்டே இருந்தேன். (மிதித்துக் கொண்டு)

.................................

நோயாளி:- டாக்டர் ஏன் மேலே பார்க்கச் சொல்லுறீங்க
டாக்டர்:- இப்ப எங்க போகப் போறிங்கன்னு உங்களுக்குத் தெரியுதா?

ம. சர்மினி, ஆட்காட்டிவெளி, அடம்பன்.

1 வது கஞ்சன்:- எனக்கு பசித்தது அதனால் ஒரு பேப்பரில் புரியாணி என்று எழுதிவிட்டு அந்தப் பேப்பரை சாப்பிட்டு விட்டேன்.
2 வது கஞ்சன்:- அடப்பாவி ஒரே தரத்திலா..... நானாய் இருந்தால் அந்த பேப்பரை மூன்றாய்க் கிழித்து வைத்து மூன்று நேரம் சாப்பிட்டிருப்பேன்

.................................

1 நண்பி: பஸ் கண்டக்டர் ஒருவரை எனக்கு திருமணம் பேசுகிறார்கள்......... செய்து கொள்ளலாமா?
2 நண்பி: செய்து கொள்ளலாம் ஒன்றும் பிரச்சினை இல்லை ஆனால் என்ன..... உம்மை வாசல் படியில் நிற்க விடமாட்டார் உள்ளே வரும்படி நச்சரித்துக்கொண்டே இருப்பார்.

J.M.A. ரோகினி, தலைமன்னார் கிராமம்.

ஒருவன்: அண்ணே, கடையில கடிக்கவும் சூடாவும் என்ன இருக்கு
கடைக்காரன்:- கடிக்க நாயும் சூடாசுடு தண்ணியும் இருக்கு

.................................

நண்பன்:- அடே நான் தான்டா எங்க அண்ணன்ர திருமணத்திற்கு பட்டாசு கொளுத்தினேன்.
மற்றவன்: அட நான் தான்டா.... எங்க அம்மாட திருமணத்திற்கு பட்டாசு கொளுத்தினேன்.

.................................

கணவன்:- என்னுடைய பிறந்த நாளும் எனது மனைவியின் பிறந்த நாளும் ஒரே நாள்தான்
மனைவி:- எனது திருமண நாளும் எனது கணவனின் திருமண நாளும் ஒரே நாள்தான்.

சுதர்சன் பீரிஸ், சிறியகுருமடம், மன்னார்.

விருந்தாளி:- உங்க வீட்டு சாம்பார் ரொம்ப பிறமாதமா இருக்கு சாம்பார் பண்ண கைக்கு தங்க வளையல்தான போடவேணும்.
வீட்டுக்காறி:- *சீச்சீ...* என்ர கணவர் வளையலெல்லாம் போட்டுக்க மாட்டார்.

பி பெனில்டஸ் தற்குரூஸ், தோட்டவெளி, மன்னார்.

# கவிதைப் பூக்கள்

### கற்றுக் கொள்

நன்மை செய்யக் கற்றுக்கொள்
நலமாய் வாழக் கற்றுக்கொள்
உண்மை பேசக் கற்றுக்கொள்
உயர்வாய் வாழக் கற்றுக்கொள்
துயரைப் போக்க கற்றுக்கொள்
துணிந்து செயற்படக் கற்றுக்கொள்
உழைத்து வாழக் கற்றுக்கொள்
உலகை ஆழக் கற்றுக்கொள்
இனிதாய்ப் பேசக் கற்றுக்கொள்
இன்பம் பயக்கக் கற்றுக்கொள்
வறுமை வந்தால் வாழ்வினில்
தாங்கி வாழக் கற்றுக்கொள்
அன்பாய் வாழக் கற்றுக்கொள்
பண்பாய்ப் பழகக் கற்றுக்கொள்
அழியாக் கலையை வாழ்வினில்
அறிந்து பயின்றிடக் கற்றுக்கொள்.

அ. சுஜி, நறுவிலிக்குளம்.

### மனிதம்

மனிதம் மலர்ந்திட மறுத்திடும் கயவர்
மண்ணிலே உள்ளார் என்பதை நினைக்க
மனங்கள் கசிந்திடும் மாந்தர்களுக்கு
மன்னர்களின் தீர்ப்பு சரியானதா?

உலை வைப்பதற்கு உழைக்கச் சென்று
உள்ளம் தன்னில் கள்ளம் அற்றவரின்
உயிரை எடுத்த கல் நெஞ்சத்தினரும்
உலகில் வாழும் தகுதியுடையரா?

என்ன நேர்ந்தாலும் இறைவன் இருக்கிறார்
மன்னன் யேசு வார்த்தை இருக்கிறது
நீதியுள்ள இறைவன் எமக்கு
நீதியை அளிப்பார் ஆறுதல் அடைவோம்.

S. பீற்றர் றொக்ஷலா,
பொன்தீவு கண்டல், முருங்கன்

### அன்பு

அன்பு என்ற சொலலுதான்
அகிலமதில் நிலைக்குமே
துன்பம் வந்த போதிலும்
அன்பு இங்கு தூய்மைதான்

துன்பம் போக்கச் செய்யுமே
பாரில் இந்த அன்புதான்
மோதல் வந்த போதிலும்
அன்பு உண்டு தெரியுமா?

கருணை கொண்ட எவருமே
கர்த்தர் தன்னை அறிவாரே
முக்தி அடைய விருப்பமா?
பக்தி தன்னை வளர்த்திடு.

ம. சுகிர்தா,
தரம் 10, பேசாலை

### ஒருமைப்பாடு

தேசம் வளர்ப்போம் வாருங்கள்
சிந்தை இணைந்தே சேருங்கள்
நேசம் சொல்லும் வழியெல்லாம்
தேசம் செழிக்கும் வழியாகும்
பிறந்த மதத்தின் பெருமையினைப்
பேசிப் பேசிக் கழிக்காமல்
சிறந்த பணிகள் செய்திடுவோம்
செயலில் வெற்றி எய்திடுவோம்
ஒற்றுமையாக வாழ வழி
வேதமே என்று விளங்கிடுவோம்.
வேதம் கூறும் வழியினை
கேட்டு வாழ்வதே நலமாகும்
ஒருமைப்பாட்டால் வேத நலம்
உயர்ந்து வளரும் நாள்தோறும்
ஒருமைப்பாடே நல்ல வழி
ஒருமைப்பாடே வெல்லும் வழி

இ. தர்சினி, கோமரசங்குளம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வு தரும் வார்த்தை

# யேசுவின் கலிலேயா – ஜெருசலேம் அனுபவமும் எமது வாழ்வும்

அருட்சகோதரர்
ஸ்ரனிஸ்லோஸ், F.S.C
அதிபர், புனித சவேரியார்
ஆண்கள் ம. ம. வித்தியாலயம்,
மன்னார்.





இயேசுவினுடைய வாழ்க்கை வரலாற்றை புனித மாற்கு நற்செய்தியின் பின்னணியில் பார்க்கும்போது அவரது வரலாற்றை இரண்டு பிரிவுகளாக நோக்கலாம்.

1. கலிலேயா ஊடாக இயேசுவின் பயணம்.
2. ஜெருசலேம் நோக்கி இயேசுவின் பயணம்.

### 1. கலிலேயா ஊடாக இயேசுவின் பயணம்

கலிலேயாவில் இயேசுவின் சீடர்கள் இயேசுவுடன் கண்ட அனுபவங்கள் அவர்கள் அதே இயேசுவுடன் ஜெருசலேமில் கண்ட அனுபவத்தில் இருந்து முற்றிலும் வேறானதாக இருப்பதை நாம் காணலாம். கலிலேயாவில் சீடர்கள் இயேசுவுடன் கண்ட அனுபவங்கள் சீடர்களுக்கும் இயேசுவுக்கும் மனநிறைவு அளிப்பதாகவும் வெற்றியளிப்பதாகவும் கைமாறு தருவதாகவும் புகழ் தருவதாகவும் பலரது பாராட்டைப் பெற்றுத்தருவதாகவும் அமைந்தது. சுருங்கக் கூறின் இயேசுவினதும் அவரது சீடர்களினதும் அனுபவமானது இறைவனது கரத்தை, செயலை, வெளிப்பாட்டை அவர்களது வாழ்வில் இலகுவில் அடையாளம் காணக்கூடியதாக அமைந்தது. கலிலேயாவில் அவர்களது வாழ்க்கை அவர்களது கட்டுப்பாட்டின்கீழ்க் காணப்பட்டது. இறையரசை கலிலேயாவில் கொண்டுவருவதற்கு அவர்கள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றியளித்ததுடன் அவற்றை தியாகங்கள் எதுவுமின்றி உடல், மன நோவின்றி சமுதாய அழுத்தங்கள் எதுவுமின்றி இலகுவில் ஆரம்பிக்கப்படக் கூடியதாகவும் ஏனைய மக்களும் இறைவனுடைய வல்லமையை - இறையரசை இயேசுவினதும் அவரது சீடர்களினதும் செயற்பாட்டின் ஊடாகக் கண்டுணரக்கூடியதாகவும் இருந்தது. இதனால் கலிலேயாவில் இயேசுவின் சீடர்கள் குருவினுடைய வெற்றியில் குதூகலித்தனர். சாப்பிடக்கூட நேரமின்றி தமது வெற்றிப்பணியில் உற்சாகத்துடன் ஈடுபட்டனர். சமூகமும் அவர்களை வரவேற்றது. இயேசுவுக்கும் சீடர்களுக்கும் பெரும் மதிப்பும் அளித்தது.

இவ்வாறான சீடர்களினதும் கலிலேய அனுபவம் இரண்டு குருடர்களுக்கு பார்வையளித்ததுடன் மாற்கு நற்செய்தியின்படி முடிவுக்கு வருகின்றது. இந்த இரண்டு சம்பவங்களும் மாற்கு நற்செய்தியில் மட்டுமே காணப்படுகின்றது. இவ்விரண்டு புதுமைகளும் சீடர்களினது கலிலேயா, ஜெருசலேம் அனுபவங்களை இணைப்பதாகவும் ஜெருசலேம் நோக்கிய பயணத்திற்கு சீடர்களை ஆயத்தப்படுத்துவதாகவும் அமைகின்றது. இதில் முதலாவது புதுமை பெத்சைதாவிலும் ஜெரிக்கோவிலும் இடம்பெறுகின்றது. (மாற்கு 10 :46 - 52) இதில் முதலாவது குணமடைதல் இரண்டு கட்டங்களிலும் இரண்டாவது குணமடைதல் (பார்வைபெறுதல்) ஒரே முறையிலும் இடம்பெறுவதை மாற்கு கோடிட்டுக் காட்டுகின்றார். இதில் இரண்டாவது சந்தர்ப்பத்தில் குணமடைந்த பாத்திலேமியு என்ற பார்வையற்ற பிச்சைக்காரனுக்குரிய அடையாளமான போர்வையை விட்டெறிந்து விட்டு இயேசுவை ஜெருசலேம் நோக்கிய பயணத்தில் பின் தொடர்வதையும் மாற்கு உள்நோக்கத்துடன் படம்பிடித்துக்காட்டுகின்றார். இவ்விரு புதுமைகள் குணமாக்கல்கள் மூலம் இயேசுவின் சீடர்களாக இருக்க விரும்புகிறவர்கள் இயேசு யார் என்பது குறித்து சரியான பார்வை பெறவேண்டும். சரியான பார்வை பெற்றால் மட்டும் போதாது, அவரது ஜெருசலேம் பயணத்தில் பங்குபற்றுதல் வேண்டும். இதற்கு வேறு வழிகள் குறுக்கான பாதைகள கிடையாது என்பதையும் இவ்விரு புதுமைகள் மூலம் மாற்கு ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றார். ஜெருசலேமில் தனக்கு நிகழவிருப்பதை சீடர்களுக்கு உணர்த்த விரும்பிய இயேசு தான் யார் என்ற கேள்வியை சீடர்களை நோக்கி வினவியபோது மூத்த அப்போஸ்தலரான பேதுருவானவர் *நீர் மெசியா கடவுளின் மகன்* என்று சரியான விடையளித்தபோதிலும் அவர் அதன்பின் பாவிகளிடம் கையளிக்கப்பட்டு கொடூர நிந்தைகளுக்கு உள்ளாகி இறுதியில் சிலுவை மரத்தில் மிகவும் இழிவான சாவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை இயேசு அறிவிக்கின்றார். இதை முற்றுமுழுதாக மறுத்ததன் மூலம் பேதுருவானவர் இயேசு மட்டிலும் அவரது பணி மட்டிலும் சரியான பார்வை பெறவில்லை என்பதையும் இயேவின் கலிலேயாப் பயணத்தை ஏற்றுக்கொண்ட மிக நெருங்கிய அப்போஸ்தலர்கள்கூட இயேசுவின் ஜெருசலேம் நோக்கிய பயணத்தில் அவரை பின்பற்ற அவரது சீடராக இருக்க பின்வாங்கியதையும் காணலாம். முதலாவது (பெத்சைதாவில்) குணமடைந்தானே அதேபோல இயேசுவின் சீடர்களும் இயேசுவைப்பற்றிய சரியா தெளிவை அவரது சிலுவை மரணம், உயிர்ப்பு ஆகியவற்றின் பின்பே பெறுவார்கள் என்பதையும் மாற்கு அழகாக படம்பிடித்துக்காட்டுகின்றார்.

### 2. ஜெருசலேம் நோக்கிய இயேசுவின் பயணம்

இந்த இரண்டாவது கட்டத்தில் இயேசுவை பின்பற்ற விரும்புபவர்கள் அவர்களது குருவைப்பற்றி அவரோடு சேர்ந்து துன்பங்களை அனுபவித்து சிலுவையில் அறையப்பட அழைக்கப்படுகின்றார்கள். கலிலேயாவிலோ இயேசு பொதுவாழ்வில் தான் நினைத்ததை சாதிக்க முடிந்தது. வாழ்க்கை அவரது திட்டத்திற்கும், சித்தத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டதாக இருந்தது. அனைத்தும் அவரது விருப்பத்திற்கு ஏற்றதுபோல் நடந்தேறியது. இயேசுவே அனைத்தையும் கொண்டு நடத்துபவராய் காணப்பட்டாா. அவரே அனைத்திற்கும் எஜமானராய் காணப்பட்டார். அவரே சீடர்களை அழைத்தார். பலரை குணமாக்கினார், பேய்களை ஓட்டினார், எதிரிகளுடன் தர்க்கப்பட்டார், அனைத்தும் அவருக்கே கீழ்ப்படிந்தன. அனைத்தும் அவரால் அவர் விருப்பப்படி நடாத்தப்பட்டன.

ஆனால் ஜெருசலேமில் அவர் துன்பப்பட வேண்டிய களத்தில் ஏனையோரால் நடாத்தப்படுபவராக காணப்படுகின்றார். ஒரு ஆயனாக, எஜமானாக வெற்றிநாயகனாக காட்சியளித்த யேசு ஜெருசலேமிலே ஒரு செம்மறி ஆடுபோல தன்னைத் தன் பகைவரிடம் கையளிக்கின்றார். அவர் கையளிக்கப்பட்டார் என்ற வசனம் நற்செய்தியில் 22 முறைகள் பயன்படுத்தப்படுவதை நாம் காணலாம். இதனது பொருள் அனைத்தையும் கலிலேயாவில் கொண்டு நடத்திய இயேசு இங்கு ஜெருசலேமில் ஏனையவர்களால் கொண்டு நடத்தப்படுகின்றார் என்பதாகும். பல முடிவுகளை எடுத்து பலருக்கு வழிகாட்டிய இயேசு இப்போது தன்மட்டில் பல முடிவுகளை எடுக்கவும் அவர்கள் அவற்றை செயற்படுத்தவும் பலரால் வழிநடத்தப்படவும் தன்னை கையளிக்கின்றார்.

இவ்வாறு தனது வாழ்க்கை முறை கலிலேயாவில் நடைபெற்றதிலிருந்து முரணானதாக ஆனால் தனது அன்புத்தந்தையின் சித்தத்தின்படி மாற்றமடையப் போகின்றது என்பதை உணர்ந்த இயேசு தனது அன்புச் சீடர்கள் இந்த தலைகீழ் மாற்றத்தை ஏற்கத் தயாராக இருக்கின்றனரா என்பதை பார்ப்பதற்கு ஒரு முக்கியமான கேள்வியை கேட்கின்றார். *என்னை யார் என்று மக்கள் கூறுகிறார்கள்?* அதற்கு சீடர்களோ குழந்தைக் குஞ்சுகளைப் போன்று ஸ்நாபக அருளப்பர் என்றும் எரேமியாஸ் என்றும் இறைவாக்கினர்களில் ஒருவர் என்றும் மக்கள் கூறுவதாக விடையளித்தனர். அதற்கு யேசு நீங்கள் எனது சீடர்கள் என்னை யார் என்று கூறுகின்றீர்கள்? என்று கேட்டார். அதற்கு பேதுருவானவர் வழமைபோல் முந்தியடித்துக்கொண்டு நீரே கடவுளின் மகன் மெசியா என்று பதில் கூறினார். இம்மறுமொழியை பேதுரு தாமாகக் கூறவில்லை என்பதை உணர்த்த விரும்பிய இயேசு பேதுரு இந்த உண்மையை உன் தசையும் இரத்தமும் வெளிப்படுத்தவில்லை மாறாக விண்ணகத்தில் உள்ள எனது தந்தையே வெளிப்படுத்தியுள்ளார் என்று கூறினார். இயேசுவோடு உண்டு குடித்த அன்புச் சீடர்கள்கூட இயேசுவை யார் என்று முழுதாக அறியவில்லை, சரியான பார்வை பெறவில்லை என்பதை மாற்கு இராயப்பரின் அறிக்கையின்பின் நடைபெற்ற சம்பவங்கள் மூலம் வெளிக்கொணர்கின்றார்.

தனது தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுவதில் இயேசு காட்டிய பாதை கலிலேய அனுபவம்போல் மேலே மேலே தொடர்ந்தும் வெற்றிப்பாதையில் செல்லாது. இனிமேல் இயேசு காட்டப்போகும் பாதையில் முக்கிய திருப்புமுனை ஏற்பட்டு அப்பாதை இயேசுவையும், அவரது சீடர்களையும் ஜெருசலேம் நோக்கி சிலுவை மரணம் மட்டும் பல துன்பங்கள், துயரங்கள், உடல் உள வேதனைகள், சமூக அழுத்தங்கள் எல்லோராலும் கைவிடப்படும் நிலை போன்ற சொல்லொனாத் துன்பங்கள் ஊடாக இட்டுச்செல்லவுள்ளது. கலிலேயாவில் யேசுவின் வழியைப்பின்பற்றிய சீடர்கள் ஜெருசலேம் நோக்கிய பயணத்தில் இயேசுவைப் பின்பற்றுவார்களா? பேதுரு சீடர்களின் தலைவர் மிகவும் தெளிவாக ஆணித்தரமாக இல்லை என்று ஆரம்பத்தில் விடையளிக்கின்றார்.

இயேசு தனது பாடுகளையும், மரணத்தையும் முன்னறிவித்தபோது இயேசுவைப் பின்தொடர்வது பற்றியும் தொடர்ந்து சீடராக இருப்பதுபற்றியும் (மாற்கு 8 :31-33) இதன் மூலம் இயேசு கட்வுளின் மகன் மெசியா என்று சரியான பதிலை பேதுரு கூறியிருந்த போதும் மெசியா என்பதன் உட்பொருளை (கலிலேயா, ஜெருசலேம்) முழுதாக அறியாதவராக, இயேசு மட்டில் இன்னும் சரியான பார்வை பெறவேண்டியிருப்பவராக இருப்பதை மாற்கு கோடிட்டுக்காட்டுகின்றார். பேதுருவுக்கும் ஏனைய சீடர்களுக்கும் மெசியா எனப்படுபவர் நிச்சயமாக பாடுகள் படவோ இழிவான சிலுவைச் சாவிற்குட்படவோ முடியாதவராய்க் காணப்பட்டார். கலிலேயாவில் இயேசுவிற்குப் பின்னால் அவர் பாதையில் நடந்து சென்ற இராயப்பர் (ஜெருசலேமைக் கேள்விப்பட்டதும்) பாடுகள் மரணத்தைக் கேள்விப்பட்டதும் முதல் அதை ஏற்றுக் கொள்ளாதவராக இயேசுவிற்குமுன் நடந்து அவருக்கு பாதை காட்ட முற்படுகிறார். இதற்குப் பதிலடி கொடுத்த இயேசு மிகவும் கடினமான வார்த்தைப் பிரயோகத்தினால் சாத்தானே பின்னாலே போ என்கிறார். எப்பாதையை நான் தெரிவு செய்ய வேண்டும் என்று எனக்கு நீ சொல்லாதே. தொடர்ந்தும் எனக்குச் சீடனாக இருக்க விரும்பினால் என்னுடைய காலடியில் எனக்குப் பின்னாலே உனது நாளாந்த சிலுவையை சுமந்துகொண்டு வா என்ற பாணியில் தனது பாடுகள், மரணம் பற்றி மீண்டும் அறிவிக்கின்றார். (மாற்கு 8 :31-34)

இயேசு தனது பாடுகள் மரணம் உயிர்ப்புப் பற்றி மீண்டும் மீண்டும் தனது சீடர்களுக்கு எடுத்துக் கூறியும் (மாற்கு 8 :31-33) அது பற்றி விளங்காதவர்களாக - ஏற்றுக்கொள்ளாதவர்களாக அவரது சீடர்கள் தங்களுக்குள் பெரியவர் யார் என்பதைப்பற்றி ஒருவரோடு ஒருவர் வாதாடிக்கொண்டு வந்தனர். மீண்டும் இயேசு தனது சீடர்கள் தான் எப்படிப்பட்ட மெசியா என்பதை சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதை உணர்த்த ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும் (மாற்கு 9 :35-37) என்று கூறி சிறு பிள்ளையையும் உதாரணம் காட்டினார்.

இயேசு தனது பாடுகள் மரணம் பற்றி 3 முறை சீடர்களுக்கு தெரிவித்த போதும் (மாற்கு 10 :33-34) அதனை அவர்கள் விளங்கிக்கொள்ள வில்லை. ஏனெனில் இயேசுவின் சீடர்களில் அருளப்பரும், யாகப்பரும் வரவிருக்கும் இறையரசில் தமக்கு முதலிடங்களைத் தரச்சொல்லி இயேசுவைக் கேட்டனர். (மாற்கு10 :35-37)

எனவே மாற்கு நற்செய்தியின்படி இயேசுவின் சீடனாக இருக்க விரும்புபவன் எவனோ அவன்

1. தன்னலம் துறத்தல் வேண்டும்
2. தனது சிலுவையைத் தூக்கிக்கொண்டு
3. இயேசுவைப்பின்பற்ற வேண்டும்

ஆனால் இயேசுவின் சீடர்கள் ஜெருசலேம் நோக்கிய பயணத்தில் அவர்களது ஆரம்ப எத்தணிப்பில் சீடர்களாய் இருப்பதில் இருந்து மிக மோசமாய்த் தவறி விடுகின்றனர். அவர்கள் அனைவருமே இயேசுவை விட்டுவிட்டு ஓடிவிடுகின்றனர். சீடர்களில் இளைஞன் ஒருவன் தான் போர்த்தியிருந்த துணியையும் விட்டுவிட்டு ஆடையின்றி தப்பி ஓடினான். (மாற்கு14 :50-52) எமது வேத நூலின்படி ஆடையை இழப்பது ஒருவன் தனது மானத்தை, மனிதத்தை இழப்பதாகும். எமது முதல் பெற்றோரைப்போன்று இயேசுவின் சீடர்களும் இயேசுவைவிட்டு ஓடியபோது அந்த இரவிலேயே அனைத்தையும் இழந்துவிட்டனர் என்பதை மாற்கு எடுத்துக்காட்டுகின்றார்.

மாற்கு நற்செய்தியானது ஒருமனிதனின் வாழ்வில் காணக்கூடிய துன்பத்திற்கும், சீடத்துவத்திற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பை விளக்குவதாக அமைகின்றது. இராயப்பரும், ஏனைய சீடர்களும் இயேசுவின் உண்மையான சீடர்களாவதற்குமுன் எவ்வளவு கடினமான மனமாற்றமடைய வேண்டியிருந்தது என்பதை சித்தரிக்கின்றார்.

### எமது சிந்தனைக்கு

இறை யேசுவின் சீடர்களாக அழைக்கப்பட்டுள்ள நாம் அவரது சீடர்களாக இருப்பதற்கு இரண்டு விடயங்களை செய்யவேண்டியவர்களாக உள்ளோம்.

- யேசுவைப்பற்றி தெளிவான ஆழமான அனுபவத்தை எமது செபவாழ்வின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும். இதில் செபம் என்பது எமக்குத் தேவையானவற்றைக் கேட்பது மட்டுமன்று - இறைவன் பேசுவதை இறைவன் வெளிப்படுத்துவதை எமது உள்ளத்தின் ஆழத்தில் இருந்து கேட்டு அமைதியாக எமது சித்தத்தினை இறைவனது சித்தத்தில் இணைப்பதே செபமாகும்.

நாம் வாழும் பகுதிகளில் இங்கே, இப்பொழுதே, மற்றவர்கள் காணும் வகையில் சாட்சிய வாழ்வு வாழ அழைக்கப்படுகிறோம். எமது ஆழமான செப அனுபவத்தின் மூலம் யேசு நிறைவான அன்பும் மன்னிப்பும் உருவானவர் என்ற தெளிவான பார்வையை பெற்ற நாம் அதே அன்பையும் மன்னிப்பையும் நாம் வாழும் இடங்களில் எம் மூலம் மற்றவர்கள் அனுபவித்து கடவுளின் அரசை (அன்பு, மன்னிப்பு, நீதி, மகிழ்ச்சி, அமைதி) போன்ற இறையரசின் மதிப்பீடுகளை இங்கே இப்பொழுதே காண்பதற்கு எமது செயல்கள் இட்டுச்செல்ல வேண்டும்.

- நாம் வாழும் பகுதிகளில் இறையரசிற்கு சாட்சிய வாழ்வு வாழும் பொழுது அதாவது அன்பு, மன்னிப்பு, நீதி, மகிழ்ச்சி, அமைதி போன்ற இறையரசுப் பண்புகளை கட்டியெழுப்ப முற்படும்போது, கலிலேயா அனுபவம் போன்று எமது கட்டுப்பாட்டில் யாவும் இருக்கும் போது இறைவனைப்புகழும் நாம் அவரது சித்தத்தை ஏற்றுக்கொள்ளும் நாம் ஜெருசலேம் அனுபவம் ஏற்படும்போது (துன்பங்கள், துயரங்கள், புறக்கணிப்பு) மனம் சோர்ந்துவிடாது பரிசுத்த ஆவியின் வல்லமையோடு இறைவனின் சித்தத்தை அவற்றில் கண்டு இறைசித்தத்தை நிறைவேற்றி முடிக்கும்வரையும் எமது நாளாந்த சிலுவையைச் சுமந்து செல்வோம்.

- இயேசுவின் ஜெருசலேம் பயணத்தில் அவரைக் கண்ணால் கண்டு, அவர் பேசியதை நேராகக் கேட்டு அவர் செய்த புதுமைகளை அனுபவித்து அவரோடு உண்டு உறங்கிய அவரது அன்புச் சீடர்கள் பிரதியுபகாரமாய்ச் செய்தவை எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. காட்டிக்கொடுத்தல், மறுதலித்தல், கைவிட்டு ஓடுதல் என்பவையே அவை. ஆனால் பெந்தக்கோஸ்து தினத்திலிருந்து முன்பு ஒருபோதும் இல்லாதவாறு இறையரசை தாம் வாழும் பகுதிகளில் கட்டியெழுப்ப முழுமூச்சாக உழைத்தனர். ஏன் தமது உயிரையும் கொடுத்தனர். — எனவே எமது வாழ்விலும் துன்பங்கள், துயரங்கள் வரும்போது இறையரசை எமது இல்லங்களிலும், சமூகத்திலும் கட்டியெழுப்ப எமது மனித பலம் மட்டும் போதாது. அவ்வேளைகளில் எல்லாம் பரிசுத்த ஆவியின் வல்லமையை வேண்டி நிற்போம்.

- எமது வாழ்நாளில் இன்பம், வெற்றி, செழிப்பு, புகழ், எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படல் போன்ற தன்மைகள் வரும்போது அவற்றை இறைவனின் ஆசீர்வாதம் என்றும் எமது வாழ்நாளில் துன்பம், தோல்வி, வறுமை, இகழ்ச்சி, எல்லோராலும் புறச்கணிக்கப்படல் போன்ற தீமைகள் வரும்போது அவற்றை இறைவனின சாபம் என்றும் எண்ணும் எமது தவறான மனப்பான்மைகளை மாற்றிக்கொள்வோம். எமது வாழ்நாளில் இன்பத்திலும், துன்பத்திலும். வெற்றியிலும், தோல்வியிலும், செழிப்பிலும் வறுமையிலும் இறைவனுக்குப் புகழ் பாட நன்றி சொல்லக் கற்றுக்கொள்வோம்.

- நாம் வழிபடும் தெய்வம் இயேசு தனது வாழ்நாளில் இருமுறைமட்டுமே தனது தந்தை நேரடியாகப் பேசக்கேட்டார்.

1. திருமுழுக்கின்போது : நீரே என் அன்பார்ந்த மகன்......
2. மறுவுருவான போது : இவரே என் அன்பார்ந்த மகன் ...........

மிகுதி வாழ்நாளெல்லாம் விஷேடமாக துன்ப வேளைகளிலெல்லாம் தமது தந்தை அமைதியாக இருப்பதைக் கண்டார்.

எனவே நாம் வழிபடும் தெய்வம் நாம் கூவியழைக்கும்போதெல்லாம் எம்மைத் துன்பத்திலிருந்து மீட்டெடுக்கும் ஒரு வல்லமையுள்ள தேவன் அல்லது மாயாஜால வித்தைக்காரன் அல்ல. மிகச்சில வேளைகளில் இவ்வாறு செய்வதுமுண்டு. ஆனால் எமது வாழ்நாளில் பெரும் பகுதியில் நாம் துன்பப்படும்போதெல்லாம் அமைதியாக இருந்து எம்மோடுகூட நடந்து வரும் - எமது துன்பத்தில் பங்குபெறும் இரக்கத்தின் தெய்வமாகும். எனவே எமது வாழ்நாளெல்லாம் இறைவனின் அன்பையும். இரக்கத்தையும் ஆழமாக அனுபவிக்கவும் அவற்றை நாம் வாழும் இல்லத்திலும் சமூகத்திலும் பிறர் அனுபவிக்கும்படி நாம் வாழ இரக்கத்தின் தெய்வத்திடம் இரந்து கேட்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

மன்னா சிறுகதை

# ஓர் ஆத்மா விருந்திற்கு அழைக்கப்படுகின்றது

எஸ். வேதிர்



## இச்சிறுகதை பற்றியும் இதன் ஆசிரியரைப்பற்றியும்.....!



இது 1984ஆம் ஆண்டு தொண்டன் இதழ் நடாத்திய தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவுச் சிறுகதைப் போட்டியின்போது முதலிடம் பெற்ற கதை. நமது சமுக வாழ்வின் பாரிய பிறழ்வுகளை அப்பட்டமாக படம் பிடித்துக்காட்டும் கதை இது. இதன் ஆசிரியர் திரு. டேவிட் அவர்கள் நமது மன்னார் மண்ணின் மைந்தர். நறுவிலிக்குளத்தைச் சேர்ந்தவர். தற்போது பேசாலை மன். பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபராக பணியாற்றுகிறார். இவர் எழுத்தாற்றல் மிக்க- சமுக மேம்பாடு விழிப்புணர்ச்சி பற்றி சிந்திக்கின்ற ஓர் அற்புதமான படைப்பாளி. தனது அதீத வேலைப்பழுவினால் எழுத்துத்துறையில் இருந்து ஒதுங்கியிருக்கும் இவரை மன்னா சார்பாக அணுகினோம். எமது அன்புத் தொல்லைக்கு பணிந்து அன்போடு இக்கதையை மீள்பிரசுரம் செய்ய அனுமதி அளித்தார். மன்னா இவரிடமிருந்து இன்னும் பல படைப்புகளை எதிர்பார்த்து நிற்கிறது. (பதிப்பாசிரியர்)

கண்களை நிறைத்துவிட்ட கண்ணீர்த் திவலைகள் இமை அணைகளை ஊடறுத்து முகப்பரப்பில் முத்தமிட்ட சிற்றருவிகளாக ஊர்ந்து வழிந்து நிலத்தில் சிந்துகின்ற கோலம்... இதயக் கிடங்கில் எதையோ ப்லாத்காரமாக... யாரோ அடைத்து விட்டு நெருப்பு மூட்டி விட்ட அகோரமான... அந்திரிப்புப் போன்ற - கவலைத் திணிவுகளின் கயிறுத்திரிப்பு... தொண்டைக்குழியில் ஏதோ உருண்டையாக வந்து அடைத்து திக்குமுக்காடச் செய்கின்ற நிலை... விம்மி வெடித்து வாயால் வழிகின்ற குளறல்... வடிகட்டிய முகாரியாக... யோசேப்பு அலப்பாரித்து அழுகின்றான்...!

"என்ர செல்ல மகனே... நான் பெத்த ராசா ஒரு சொட்டுப் பாலுக்கு வழியில்லாம தொண்டை வரண்டு குடல் கருகிச் செத்தியே ராசா... உன்ர வயித்துக்கடி பரிதாபத்த சகிக்க மனம் பொறுக்காம... ஒரு மாப்பேணி வாங்கித் தாறதுக்காக... ஊருக்குள்ள ஒவ்வொரு வீடுவீடா அலைஞ்சு கெஞ்சிப் பார்த்து வெட்கின நாய்மாதிரி... ஐயோ... என்ர மகனே... நான் உனக்கு மாப்பேணி வாங்கி பால் கரச்சித்தாரன் எண்டு ஏமாத்திப்போட்டன் எண்டதாலயா... எங்கள நீ ஏமாத்திப் போட்டுப் பொயிற்றா ராசா... என்ர செல்ல மகனே... மூண்டு பொட்டைக் குட்டிக்குப் பிறகு புறந்த உன்ன எவ்வளவு செல்லமா... அப்பா வளர்க்க நினைச்சிருந்தன்... என்ர அன்பு மகனே... இனி உன்னைப்போல இன்னொரு சீவன் பெத்தெடுக்கக்கூடிய தகுதி எனக்கு இல்லையே ராசா... இப்ப நீ செத்தாப் பிறகு உனக்காக குவிக்கப்பட்டிருக்கிற சாப்பாட்டுக் கும்பத்தைப் பாரு ராசா... நீ... நீ... உன்ர... உன்ர... ஆத்துமம் இந்தச் சாப்பாடுகளை திண்டு ருசிக்க வருவியா... ராசா..." வார்த்தைகள் தடுமாறித் தடுமாறி... இறந்துபோன அன்புப் பாலகனின் பிரிவின் கதைச் சாரப் பிழ்யல் பிரசவமாக...! ஒரு மயான அமைதியே நிலவுகின்றது.

"இதென்னடா யோசேப்பு குழந்தைப்புள்ள மாதிரிக் கிடந்து சத்தம்போட்டு குழறுகிறா... இப்படிக் குமுறி அழுதாப்போல போன உசிரு திரும்பி வந்திடப்போகுதா...? மேசை ஓதுற நேரமாப்போகுது திருந்தாதி நேரம்... ஆத்துமம் வாற நேரம்.. அழாமல் கொஞ்சம் வாயை மூடிக்கொண்டு சும்மா இரு பாப்பம்... நீயொரு ஆம்பிள்ளை. இப்படியே அழுறது?" செப வழிபாட்டுப் புத்தகத்தினுள் - பொருத்தமான உரிய செபத்தின் ஆரம்பப் பக்கத்தினுள் - பெருவிரலை நுழைத்து அடையாளமிட்டவாறு முழந்தாளில் இருந்த ஊர்க்கோயில் சங்கிடுத்தம் அந்தோனிக் கிழவன் அழுதுகொண்டிருந்த யோசேப்பைப் பார்த்து இப்படிச் சொன்னார்.

குசினி வாசலில் குந்தியிருந்து தலைகுனிந்து அழுத யோசேப்பு மடியில் கிடந்த துவாய்த் துண்டால் கண்களைத் துடைத்தபடி எழுந்து அரை முழங்காலில் இருந்தான்.

பொங்கிவரும் வேதனை விம்மலில் அடக்கம் இல்லை. கூடியிருந்த சனக்கும்பல் வாய் - விட்டு அழுதுவிட்ட யோசேப்பை பரிதாபமாக நோக்குகின்ற நிலை. பெண்கள் குழுமியிருந்த பக்கமாக எழுந்து எழுந்து தணிகின்ற விம்மலின் பிலாக்கண ஓசை... ஈனக் குரலில்! அழுவதற்கே 'இசக்கம்' அற்ற யோசேப்பின் மனைவி - மேரி வெய்யிலில் கிடந்து வெம்பிய கரட் கிழங்குபோல வதங்கிக்கிடக்கிறாள் - ஆசைப்பட்டு, தவம்கிடந்து பெற்ற ஆண் மகனை பறிகொடுத்துவிட்டதனால் பரிதவித்த களைப்பு!

மனித உறவுகளின் கோர்வைகளை தரம்பிரித்துக் காண்பதற்கு அறிவு முளைவிடாத பருவமுடைய யோசேப்பின் மூன்று பெட்டைக் குட்டிகளும், சாப்பாட்டுக் குவியலை கண்களால் ருசித்து சுவைத்து வாயூறிக் கொண்டிருக்கும் சின்ன இளசுகளுடன் ஒட்டிக்கொண்டிருக்கின்றனர். விதம்விதமான பண்டங்கள் கோப்பைகளிலும் ஓலைத்தட்டுக்களிலும் நிறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு தொகையான உணவுப் பதார்த்தங்களையும் ஒரே பார்வையில் இன்றுதான் யோசேப்பின் பிள்ளைகள் முதன் முதலாகப் பார்க்கின்றனர்.

'செத்துப் போன தம்பிட ஆத்துமத்துக்கு இன்று பிச்சைச் சோறு' என்று அவர்களுக்கு புரிந்தும் புரியாத நிலையில் மனப்பாடம்!

••• ••• •••

அந்தி கருகி... இரவு துலங்குகின்ற கிராமத்து சனசந்தடி பொழுதிருக்க அடங்கிவிட்டது போன்ற அமைதி நிலவுகின்றது. கிராமத்தின் குளக்கட்டு ஓரமாக யோசேப்பின் சிறிய ஓலைவீடு.

வீட்டு முற்றத்தில் கவிழ்த்து வைக்கப்பட்ட உரல்கட்டையின்மீது வைக்கப்பட்டிருக்கும் கேஸ் லைட் புஸ்... ஸ்... ஸ்....என்ற இரைச்சலுடன் ஒளி உமிழ்கின்றது. லைட்டைச்சுற்றி களப்பாய்கள் குறுக்கும் நெருக்குமாக விரிக்கப்பட்டு ஆத்துமத்தின் வருகைக்காக - வந்தவுடன் சுவைப்பதற்காக - தயார் செய்யப்பட்டு தினுசு தினுசாக தரம்பிரித்து வைக்கப்பட்டிருக்கும் பல்சுவை உணவுப் பதார்த்தங்கள். "புண்ணியம் கிடைக்கும் மறந்திடாமல் குழந்தைப் புள்ளைகளுக்குக் குடுக்கிற மாப்பேணி ஒண்டு வாங்கி... பால் கரைச்சி வைச்சிருங்கோ" - இன்று காலையிலிருந்து உணவு... தயாரிக்கப் பொறுப்பாக நின்றவர்களிடம் யோசேப்பு கெஞ்சிக் கேட்டவாறு ஒரு ஐம்பது ரூபா நோட்டு ஒன்றையும் மடியில் இருந்து நீட்டியவாறு குலுங்கி அழுதே விட்டான்!

ஆனால் - இனிய சுவையுடன் கரைக்கப்பட்ட பால் பெரியதொரு கிளாசில் நிரம்ப வைக்கப்பட்டிருந்தது. யோசேப்பின் கண்பார்வை தெறிப்புக்கள்... பால் கிளாசில் குத்திட்டு நிற்கின்றன. உசிரோடு கிடந்து துடிக்கேக்க கைக்கு எட்டாத நிலையில் கண்ணுக்கும் புலப்படாத தேவைகள் இன்று கண்முன்னால் நிறைந்து குவிந்து கிடக்கிறதே - யோசேப்பின் மனம் - இப்போது மௌனமாக அழுகின்றது.

ஆத்துமத்துக்கான விருந்துப் படையலைச் சுற்றி வயது படிமுறை கிரமத்தில் மனித முகங்கள் அழைக்கப்பட்டவர்களும்... அழைக்கப்படாதவர்களுமாக இது நேர்த்திச் சோறு போலத்தானே என்று மனசாட்சிக்கு மௌனமாக சொல்லும் 'தன்மைச் சமாதானங்களுடன்'...! செபப்புத்தகத்தை விரித்த அந்தோனிக் கிழவன் - கண்களை பரந்திருந்த சிறுவர் குழாமை நோக்கி "வாயைத் திறந்து செபம் சொல்லாத ஆக்களுக்கு தின்னிறதுக்கு ஒரு சின்னத்துண்டு கூடத் தாறதில்ல... ஓ" கிழவனின் அருட்டல் நிபந்தனையால் சிறிய கண்கள் யாவும் மிரள்கின்றன.

மேசை ஓதுதலை அந்தோனிக் கிழவன் தொண்டைக் கனைத்துச் செருமியவாறு பிதாச் சுதன் அடையாள அசைவுடன் ஆரம்பிக்கின்றார். மேசை ஓதுதல் இறந்து போன மனிதனின் ஆன்மாவுக்குப் படைக்கப்பட்டிருக்கும் - விருந்துக்குவியலை ஏற்றுக்கொள்ள அழைப்பு விடுக்கின்ற நடைமுறை விளக்கம்... உடற் கூட்டில் புகுந்திருந்த ஆன்மா உடலை விட்டு பிரிந்த பின்பும் - அது உலகில் பூவுலகில் வாழ்ந்த நாட்களில் உண்ட, உண்ண விரும்பிய ஆசைப் பண்டங்களை, பானங்களை ஆவியாக வந்து சுவைத்து நிறைவு பெற்றுச் செல்லும் என்ற சமுதாய நம்பிக்கை!

செப உச்சாடனங்களை அந்தோனிக் கிழவன் நறுக்குத் தெறித்தாற்போல் உச்சரித்து உதிர்க்க கூடியிருந்த கும்பல் 'தேய்நிலை கோரஸ்' பாணியில் செபமாலை முணுமுணுக்கின்றது. அந்தோனிக் கிழவனின் கையில் செபமாலை மணி உருள ஆரம்பிக்கவே "இந்தச் செபமாலையை இப்பவா சொல்லி முடிக்கப் போகுது இந்தக் கிழவன்" என்ற மனச்சலிப்பில் பின்வரிசை பெரிய தலைகள் தரையில் குந்துகின்றன. வேதனைச் சிக்கலில் தத்தளிக்கும் யோசேப்பின் மனத்திரிகை பின்னோக்கிச் சுழல்கின்றது.

கடவுளே அந்த... சில நாட்களில் எனக்கு ஏன் தாங்கமுடியாத கஷ்டத்தை சுமத்தினாய் கடவுளே! நினைச்சுப் பார்க்க நெஞ்சு வெடிக்கும் போல இருக்குது ஆண்டவனே....! யோசேப்பின் எண்ணக்கயிறு செபமாலை ஓதுதலில் இருந்து விலகி வேறு வழியில் அந்தரத்தில் தொங்குகின்றது.

••• ••• •••

யோசேப்பு இந்தக் கிராமத்தில் நிரந்தரமாகப் பிறந்து வளர்ந்து வாழுகின்ற ஒரு ஏழை விவசாயி. விவசாயி என்று சொல்வதைவிட 'பிழைப்பாளி' என்றால் பொருத்தமானதாக அமையும். ஏனென்றால் வருடா வருடம் சொந்தமாக உள்ள இரண்டு ஏக்கர் வயல் நிலத்தில் பயிர் பச்சை காட்டி நின்று பயனை எட்டிப்பிடிக்கின்ற - பருவத்தில் தண்ணீர் தட்டுப்பாடு தலையிட்டு பயிர்களைக் கருக்கி நாசமாக்கி விடுகின்ற நியதி! இதனால் மனம் சோர்ந்து வயிறு காய்ந்து வறுமையின் வெம்மையில் வறுத்தெடுக்கப்பட்டு...! வட்டிக்கு கடன் வாங்கி வட்டியும் குட்டிபோட்டு - கடன் செடியின் நெருடலில் அல்லலுற்று.... கிராமத்தில் பல ஏழை விவசாயிகளின் வாழ்வியல் கோலம் இந்நிலையில்தான்! இவர்களின் அற்ப சொற்ப பெறுமானமுள்ள 'உறுதிகள், போமிற்றுக்கள்' கிராமத்தில் வசதி படைத்த பண முதலைகளின் பெட்டகங்களில் துயில்கொள்கின்ற அவலநிலை! இதன் விளைவு வக்கிரித்துப்போன இவர்களின் உடல் உழைப்பின் பெறுமானங்கள் அன்றாடப் பிழைப்புக்காக கரைகின்ற பரிதாபம்! யோசேப்பின் நிலை இந்த வரைவிலக்கண வடிவில்தான்.

பட்டினியால் ஒரு மாதத்துக்கு முன்னர் மரணித்துப்போன பாலகனின் மறைவுக்கும் யோசேப்பின் வாழ்வியல் வரட்சிக்கும் நேரடித்தொடர்பு இருந்தது. ஒரு வயது நான்கு மாதங்களும் நிரம்பிய நிலை! என்றாலும் வயதுக்கேற்ற உடல் வளர்ச்சி இல்லை. 'அவலை' நினைத்து உரலை இடிப்பதுபோல - தாயின் முலையினைச் சூப்பி - சுவைத்து 'பால்' 'ஊற்று' வற்றிவிட்டதால் ஏமாந்து வீரிட்டு அலறுகின்ற அந்த அவலக்காட்சி யோசேப்பின் மனக்கிடங்கில் சோக முத்திரைகளைப் பதிக்கும். அன்றாட உடல் உழைப்பு 'வளர்ந்த வயிறுகளுக்கே' போதுமானதாக இருந்தது. வைத்தியசாலையில் இலவசமாகக் கொடுக்கப்படுகின்ற 'திரிபோஷா'வும் குழந்தையைக் காட்டி குடும்பத்தின் ஒருசில நேர வயிற்றுக் கடியை போக்கி விடுகின்ற அவசியத் தேவையாகி விடுகின்ற நிலை. அடிக்கடி குழந்தைக்கு சுகவீனம் ஏற்பட்ட போதெல்லாம் வைத்தியசாலைக்கு காவிச்சென்ற வேளைகளில் "பொடியனுக்கு உடம்பில சத்துக் குறைவால்தான்... அடிக்கடி வருத்தம் வருகுது... தாய்ப்பாலும் இல்லையெண்டு சொல்லுறியள்... கடையில நல்ல நல்ல சத்தான மாக்கள் வாங்கலாந்தானே... வாங்கி வாங்கிக் குடுங்கோவன்" வைத்தியரின் அலுத்துப்போன பல்லவி.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஓர் இரவில் யோசேப்பின் மனைவி மேரி சொன்னாள் "இஞ்சேருங்கோ டாக்குத்தர் பொடியனுக்கு சத்தான மாப்போணி வாங்கிக் கரைச்சுக் குடுக்கச் சொன்னவர்" என்றாள் "அதுசரி கையில காசு இருந்தால் வாங்கிக் கொடுக்காமலா விடுவன். நான் வீட்ட குத்திக்கொண்டா இருக்கிறன்... நாயாய் அலைஞ்சு உழைச்சு ஓடாய் தேஞ்சு போறன்... ஒரு சதம் மிஞ்சுதில்ல. உழைக்கிறத வயித்தில நிரப்பத்தான் காணுது" என யோசேப்பு அலுத்துக்கொண்டான்.

சீலைத்தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டு யோசேப்பை ஒரு அப்பாவிப் பார்வை பார்த்து மேரி சொன்னாள். "ஆசுப்பத்திரியில குடும்பக் கட்டுப்பாடு செய்யிற ஒரு ஆளுக்கு ஐந்நூறு ரூபா குடுக்கிறாங்களாம் நீங்க.. நீங்க..." வார்த்தைகளை அவள் முடிக்கவில்லை. தொண்டை கரகரத்தது. இந்த உபாயத்தைக் கேட்ட யோசேப்பினுடைய அடிமனதை இனம் புரியாத என்னமோ சக்தி சுண்டி இழுத்த பிரமையில் - அவிந்து அவிந்து எரிகின்ற குப்பி விளக்கின் ஒளியில் வீட்டு முகட்டினை வெறித்துப் பார்த்தபடி சிலையாக இருந்தான்.

விடிகிறது. ஆசுப்பத்திரிக்குப்போன யோசேப்பு - பின்னேரம் ஆறுமணியளவில் ஒரு யூறியாச் சாக்கு நிரம்பலாக வீட்டுத் தேவைக்கான அரிசி, மாவு, சீனி, தேங்காய் இத்தியாதி பண்டங்களுடன் ஒரு லக்ஸ்பிறே மா பக்கட்டுடனும் வந்து சேர்ந்தான். அடிக்கடி பூனையுறங்கிய அடுப்பில் ஒரு கிழமை தொடர்ச்சியாக தணல் கனன்றது.... சோர்ந்து சுருண்டு கிடக்கும் மூத்த மூன்று குழந்தைகளின் இயக்கத்தில் ஒரு துடிப்பு வீறிட்டு அலறும் பாலகனின் அழுகையில் ஓர் அடக்கம் ஒரு வாரம் கழிகின்றது. பழைய கோலக் காட்சி திரை விலகியது.

அடிக்கடி பசியால் வீரிட்டு அலறிய பாலகன் சீலைக்கரைபோல சோர்ந்து துவண்டு கிடந்தான்... வழமைபோல் ஆசுபத்திரிக்கு 'காவடி'... வைத்தியரின் பழகிப்போன பல்லவிதான் மருந்தாகக் கிடைத்தது. மூன்று வாரங்களின் கரைவின் இறுதியில் வெள்ளிக்கிழமை பின்னேரம் நான்கு மணியிருக்கும் அருண்ட உறக்கத்தில் கிடந்த யோசேப்பின் முதுகில் பலமாகத் தட்டிய மேரி "இஞ்சேருங்கோ... பொடியன் வெள்ளை ம்ளிப் பிரண்டு வலிப்பு வந்தது மாதிரி துடிக்கிறான். ஐயோ புண்ணியம கிடைக்கும் ஆரிட்டையாவது சரசு மாறி கொண்டுபோய் ஒரு லக்ஸ்பிறே பை வாங்கி வாருங்கோ...

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

தொடர் கட்டுரை – அங்கம் 9

## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

– அருள்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் –



### பகுதி 1 வியாகுல பிரசங்கம் - பன்முகப்பார்வையில்

### பக்தி வழிபாட்டு நோக்கில் வியாகுல பிரசங்கம்

கிறிஸ்துவின் பாஸ்கா நிகழ்வு வழியாக இடம்பெற்ற மீட்புச் செயற்பாடு, திருச்சபையினால் தொடர்ந்து நடத்தப்படுகின்றது. இதில் திருச்சபையின் உறுப்பினர்கள் விசுவாச அனுபவங்களைப் பெற்று அவ்விசுவாச அனுபவங்களை பல்வேறு வகையிலே வெளிப்படுத்துகின்றார்கள். திருவழிபாட்டுச் சடங்குகள் கிறிஸ்துவின் பாஸ்கா நிகழ்வுகளை கருத்துள்ள வகையில் நினைவு கூருகின்ற சம்பவங்கள் ஆகும். திருவழிபாட்டுச் சடங்குகள் திருச்சபையின் அங்கீகாரம் பெற்ற வழிபாட்டு முறைகளாக குறிப்பிட்ட ஒழுங்கு முறைகளுக்கு அமைய, மக்களால் இலகுவில் புரிந்துகொள்ள முடியாத இலத்தீன் மொழியிலேயே இடம்பெற்று வந்தன. இந்நிலையில் மக்கள் பெரும்பாலும் ஒழுங்குபடுத்தப்படாத, இயல்பாகவே தோன்றிய பக்தி வழிபாட்டு முறைகளிலே பங்குகொண்டனர்.

பக்தி வழிபாட்டு பயிற்சிகள் மக்கள் விசுவாசத்தில் வளர்வதற்கும் அதே விசுவாசத்தில் உறுதிபெறுவதற்கும் சிறந்த ஊடகமாக அமைகின்றது என்பது அனுபவத்தில் கண்ட உண்மை. இவ்வாறான பக்தி வழிபாட்டு பயிற்சிகள் உள்ளார்ந்த பக்தி உணர்வின் வெளிப்பாடாகும். இவ்வாறான பக்தி உணர்வுகள் குறிப்பிட்ட ஒரு செயல்ப்பாட்டின் வழியாக வெளிக்காண்பிக்கப்படுவதுண்டு. பக்தி வழிபாட்டுப் பயிற்சிகள் மக்கள் மத்தியிலிருந்து தாமாகவே மேற்கிளம்பி மரபு வழியாகக் கையளிக்கப்படுவதுமுண்டு. இவை இயற்கையான இயல்பு ரீதியாக மக்களின் பக்தி உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற செயற்பாடுகளாகவும் அமைகின்றது.

மக்களிடமிருந்து எழும் பக்திப் பயிற்சிகளின் உள்ளடக்கம் புரிந்து கொள்வதற்கு இலகுவானவையாகும். மேலும் மக்கள் கிறீஸ்தவ விசுவாசத்தின் மறையுண்மைகளை விளங்கி தங்கள் வாழ்வின் நிலைக்கேற்ப அவற்றை வெளிப்படுத்தப் பக்தி முயற்சிகள் உதவியளிக்கின்றன. இப்பின்னணியில் வியாகுலப்பிரசங்கத்தில் கூறப்பட்டுள்ள கிறீஸ்துவின் பாஸ்கு நிகழ்வு அது பற்றிய சிந்தனைகள், பக்தி முயற்சிகள் ஆகிய விடயங்களை நோக்கும்போது இவை இலகுவில் புரிந்துகொள்ளக்கூடியவையாக அமைந்துள்ளன. பாஸ்கா மறையுண்மைகள்தான் ஆதித்திருச்சபையின் விசுவாச சத்திய படிப்பினைகளின் நற்செய்திக் கருவாக விளங்கின. மக்கள் தாங்கள் பெற்ற விளக்கத்தைப் பல்வேறு வழிகளில் வெளிப்படுத்த முற்பட்டனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

திரு. சுவாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை,
இளைப்பாறிய அதிபர்,
7ம் வட்டாரம், விடத்தல் தீவு



## மன்னார்ப் பிரதேச ஊர்களின் பெயர்கள் தோன்றிய வரலாறு

(சில ஆராய்ச்சிக் குறிப்புகள்)

இளைப்பாறிய அதிபர் கலாபூசணம் திரு. சந்தியாப்பிள்ளை அவர்கள் எமக்கு அனுப்பி வைத்த சில வரலாற்று ஆராய்ச்சிக் குறிப்புகளை நன்றியோடு இங்கே பிரசுரிக்கின்றோம். புதைந்து மறைந்து இருக்கும் நமது வரலாறுகள் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்படவேண்டும். எனவே மன்னார் - மற்றும் வவுனியா மண்ணின் ஊர்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை எமக்கு அனுப்பி வையுங்கள். இந்த வரலாற்றுக் குறிப்புகள்தான் குறிப்பிட்ட இடத்தின் இறுதியான - அறுதியான வரலாறு என்று அர்த்தப்படுத்தப்படக்கூடாது. மாறாக இந்த வரலாற்றுக் குறிப்புகளுக்கு ஆதரவாகவோ எதிராகவோ மேலதிக சேர்க்கையாகவோ நீங்கள் அறிந்த தகவல்களை அனுப்பலாம். (பதிப்பாசிரியர்)

சில நாட்களின்முன் நான் மன்னாரில் நின்றேன். அன்று புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மேல்வகுப்பு மாணவர்கள் பிரசுரித்து வெளியிட்ட வருட இதழை வாசித்தேன். பல நல்ல விடயங்கள் காணப்பட்டன. பாராட்டுக்கள்! ஆனால் மன்னார் என்ற நாமம் ஏற்பட்ட ஆராட்சியில் மன்னிக்கொண்டு சென்றதால் மன்னார் என்ற பெயர் உன்டாயிற்று என எழுதப்பட்டிருந்தது. மன்னார் - மன்னினார் என்று வரலாம் மன்னரினார் அதனால் மன்னார். மன்ன மாட்டார் என்று கூறப்பட்டிருக்கிறது. முன் பின் முரண்.

பெருநிலப்பரப்புக்கும் மன்னார்த் தீவுக்கும் இடையில் உள்ள கடல் பகுதி இடைக்காலத்தில் ஏற்பட்ட உடைப்பு ஆகும். அது பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்டதாக இருக்கலாம். ஆனால் இருபதாம் நூற்றாண்டில்தான் பாலம் போடப்பட்டது. ஒரு சில நாட்கள் வருடங்கள் மன்னியும் இருக்கலாம். இதற்கு பல நூறு ஆண்டுகளின் முன்பு மன்னர்கள் அரசாண்ட மன்னாரும் மாந்தையும் அப்போது என்ன பெயரில் இருந்ததென்பதை நாம் ஓரளவு உறுதிப்படுத்திச் சொல்லமுடியாது. என்றாலும் யூகிக்கும்போது தலைமன்னாரில் சேர, சோழ பாண்டியர்கள் வந்து தங்கியிருந்து முன்பிருந்த குறுநில மன்னர்களின் உதவியுடனே அனுராதபுரம் அதாவது இராசரட்டையைப் பிடித்து அரசாண்டிருக்கின்றார்கள். உதாரணத்துக்கு எல்லாளனைக் கூறலாம். இந்தியாவில் சேர சோழ பாண்டிய மன்னர் என்ற சொல் பல நூற்றாண்டின்முன் பேசப்பட்டது. குமண மன்னர் பாரி மன்னர்போல இலங்கைக்கு வரும்போது எல்லாள மன்னர் என்ற பெயர் கூடவே வந்தது. வன்னி மன்னர்கள் வன்னியை ஆழும்போது வன்னி மன்னர் என்ற நாமம் அவர்களுக்கும் இருந்தது. எனவே மன்னார் என்ற பழைய சொல் இடையே வந்ததாகக் கூறுவதும் ஏற்க முடியாததே. ஆகையால் தலைமன்னாரில் இந்திய மன்னர் இறங்கினார்கள். எனவே தலைமன்னார் மன்னர்கள்மன்னர் என்பது மன்னாராக இடை நீளுவது விகாரமாகலாம். மன்னர் என்பது இடை குன்றி மன்னார் ஆயிற்று என ஓர் சாரார் கூறினும் மன்னினார் என்ற புதிய உதாரணம் சரியெனக்கூறும் போது இழிவாகவே தோன்றுகின்றது. இதையொட்டி மன்னாரிலும் மாந்தையிலும் உள்ள ஊரின் பெயர்களை ஆராய்ந்தேன்.

மன்னாரில் கிள்ளியனும், கீனியனும் இன்னும் பலரும் மன்னர்களாக இருந்திருக்கின்றார்கள். மாந்தையில் இராவணன் காலத்திலும் பல மன்னர்கள் இருந்திருக்கிறார்கள். அக்கால மன்னர்கள் குறுநில மன்னர்களுக்கு குலமும் அதைச் சார்ந்த நிலமும் மக்களுக்கு சன்மானம் செய்து மன்னர்களாக இருந்தனர். மன்னர்கள் வந்தனர், மன்னர்கள் ஆண்டனர், மன்னாரில் ஆங்கிலேயர் ஆட்சிப்பீடம் அமைத்தபடியால் மன்னார் என்று ஆகியிருக்கலாம்.

எனவே என்னுடைய மனக்குமுறலை போக்குவதற்காக அறிஞர்கள் அபிப்பிராயங்களும் மன்னாவில் வெளிவர ஆவன செய்யும்படி பணிவாக வேண்டுகின்றேன். மன்னாரும் மாதோட்டப் பிரதேசம் பழங்காலம் தொட்டு மன்னர்களால் அரசாழப்பட்ட பிரதேசம் ஆகும். பஸ்சில் வரும் போது ஓர் ஆசிரியரிடம் எங்கே படிப்பிக்கின்றீர் என்றேன். அவரோ பறப்பாங்கண்டல் என்றார் இதுவும் எனக்கு வெறுப்பை ஊட்டியது. பறப்பாங்கண்டல், இத்திக்கண்டல், முள்ளிக்கண்டல், இப்படியாக பத்துப் பன்னிரெண்டு கண்டல்கள் பரந்த பிரதேசம். முள்ளிக் கண் அடல், இத்திக்கண் அடல், பறப்பாண் கண் அடல் இப்படியே கண் என்ற ஏழாம் வேற்றுமை உருபு இடத்தை உணர்த்தும். அடல் என்றால் போர் எனக்கருத்தளிக்கும். ஆகவே அந்தந்த இடத்தில் போர்கள் நடந்தன. மாந்தையில் மயன் வம்சத்தவரும், நாகர் வம்சவத்தவரும் வாழ்ந்தனர். மயன் வம்சத்தவர்கள் இராவணனுக்கு விதவிதமான ஆயுதங்களை ஆக்கிக்கொடுத்தார்கள். அடம்பனில் இருந்தவர்கள் அடும் அம்பையும், சாலம்பனில் இருந்தோர் சால் துளை அம்பையும் செய்திருக்க வேண்டும். குமான் ஆயன் குளத்தில் மாரிசனும் நறுவிலிக் குளத்தில் சூர்ப்பநகையும், புள் ஆட்சிப் பொற்கேணியில் சடாயுவும் அவனது படைகள் கொக்குப்படையானிலும் இருந்திருக்கக்கூடும். ஆனால் சடாயு எதிர்கொண்டது பஞ்ச விடியலே இது விளங்கவில்லை. கொண்டச்சி ஊடகவே சீதையை அசோகவனம் கொண்டு சென்றிருக்க வேண்டும். இப்படியே பழைய பெயர்களை ஆராயும்படி அந்தந்த ஊர் மக்களைத் தூண்டி விட்டால் நன்றாக இருக்கும். அந்தந்த ஊர் மக்கள் சிறிது ஆராயும்படி ஓர் கட்டுரையை மன்னாவில் ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம்.

# நாம் வாழும் உலகம்

## நிமிடத்துக்கு 60 இலட்சம் சிகரெட்டுகள் புகைக்கப்படுகின்றன

### வருடத்துக்கு 200 மில்லியன் பேர் உயிரிழக்கின்றனர்



ஜேர்மனியிலும், பிரிட்டனிலும் 15 வயதிற்கு உட்பட்ட சிறுமிகளில் மூன்றில் ஒரு பங்கினர் புகை பிடிக்கின்றனர். உலகிலுள்ள 65 சதவீத சிறுவர்கள் புகை பிடிப்பவர்களாக உள்ளனர். புகை பிடிக்கும் பழக்கத்திலுள்ள ஆண்கள் பாலியல் ரீதியான உறவில் அதிக பலவீனம் அடையக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக பிரித்தானிய வைத்தியக் குழுவினர் மேற்கொண்ட ஆய்விலிருந்து தெரிய வருகிறது. பிரித்தானியாவில் 21 முதல் 75 வயதிற்கு இடைப்பட்ட இரண்டு மில்லியன் ஆண்கள் பாலியல் ரீதியால் பாதிக்கப்பட்டுள்ளதாக மேற்படி ஆய்வு கூறுகின்றது. பிரித்தானியாவில் உள்ள ஒவ்வொரு இரண்டு மில்லியன் ஆண்களில் இரண்டு இலட்சத்து இருபதாயிரம் பேர் பாலியல் ரீதியில் பலவீனமுள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர். இதற்கு மூல காரணமாய் அமைவது புகைபிடிப்பதே என வலியுறுத்தப்படுகின்றது.

இன்றைய இளசுகள் புகைத்தலுக்கு மிக வேகமாக அடிமைப்படுவதால் இவர்கள் 30 முதல் 40 வயதினை நிறைவு செய்யும்போது பாலியல் உறவில் பலவீனம் அடையக் கூடியதான சாத்தியம் காணப்படுவதோடு, இவர்கள் ஐம்பது வீதமானோருக்கு ஆயுட்காலமானது 8 முதல் 10 வருடங்கள் குறைந்தும் விடுகின்றது. அத்தோடு முதுமைப் பருவத்தில் பார்வையில் கோளாறும் ஏற்பட வாய்ப்பேற்படுகிறது. புகை பிடிக்கும் பழக்கம் ஏனைய நாடுகளைவிட எமது நாட்டில் சற்று குறைவாக உள்ள போதிலும் வாயில் விரலை வைத்து வியந்து போகும் அளவிற்கு உள்ளது. இலங்கையில் தினமும் புகைத்தலுக்கு மட்டும் ஐந்து கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தொகையினைச் செலவு செய்கின்றனர். இவர்களுள் 2000 ரூபாவிற்கும் குறைவான மாத வருமானத்தைப் பெறும் மிகவும் வறிய குடும்பத்தவர்களே புகை பிடிப்பதில் அதிகம் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கையிலுள்ளவர்கள் வருடாந்தம் 2000 கோடி ரூபாவிற்கும் அதிகமான பணத்தொகையினை புகைப் பாவனைக்காகச் செலவிடுகின்றனர். வருடாந்தம் புகை பிடித்தலாலும், அது தொடர்பான நோய்களாலும் 12,000 இற்கும் மேற்பட்டவர்கள் மரணமடைகின்றனர். சிகரெட்டிற்கு எவ்வளவுதான், வருடாவருடம் விலை ஏற்றம் ஏற்பட்டாலும்கூட பாவனையாளர்கள் அப்பழக்கத்தை விடுவதாக இல்லை. மறப்பதாகவும் இல்லை. இதற்குக் காரணமாக அமைவது குறுகிய நேரத்தில் உடலுக்கும் மனதுக்கும் புத்துணர்ச்சியைத் தந்து ஆயுளை அற்பமாக்கும் நிக்கோட்டினது ஈர்ப்பே ஆகும். புகைப் பாவனையில் மூழ்கியவர்கள் அதன் பிடியிலிருந்து நழுவ முடியாதவர்களாக சிக்கித் தவிக்கின்றார்கள். தவிப்பது கூட சுகந்தம் என தத்தளிக்கிறார்கள்.

# குடும்பக் குவலயம்

## மகிழ்ச்சியாய் இருப்பதன் இரகசியம்



இயேசுவின் பிரசன்னத்தில் அவரோடு இணைந்து வாழ்கின்ற கிறிஸ்தவர்களின் மகிழ்ச்சி என்றும் நிலையானது. இந்த மகிழ்ச்சியை வேறு எவராலும் பறிக்க முடியாது. மகிழ்ச்சியைத் தேடி எங்கெங்கோ அலையும் நாம் இந்த உண்மையை உணர்ந்தவர்களாய்...

இறைபிரசன்னத்தில் வாழ்வோம், இறைவனோடு இணைந்து பயணிப்போம், தூய ஆவியின் மகிழ்ச்சி என்னும் கனியை சுவைப்போம். மகிழ்ச்சியாக வாழ விரும்புகிறவர்களே இந்த மகிழ்ச்சியின் இரகசியத்தைப் புரிந்து கொள்வோமா? புனித சின்னப்பர் மகிழ்ச்சியின் அனுபவத்தை அதன் இரகசியத்தை இதோ தெளிவுபடுத்துகிறார். வாசிப்போம், வாழ்வாக்குவோம், மகிழ்ச்சியின் சாட்சிகளாய் வாழ்வோம்.

- ❖ ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழ்ந்திருங்கள், மீண்டும் கூறுகிறேன் மகிழுங்கள். (பிலி:4:4
- ❖ கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகிறேன். கிறிஸ்துவோடு இணைந்திருப்பதற்காகத்தான் நான் இவ்வாறு கருதுகின்றேன். (பிலி .3:8,9)
- ❖ ஆண்டவரோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்குப் பெற்ற நீங்கள் அனைவரும், கிறிஸ்த்துவை அணிந்துகொண்டீர்கள். (கலா.3:27)
- ❖ ஆண்டவரோடு சேர்ந்திருப்பவர் அவருடன் உள்ளத்தால் ஒன்றித்திருக்கிறார். (1கொரி 6: 17)
- ❖ கிறிஸ்துவோடு இணைந்து வாழும் எங்களை கடவுள் கிறிஸ்துவின் பவனியில் பங்குகொள்ளச் செய்கின்றார். (2 கொ. 2:14)
- ❖ நீங்கள் ஆண்டவரோடு இணைந்து அவர் தரும் வல்லமையாலும் ஆற்றலாலும் வலுவூட்டப் பெறுங்கள். (எபே.6:10)
- ❖ நம் ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்து வழியாய் நாம் கடவுளோடு உறவு கொண்டு பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். இம்மகிழ்ச்சியை நமக்குத் தந்தவர் கடவுளே (உரோ.5:11)
- ❖ கிறிஸ்து இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டீர்கள். அவரோடு இணைந்து வாழுங்கள். அவரில் வேரூன்றியவர்களாகவும், அவர்மீது கட்டி எழுப்பப்பட்டவர்களாகவும் இருங்கள். (கொலோ.2:6)
- ❖ கிறிஸ்த்துவோடு இணைந்து வாழும் எங்களை கடவுள் கிறிஸ்த்துவின் பவனியில் பங்கு கொள்ளச் செய்கிறார். (2கொரி.2:14)
- ❖ நீங்கள் இப்போது ஆண்டவரில் இணைந்து ஒளியாய் இருக்கிறீர்கள் (எபேசி. 5:8)
- ❖ இயேசுக் கிறிஸ்த்துவோடு இணைந்த நிலையில் ஏற்படும் நம்பிக்கையோடும், அன்போடும் நம் ஆண்டவரின் அருள் அளவின்றிப் பெருகியது. (1 திமோ.1:14)
- ❖ நீங்களும் அவரோடு இணைந்து தூய ஆவி வழியாகக் கடவுளின் உறைவிடமாக கட்டப்பட்டு வருகிறீர்கள் (எபே.2:22)
- ❖ கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள். (கலா. 3:28)
- ❖ கிறிஸ்து யேசுவோடு இணைந்து கடவுளுக்காக வாழ்கின்றவர்கள் என்பதை எண்ணிக் கொள்ளுங்கள். (உரோ. 6:11)

ஆண்டவரோடு 'உள்ள உறவில் நிலைத்திருப்போம்.!! அவர்தரும் மகிழ்வில் நிலைத்திருப்போம்.!!

திருக்குடும்ப சகோதரிகள், தலைமன்னார்

# மருத்துவ மஞ்சரி

## யானைக்கால் நோய்

யானைக்கால் வியாதி மருத்துவ உலகில் ஃபைலேரியாசிஸ் (Filariasis) என்று கூறப்படுகின்றது. கியூலெக்ஸ் எனும் நுளம்பு வகையினால் இந்நோய் பரவுகிறது. இந்நுளம்பினால் கடத்தப்படும் நோய்க்கிருமிகள் திசுக்களில் வாழ்ந்து மனிதனின் நாளங்களை அடைத்து வீக்கத்தை உண்டாக்குகின்றன. இதனால் உடலின் எந்தப் பகுதியும் பாதிக்கப்படலாம் என்றாலும் பெரும்பாலும் கால்களே தாக்கப்படுவதால் வீங்கி விகாரமாகக் காட்சியளிக்கும். ஆரம்பத்திலேயே கவனமெடுத்தால் தொடர்ச்சியாக மருந்து உட்கொள்வதன் மூலம் இதனை குணப்படுத்தி விடலாம். நோய் முற்றிவிட்டால் அறுவை சிகிச்சைக்கு உட்பட வேண்டிவரலாம்.

## சுத்தமான தேனிலே மருத்துவம்

சுத்தமான தேன் ஒரு சிறந்த உணவாகும். எளிதில் செரிக்கக் கூடியது. அதிக சத்து நிறைந்தது. ஐந்து கிலோ பாலுக்கு ஒரு கிலோ தேன் சமமாகும். பித்த நீர்ச் சுரப்பு இல்லாதவர்கள் தொடர்ந்து தேன் அருந்தி வந்தால் பித்த நீர் சுரந்து தொண்டை இருதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் சுலபமாக நீங்கிவிடுகின்றன. குழந்தைகளுக்கு உண்டாகும் பல்நோய், இருதய நோய் ஆகியவற்றுக்குத் தேன் ஒரு சிறந்த சஞ்சீவியாகும். தேன் மூலம், சுவாசக் கோளாறு, வயிற்றுக் கடுப்பு, கிருமி நோய், தாகம், வாந்தி பேதி, தீப்புண், விக்கல், மலச்சிக்கல் ஆகிய நோய்கள் குணமாகும். பசியை அது வளர்க்கும். ஜீரணத்துக்கு உதவும். தேன் கொழுப்பைக் கரைக்கக் கூடியது. ஆகவே உடல் மிகவும் பருமனாக உள்ளவர்கள் தொடர்ந்து தேன் சாப்பிட்டு வந்தால் பருமனும் எடையும் குறையும். ரத்தப் பித்தத்துக்கு அதாவது வாய், மூக்கு முதலியவற்றிலிருந்து ரத்தம் வடியும் வியாதிக்கு, ஆட்டின் பாலில் மேல் ஏற்படும் புண் காயங்களுக்கு மாத்திரமின்றி, உள்ளே ஏற்படும் இரைப்பைப் புண் போன்றவற்றையும் தேன் சாப்பிட்டு குணமாக்கலாம். வயதான சிலருக்கு அவ்வப்பொழுது தசைகளில் வலி ஏற்படுவதுண்டு. கால்களில் வலி அல்லது குரல் தொனியே இல்லாது தொண்டையை அடைத்து விடுதல் போன்ற கப நோய்கள் கண்டபோது, ஒரு நாளைக்கு நாலைந்து முறை தேனை துளசிச்சாறு, வெற்றிலை கலந்து கொடுத்து வந்தால் நல்ல குணம் ஏற்படும்.

## ஆயுர்வேதத்தில் ரோஜா மலர்

ரோஜா மலரை கவர்ச்சிகரமான அழகிய படைப்பாகத்தான் நாம் கண்ணோக்குகின்றோம். ஆனால் ஆயுர்வேத மருத்துவத்தில் ரோஜாவிலும் மருத்துவ குணங்கள்,, இருப்பதாகக் கூறப்படுகின்றது. ரோஜாவின் இதழ்கள் வயிறு சம்பந்தமான (வயிற்றுக் கடுப்பு, சீதபேதி) பிரச்சனைகளை குணமாக்கும். உடலுக்குக் குளிர்ச்சியையும், சுறுசுறுப்பையும் தரும். வாய்ப்புண் குடற்புண்களைக் குணமாக்கும் சளி, மூக்கடைப்பு போன்றவற்றுக்கு ரோஜா இதழ்களை முகர்வதால் ஓரளவு பலன் கிடைக்கும். இதன் இதழ் சாறை மூக்கிலிட்டால் தலைவலி குணமாகும். இரத்த சுத்திகரிப்புக்கும், மூளை வலுவடையவும் இது உதவும். [illegible] பெறும் தைலம் காது வலியைக் கட்டுப்படுத்தும். க்ல்லீரல், மண்ணீரல் போன்றவற்றிற்கு வலிமையைக் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் கட்டுரைப்போட்டி –குழு – 04 ல்

## முதலாம் இடம் பெற்ற கட்டுரை

செபஸ்ரியன் டொறின், (கீளியங்குடியிருப்பு பங்கு)

கட்டுரையின் தலைப்பு

# உறுதிப்படுத்தும் ஆவியானவர்

மூவொரு கடவுளில் ஒருவர்தாம் ஆவியானவர். இவர் வல்லமை மிக்க ஒரு சக்தியாக விளங்குகின்றார். உலகம் உண்டாவதற்கு முன்பே பரிசுத்த ஆவி இருக்கின்றார். *"நீர்த்திரளின்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக்கொண்டிருந்தது"* (தொடக்க நூல் 1:2) அதாவது கடவுள் உலகை படைக்கும்பொழுது ஆவியானவர் நீர்ப்பரப்பின்மேல் அசைந்தாடிக்கொண்டிருந்தார். ஆகவே ஆவியானவர் ஆதியந்தமற்றவர், நித்தியமானவர். நித்திய வாழ்வை எம் ஒவ்வொருவருக்கும் பெற்றுத்தருபவர். அவர் எம் அனைவரையும் கிறிஸ்தவ விசுவாசத்தில் - ஆன்மீக வாழ்வில் திடம் அளித்து உறுதிப்படுத்துபவர்.

உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனத்தின் வழியாக ஆவியானவர் எம்மில் குடிகொண்டு வாசம் செய்கின்றார். உறுதிப்பூசுதலின் வழியாக அவரைப்பெற்ற எமக்கு அருட்கொடைகளையும் கனிகளையும் வரமாக அருளுகின்றார். அப்போஸ்தலரான புனித சின்னப்பர் *எமது உடல் ஆவியானவர் வாழும் ஆலயமென* தமது திருமுகத்தில் மிக அழகாகக் கூறி உள்ளார். அதுமட்டுமன்றி *"கடவுளின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டுப் பேசும் எவரும் யேசு சபிக்கப்பட்டவர் என சொல்ல மாட்டார். தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் இயேசுவை ஆண்டவர் எனச் சொல்லமுடியாது அருட்கொடைகள் பல வகை உண்டு, ஆனால் தூய ஆவி ஒருவர்தான். இவரே தம் விருப்பம்போல் அருட்கொடைகளைப் பகிர்ந்தளிக்கிறார்"* என புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் (1கொரி 12:3 - 11) தெளிவாக உணர்த்தியுள்ளார். அத்தோடு கிறிஸ்தவ ஒருமைபாட்டைப் பற்றிக் கூறுகையில் *"அமைதியுடன் இணைந்து வாழ்ந்து தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டு இருக்கின்றீர்கள். ஒரே எதிர்நோக்கு இருப்பது போல உடலும் ஒன்றே தூய ஆவியும் ஒன்றே"* (எபே.4:3-4) எனக் குறிப்பிடுகிறார். தூய ஆவியானவரே எல்லோரையும் கிறிஸ்தவ வாழ்விலும் கிறிஸ்தவ ஒருமைப்பாட்டிலும் உறுதிப்படுத்துபவர். யேசு விண்ணேற்றம் அடையும்முன் அங்கு கூடியிருந்தவர்களிடம் *"தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று ஜெருசலேம் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடை எல்லைவரைக்கும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்"* (திரு.தூ.ப.1:8) எனக் கூறியுள்ளார். எனவே கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு சான்று பகரத் தூய ஆவியானவர் தூண்டுதலாக செயற்படுகிறார். யேசுக்கிறிஸ்து போன்று பெந்தகோஸ்தே நாள் வந்தபோது சீடர்கள்மேலும் அவர்களோடுகூட இருந்தவர்கள் மேலும் பெருங்காற்று வீசுவது போன்ற இரைச்சல் உண்டாகியது. அக்கினி நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்திறங்கியது. அந்நாளே அன்னையாம் திருச்சபை பிறந்த நாளாகக் கருதப்படுகின்றது.

பரிசுத்த ஆவியானவர் சீடர்கள்மேல் வந்திறங்கியதும் அவர்கள் புதுப்பலம் பெற்று திடம் பொருந்திய மனதுடன் கிறிஸ்துவை புகழ்ந்து அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு போன்றவற்றிற்கு தாங்களே சாட்சிகள் என்று சான்றுபகரத் தொடங்கினார்கள். கிறிஸ்து விண்ணேற்றம் அடைந்த பிற்பாடு அவரது சீடர்கள் பயந்த கோழைகளாக அறைக்குள் அடைந்து கிடந்தார்கள்.



பரிசுத்த ஆவி அருளப்பட்டதும் பயம் நீங்கி கிறிஸ்துவில் உண்மையான விசுவாசம் நம்பிக்கை கொண்டவர்களாக மாறினார்கள். இம் மாற்றத்திற்கு தூய ஆவியானவர் காரணமாவார் இந்த நிகழ்ச்சி மூலம் உறுதிபடுத்துபவர் தூய ஆவியானவர் என்பதனை நாம் உணர்ந்து கொள்ளலாம். *"இறுதி நாளில் எல்லோர் மேலும் என் ஆவியை பொழிவேன் உங்கள் புதல்வர், புதல்வியர் இறைவாக்கு உரைப்பர்"* என்ற யோவேல் இறைவாக்கினரின் மறைநூல் வாக்கு இந்தப் பெந்தகோஸ்து நாளில் இடம்பெற்ற நிகழ்வுகள் மூலம் அரங்கேறி நிறைவெய்துகிறது. அதுமட்டுமன்றி அப்போஸ்தலர்களான இராயப்பர், பிலிப்பு, அருளப்பர் மற்றும் சின்னப்பர் ஆகியோர் வாழ்வில் உறுதிப்படுத்தும் ஆவியானவர் செயலாற்றுவதைக் காணலாம். புனித சின்னப்பர் மேற்கொண்ட 3 தூதுரைப் பயணங்களின்போது நிறுவப்பட்ட திருச்சபைகள் - உரோமையர், கொரிந்தியர், தெசலோனிக்கர் போன்ற சபைகளில் இராயப்பர், அருளப்பர் ஆகிய சீடர்கள் சென்று மக்கள்மேல் தங்கள் கைகளை வைத்து செபிக்கவே அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டதையும் ஞானம் நிறைந்த பரவசப் பேச்சும் வல்லமையையும் பெற்றுக்கொண்டதையும் பரிசுத்த திருச்சபை ஆவியின் வழியாக நிறைவு பெறுவதையும் அப்போஸ்தலர்பணி (அதி.8:17-18) நூலின் தெளிவாக காணலாம்.

அதுமட்டுமன்றி ஆதிக்கிறிஸ்தவ சபையில் விதவைகள் அநாதைகள், ஆதரவற்றோர், பிணியாளர்கள் போன்றவர்களுக்கு அறப்பணி செய்யவென 7 திருத்தொண்டர்கள் நியமிக்கப்பட்டார்கள். அதில் முக்கியமானவர் முடியப்பர். தூய ஆவியின் அருளும், வல்லமையும், ஞானமும் நிறைந்தவர்களாக இந்த எழுவரை நியமித்தார்கள். தூய ஆவியானவரின் வல்லமை நிறைந்த செயல்களை இவர்கள் செய்தார்கள். அவர்கள் அனைவரும் கிறிஸ்தவ வாழ்வில் மற்றவர்களை உறுதிப்படுத்துகிறார்கள்.

நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களிலும் பரிசுத்த ஆவியானவர் எம்மைப் பாதுகாக்கின்றார். எம் வாழ்க்கை நிகழ்ச்சிகளிலும் மனச்சான்று, பெரியோர், ஆசிரியர் வழியாக பரிசுத்த ஆவி எம்மோடு பேசுகின்றார். நாம் பரிசுத்த ஆவியை நினைக்கும் போது புதிய புதிய உணர்வுகள் எம்மில் ஊற்றெடுக்கும். நாம் நன்மை செய்யவும் அவரைப் புகழவும் அவருக்கு ஏற்ற மக்களாக வாழவும் ஆவியானவர் எம்மைத் தூண்டுகிறார். நாம் பாவத்தில் நடக்காது ஆவியின் வழியில் நடக்கவும் பரிசுத்த ஆவி எமக்கு உதவி செய்கிறார். திருமுழுக்கின் வழியாகவும் உறுதிப் பூசுதலின் வழியாகவும் ஆவியானவர் எம்மில் வாசம் செய்கிறார். எம்மில் வாசம் செய்யும் ஆவியானவர் எம் அனைவரையும் திருச்சபையின் பிள்ளைகளாகவும் திருச்சபையைக் கட்டி எழுப்பும் தூண்களாகவும் மாற்றுகின்றார். எம்மை நல்ல நெறியில் வாழவும் வளரவும் எம்மை உறுதிப்படுத்துவார். எம்மை எப்போதும் உறுதிப்படுத்தும் ஆவியானவருக்கு நாம் எப்போதும் நன்றியும் புகழும் செலுத்துவோமாக.

# உங்களுக்கு தெரியுமா?

## மாணவர் மறையறிவுப் பகுதி இல. 3

மாணவர்களின் மறையறிவை வளர்க்க

மன்னா ஆரம்பிக்கும் புதிய பகுதி

*கேள்வி கேட்பது நாங்கள் விடை எழுதுவது நீங்கள் (இப்போட்டி பற்றிய நிபந்தனைகள் மற்றும் விளக்கமான விபரங்களை மே மாத மன்னாவில் பக்கம் 9ல் பார்த்து தெரிந்து கொள்ளவும்)*

3. மரியாள் மறை இரகசியங்களில் பெட்டகம். அள்ள அள்ளக் குறையாத அன்பும் அருளும் அவளிடம் நிறைந்து காணப்படுகின்றன. இறைவன் தன் தாயாகத் தெரிந்து கொண்ட அவரை தன் அருளாலும் கொடைகளாலும் அலங்கரித்த அளவு வேறொருவரை அலங்கரிக்கவும் இல்லை. இனி அலங்கரிக்கப் போவதும் இல்லை. பரலோக பூலோக இராக்கினியாக மகிமைப்படுத்தி மனிதத்துவத்துக்கும் இறைத்துவத்துக்கும் ஒரு பாலத்தைச் சமைத்துள்ளார்.

### கேள்வி

அன்னை மரியாளின் மன்றாட்டு மாலையில் (பிரார்த்தனையில்) வாக்குத்தத்ததின் பேழையே என அன்னையை அழைக்கின்றோம் அல்லவா?... ஏன்?

விடைகள் வந்து சேரவேண்டிய இறுதி நாள்
20. 08. 2003

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 1இற்கான கேள்விக்கு 2 பேர் மட்டுமே சரியான விடையளித்திருந்தனர்.

**அவர்கள் பெயர் விபரங்கள் வருமாறு**

1. சூ. சீமான்பிள்ளை,
இளைப்பாறிய கிராமசேவகர்,
கங்காணிதீவு, நானாட்டான்.

2. ம. செலஸ்ரீனா ஞானப்பிரகாசம்,
தரம் 13, கலைப்பிரிவு,
மன் துாய யோசேவாஸ் மகாவித்தியாலயம்,
விடத்தல்தீவு.

(இவர்களுக்குரிய பரிசுத் தொகையை காலக்கிரமத்தில் அனுப்பி வைப்போம்.)

### இலக்கம் 1ற்கான கேள்வி

தேவதாயாரை விடியற்காலத்தின் நட்சத்திரமே என ஏன் விழிக்கின்றோம்.?

### சரியான விடை எழுதி பரிசு பெறும் அதிஸ்ரசாலி

சூ. சீமான்பிள்ளை,
இளைப்பாறிய கிராமசேவகர்,
கங்காணிதீவு, நானாட்டான்.

### இவருடைய விடை இதுதான்:

#### விடியற் காலத்தின் நட்சத்திரமே

இருள்மயமாக இருக்கும் உலகம் விடிந்து இருள் நீங்கப் போகிறது என்பதைக் காட்டும் அறிகுறியாக விடி வெள்ளி உதயமாகிறது. இறைவன் உலகைப் படைத்து சகல ஜீவராசிகளையும் மனிதனையும் படைத்தார். மனிதன் தன்னை வணங்கி மகிழ்வாக இருப்பான் என எண்ணினார்.

ஆனால் மனிதனோ அலகையால் ஏமாற்றப்பட்டுப் பாவ இருளில் மூழ்கி மனம்போன போக்கில் சகல அக்கிரமங்களையும் செய்து தன்னையும் மறந்து நடக்கலானான். உலகம் பாவ இருளில் மூழ்கியது. மீட்சி இல்லாமல் அல்லலுற்றது. இரக்கம் கொண்ட இறைவன் இந்த உலக மக்களை மீட்கச் சித்தம் கொண்டார். மனிதன் திருந்திய பாடில்லை. மனிதன் மேற்கொண்ட இரக்கத்தால் தன் ஒரே மகனை உலகுக்கு அனுப்பி உலகை உய்விக்கச் சித்தம் கொண்டார்.

மகனை நேரடியாக அனுப்பாது ஒரு பெண் மூலம் அனுப்ப முடிவுசெய்து அப்படியான ஒரு மாதைத் தெரிவு செய்தார். அந்தப் பெண்தான் மரியாள். அவள் சென்ம தோஷம் இல்லாது பிறக்கும்போதே உலகம் விடியலை நோக்கிக் காலடி வைக்கத் தொடங்கியது.

உலகத்தை உய்விக்கும் விடிவெள்ளியான யேசு அவவின் வயிற்றில் உருவாகச் சித்தம் கொண்டார். உலகம் விடியலைக் காண முதன்முதல் தோன்றிய விடிவெள்ளி மரியாள். அவள் வழியாக உலகத்தைப் பாவம் என்னும் இருளில் இருந்து மீட்க மனிதனாக யேசு பிறந்தார். இவர்தான் பாவ இருளில் இருந்து மனுக்குலத்தை மீட்டார். சிலுவை மரணம் ஊடாக உலக மீட்பரின் வருகைக்கும் பாவ இருளில் இருந்து மீட்புக்கும் உரியவரான இயேசுவைச் சுமந்து பெற்றவள் மரியாள். எனவே இப்படியான மகிமை பெற்றவளான மரியாளை விடியற்காலத்தின் நட்சத்திரம் என மகிமைப் படுத்துவது முற்றிலும் பொருத்தமானதே.

**உங்களுக்குத் தெரியுமா**

மாணவர் மறையறிவுப்போட்டி இல. 2ற்கான
மிகச் சிறந்த விடை எழுதி பரிசு பெறுபவரையும் அவரது விடையையும் பாராட்டுப் பெறுவோர் விபரங்களையும் அடுத்த மன்னாவில் எதிர்பாருங்கள்
(இலக்கம் 2 போட்டியில் இதுவரை 55ற்கும் அதிகமானவர்கள் பதில் எழுதி அனுப்பி உள்ளனர்)

# அரசியல் அரங்கம்

உரத்த சிந்தனை – உரைப்பது – ஸ்நாபகன்

## பேசித்தான் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்

சமாதான முயற்சிகள் இப்போது முடங்கிப்போயிள்ளன. சமாதான அரசியலை நகர வைப்பதற்கு முரண்பாடுகளை தணிக்க வேண்டும். அதற்கு ஒரே வழி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதுதான். விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் காத்திரமான ஒரு அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு இந்நாட்டின் கட்சி அரசியல் முரண்பாடுகளே முட்டுக்கட்டையாக உள்ளன.

யுத்தமும் அல்ல பிரிவினையும் அல்ல. பேசித்தான் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். நிதி உதவியைத் தேடி ஓடிய ஓட்டங்கள் வெற்றிகரமாக முடிந்தாலும்கூட இடைக்கால நிர்வாக முறைமை பற்றிய சிக்கல் பாரிய இழுபறியில் உள்ளது. இப்பொழுது விடுதலைப்புலிகளிடம் கொடுக்கப்பட்ட பிரதி, ஊடகங்களிலே வெளிவந்துள்ள பிரதி ஆகியவற்றிலே வேறுபாடுகள் காணப்படுவதாக ஒரு புதிய கதை வெளிப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியினரின் கருத்து வெளிப்பாடுகள், சிங்கள் பேரினவாத சக்திகளின் நிலைப்பாடுகள், ஜனாதிபதியிடமிருந்து வரும் கருத்து வெளிப்பாடுகள் மொத்தத்தில் சகல கோணங்களிலும் இருந்து வெளிப்படத்தொடங்கியுள்ள எதிர்ப்பலைகள் எல்லாமே அரசாங்கத்தின் போக்கில் தளம்பல்களை மட்டுமல்ல நிதானத்தை இழக்கவும் செய்துவிட்டன. இப்பொழுது நாட்டு மக்களின் மனங்களிலே 'அடுத்து என்ன' என்பதை அறிய முடியாத அவநம்பிக்கைகளே மேலோங்கியுள்ளன.

## வரலாற்று மேற்கோள்

"மனித குலம் போருக்கு முடிவு கட்ட வேண்டும். அல்லது போர் மனித குலத்திற்கு முடிவு கட்டும்"
*(அமெரிக்க ஜெனாதிபதி ஜோன் எப். கெனடி 1961ல் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் ஆற்றிய உரையொன்றில் இருந்து.)*

*புலிகளுக்கு அரசு அனுப்பியது அரசியலமைப்பை மீறாத யோசனைகளாகும் - பிரதமர்*



நன்றி - தினக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இறையியல் - சமுகக் கண்ணோட்டம், இறையியல் - சமுகக் கண்ணோட்டம், இறையியல் - சமுகக் கண்ணோட்டம்.




# மனித மாண்பும் அவன் தெய்வீகமும்

அருட்பணியாளர் போல் நட்சத்திரம். அ. ம. தி
வசந்தகம். கொழும்புத்துறை. யாழ்ப்பாணம்

வவிலிய ஊற்றுக்களையும் இரண்டாம் வத்திக்கான் சங்க மேய்ப்புப் பணி சார்ந்த இன்றைய உலகில் திருச்சபை என்னும் கொள்கைத் திரட்டையும் அடித்தளங்களாகக் கொண்ட ஒரு இறையியல் - சமுகக் கண்ணோட்டம்.

### சமகால நோக்கு

இன்றைய காலகட்டத்திலே மனிதனுடைய வளர்ச்சியானது வரலாற்றில் புதிய முக்கியமான கட்டத்தை அடைந்துள்ளது. இன்று விரைவானதும் ஆழமானதுமான மனிதனது திறமைகளும் ஆற்றல்களும் படிப்படியாக இவ்வுலகை ஆக்கிரமித்துக்கொண்டு வருகின்றது. இதன் விளைவாக தனி மனிதனது ஆற்றல்கள் பல மாற்றங்களை அடைந்துள்ளன. இவை இவ்வுலகைப் பலவிதத்திலும் பலவாறாக பாதித்து பல விளைவுகளுக்கு இட்டுச்செல்கின்றன. ஆனால் மனிதன் தனது ஆற்றலை விரிவுபடுத்தும் இக்காலகட்டத்தில் அவற்றை முற்று முழுதாகத் தனது நன்மைக்கும் இவ்வுலக நன்மைக்குமாகப் பயன்படுத்த முடியாது. தன்னைப்பற்றி தெளிவான விளக்கமின்மையால் தன்னைப்பற்றிய ஐயபாடுகள் நிறைந்தவனாகத் திண்டாடுகின்றான். இதனால் தன்னைப்பற்றிய பல்வேறுபட்ட கருத்துக்களை - முரண்பட்ட கருத்துக்களைக்கூட எவ்வித ஐயப்பாடுகளுமின்றி வெளியிட்டு வருகின்றான்.

இக்கருத்துக்கள் வழியே அனைத்திற்கும் தனிமுதல் அளவாகத் தன்னையே உயர்த்துகின்றான். அல்லது நம்பிக்கையின்மைக்கே தாழ்த்துகின்றான். இந்நிலையில் அவனது உண்மை நிலையை விளக்குவதும் அவனது வலுவின்மையைச் சுட்டிக்காட்டுவதும் அவனது அழைப்பையும் மாண்பையும் சரியாக அறிவிப்பதும் திருச்சபையினதும் கிறிஸ்தவ சமூகங்களினதும் நம்மவருடையதும் பாரிய பொறுப்பும் கடமையும் ஆகும்.

### விவிலிய நோக்கு

மனிதன் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டவன். தன்னைப்படைத்தவரை அறியவும் அவரை அன்பு செய்யவும் அவனால் இயலும். கடவுளின் மாட்சிக்காக மண்ணிலுள்ள அனைத்தையும் அவன் ஆளவும் பயன்படுத்தவும் அவை யாவற்றின் தலைவனாகக் கடவுள் அவனை ஆக்கினார். (தொ.நூ.1:26)

சங்கீத ஆசிரியர் திருப்பாடல் (8: 4 - 8) இல் மனிதனை இறைவன் எவ்வாறு உயர்த்தி மாட்சிமைப்படுத்தி அவனின் மாண்பை வெளிப்படுத்தியுள்ளார் எனக் காட்டுகிறார்.

*"மனிதரை நீர் நினைவில் கொள்வதற்கு அவன் யார்? மனிதப் பிறவிகளை நீர் ஒரு பொருட்டாக எண்ணுவதற்கு அவர்கள் எம்மாத்திரம். ஆயினும் அவர்களைக் கடவுளாகிய உமக்குச் சற்றே சிறியவராக்கியுள்ளீர் மாட்சியையும் மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளீர். உமது கை படைத்தவற்றை அவர்கள் ஆளும்படி செய்துள்ளீர். ஆடு - மாடுகள் எல்லாவகையான காட்டு விலங்குகள் - வானத்துப் பறவைகள் கடல் மீன்கள் ஆழ்கடலில் நீந்திச் செல்லும் உயிரினங்கள் அனைத்தையும் அவர்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளீர்"*

### மனிதனின் சமுகப்பண்பு

மனிதன் இயல்பிலேயே சமூகப்பண்புடையவன். அவன் பிறரோடு



தொடர்பு கொள்ளாமல் அவனால் வாழவோ, தன் திறமைகளை வளர்த்துக்கொள்ளவோ, தனிமனித மாண்பைக் காப்பாற்றவோ முடியாது. எனவேதான் இறைவன் மனிதனை ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். இது அவர்களிடையே எழும் ஒன்றிப்பின் முதல் உருவமாகும். உலகில் உள்ளவை அனைத்தும் மனிதனையே தன் மையமாகவும் சிகரமாகவும் கொண்டுள்ளன என்பதை அனைவருமே ஒரு மனதாய் ஏற்றுக்கொள்வர். மனிதன் தனக்குள்ளே கொண்டிருக்கும் தெய்வீகச் சாயலினால் மிகுதியான உலகம் முழுவதின் மேலும் அதிகாரம் கொண்டுள்ளான். இதன் விளைவாகத்தான் மனிதப் பண்பாடுகளும் அவனது உண்மையான மனிதச் செயற்பாடுகளும் அளவிட முடியாத இறைவனின் ஒளியை என்றும் பிரகாசிக்கச் செய்கின்றன. புதிய ஏற்பாட்டிலே விஷேசமாக புனித பவுலின் திருமடல்களில் மனித மாண்பு பற்றிய சிந்தனைகளைக் காணலாம். கடவுள் தன்மையில் பூரணமாக விளங்கிய கிறிஸ்து தமது மனித அவதாரத்தினால் மனித மாண்பையும் மனித குலத்தையும் இறைவனுக்குரிய புனித நிலைக்கு உயர்த்துகின்றார் என்று குறிப்பிடுகின்றார். (பிலி. 2: 5-11)

### இறையியலாளர் சிந்தனையில் மனித மாண்பு

மனிதன் கிறிஸ்துவை இறைவனில் ஏற்றுக்கொள்வதால் கடவுள் சாயலில் வளர்கின்றான். இதனை உறுதிப்படுத்துவதாக லியோன் டவோர் (Leon Dufour) எனும் இறையிலாளர் மனித மாண்பும் புனிதத் தன்மையும் மீண்டும் பேணப்படுவதற்கு பூரணமற்ற மனிதத்தன்மை - பூரணமுள்ள கிறிஸ்துவின் சாயலை தன்னுள் எப்பொழுதும் தாங்க வேண்டும் என்கிறார். உலகளாவிய சகோதர ஒன்றிப்பிலும் அன்பிலும்தான் மனிதனுடைய மேன்மையும் அவனுடைய மாண்பும் கட்டியெலுப்பப்பட முடியும் என்பதை கிறிஸ்துவின் வாழ்வு நிரூபிக்கின்றது. மனித மாண்பை உறுதிப்படுத்தும் பல சான்றுகளை திருச்சபை தந்தையர்களின் இலக்கிய மரபுகளிலும் உலகப் புகழ்பெற்ற இறையியலாளர்களின் சிந்தனைகளிலும் காணலாம். புனித அகுஸ்தினாரின் மாண்பு பற்றிய சிந்தனையானது மனித மாண்புக்கு ஊற்றாக இருக்கின்ற அவனுள்ளே இருக்கும் தெய்வீகச் சாயல் பற்றிய சிந்தனையாகும். இன்றைய உலகில் திருச்சபை என்னும் கொள்கைத் திரட்டு இல. 21 இலும், புனித இரெனியுஸின் கருத்துக்கள் இல. 39 இலும், புனித தோமஸ் அக்குயினதஸின் கருத்துக்கள் இல. 25 இலும், இவர்களைத் தொடர்ந்து புனித பொனவெந்தார், அலைக்சாந்தர் கிறகொரி நிசாம் போன்றவர்களின் மனித மாண்பு பற்றிய மெய்யியல் ரீதியான சிந்தனைகளும் கொடுக்கப்படுகின்றன. வான் றட் (Von rad) என்ற இறையியலாளர் புதிய ஏற்பாட்டு இறையியல் அகராதியிலே இறைவன் மனிதனுக்கு அளித்துள்ள மேன்மையான மாண்பை மனிதன் இவ்வுலகில் வாழ்ந்தாலும் அவனொரு விண்ணகப் பயணியாக மேலானவற்றை நோக்காகக் கொண்டு வாழும் மாண்பைப் பெற்றவன் என்று கூறுகிறார். ஜேர்மன் இறையியலாளர் கிளைனச்சல் (Kleinnechl ) மனித மாண்பு தெய்வீக சாயலின் பிரதிபலிப்பே என்று கொள்ளப்பட்டு மூன்று வேறுபட்ட சிந்தனைகளில் மனித மாண்பை இவர் விளக்குகின்றார்:

- உடல் ரீதியான ஒற்றுமை கொண்ட சாயலை - மாண்பை இறைவன் மனிதனுக்குக் கொடுத்துள்ளார். அறிவு ரீதியான சிந்தனை வாயிலாக மனிதன் தனக்குள்ளான தெய்வீகச்சாயலை வெளிப்படுத்துகிறான்.
- மனிதனுக்கு தனது முழு அதிகாரத்தையும் கொடுத்து இவ்வுலகைத் தம்முடைய மாண்புள்ள வாழ்க்கையினால் அதனை நிலைநாட்டவும் தனது ஆளதிகாரத்தை உறுதிப்படுத்தவும் மனிதன் கடமைப்பட்டுள்ளான்.

மனிதன் படைப்பிலிருந்து ஒரு தனித்துவமான மாண்பைப் பெற்றுள்ளான். இதனால் மனித மாண்பானது மனச்சான்றின் படி வாழ்வதிலும் சமூக ஒருமைப்பாட்டைப் பேணுவதிலும் தீமையை விலக்கி நன்மையைச் செய்வதிலும் தங்கியுள்ளது.

### இரண்டாம் வத்திக்கான் சங்கமும் மனித வாழ்வும்

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் இன்றைய உலகில் திருச்சபை என்ற ஏட்டின்படி மனிதன் இறைவன் படைப்புக்களில் மிகச் சிறந்தவன். அதிபதி அதனால் மனித அழைத்தல் உன்னதமானது. தன் மாண்பை உணர்ந்தவனாக தன் வாழ்வில் குறுக்கிடும் தடைகளை தனது மாண்பிற்கு ஏற்ப எதிர்த்துப் போராட வேண்டும்.

இன்றைய உலகில் திருச்சபை என்ற மேய்ப்பணி சார்ந்த கொள்கைத்திரட்டு இவ்வுண்மைகளை வலியுறுத்துகின்றது. இவற்றின் அடிப்படையில் திருச்சபை உலகோடு கொண்டுள்ள உறவையும், இன்றய மக்களோடு கொண்டுள்ள உறவையும் விளக்க எண்ணுகின்றது.

இத்திரட்டின் முதற்பாகம் மனித மாண்பு பற்றியும் (இல.11-22) அனைத்துலக மனித செயற்பாடுகள் பற்றியும் (இல.33-39) எடுத்துரைக்கின்றது. முதலாம் பகுதியில் மனிதன் பற்றியும் அவன் வாழும் உலகைப்பற்றியும் உலகோடு மனிதன் கொண்டுள்ள தொடர்பு பற்றியும் விளக்குகின்றது.

மனிதம் காப்பாற்றப்பட, மனித சமுதாயம் புதுப்பிக்கப்பட முழுமனிதனை மையமாக்க கொண்டு சிந்தனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உடலோடும், ஆன்மாவோடும், இதயத்தோடும், மனச்சான்றோடும், மனத்தோடும் உள்ளத்தோடும் கூடிய முழு மனிதனே இதன் குறிக்கோள். இ.உ.தி ஏட்டில் இறைவனே மனித மாண்பின் ஊற்று என விளக்கப்படுகிறது. இறைவனே மனிதமாண்பை பாதுகாத்தும். வளத்தெடுக்கப்பட ஊக்கப்படுத்தியும் வருகின்றான். கிறிஸ்துவின் மனித அவதாரத்தாலும் தூய ஆவியாலும் மனிதனைப் ஒப்பற்ற ஓர்நிலைக்கு உயர்த்தினார். எனவே எங்கெல்லாம் மனித மாண்பு பேணப்படுகின்றதோ அங்கெள்ளாம் இறைவனின் பிரசன்னத்தைக் காணலாம். ஆகவேதான் திருச்சபையும் கிறிஸ்தவ சமூகங்களும் கிறிஸ்துவைப்போல மனித மாண்பைப் பேணுவதில் கடமைப்பாட்டைக் கொண்டுள்ளன.

(அடுத்த இதழில் தொடரும்)

# இளைஞர் பொழிவு

## ஆத்மா- சிந்தனைக் கதை

ஒவ்வொரு நாள் இரவு வேளையிலும் அந்த மனிதன் ஒரு கல்லறைக்கு பூக்களை கொண்டுவந்து வைத்து விம்மி விம்மி அழுதுவிட்டு விலகிச் செல்வான். ஒருநாள் அந்தக் கல்லறையின் அருகே இன்னொரு மனித உடலைக் கொண்டு வந்து புதைத்து விட்டுச் சென்றார்கள். அன்றிரவும் அந்த மனிதன் அந்த உடல் புதைத்த இடத்திற்கு போய் அழுதுகொண்டு இருந்தான். அப்பொழுது உள்ளிருந்த உடல் கேட்டது "ஏன் நீ நெடுகிலும் இங்கு வந்து போகிறாய்? உனக்கென்ன பிரச்சினை?" அதற்கு அந்த மனிதன் "நான் என் ஆத்மாவை இழந்து விட்டேன் என் வெற்றுடல் மட்டுந்தான் இங்கே உயிருடன் உலாவுகிறது" என்றான். "உயிர் வேறு ஆத்மா வேறு" என்றான். "உயிர் உடலின் இயக்க சக்தி ஆனால் ஆத்மா உளவியலின் சக்தி" என்று அடுக்கடுக்காக சொல்லிக்கொண்டு போனான். இதைத்தான் கொஞ்சம் விளக்கமாக சொல் என்று உள்ளிருந்த உடல் முனகியது. அதற்கு அவன்... ஒருவன் உலகம் எல்லாம் தனதாககிக கொண்டாலும் தன ஆனமாவை இழப்பானாகில் பயன் ஒன்றுமில்லை என்று இறைமகன் இயேசு சொன்னது உனக்கு ஞாபகம் இல்லையோ? அது போலதான் நான் உலக செல்வம் அனைத்தையும் அனுபவித்து விட்டேன். அப்போது என் ஆசை நண்பன் அடிக்கடி அழியா ஆன்மா பற்றி விளக்குவான். அதை நான் பொருட்டாக மதித்ததில்லை. அவன் இறக்கும்போது எனக்கொரு உண்மையை உணர்த்தினான் உன் ஞானக்கண்ணால் எப்போது ஒவ்வொன்றையும் பார்க்க தொடங்குகிறாயோ அப்போதுதான் நீ ஆத்மாவுக்குரியவன். இதை அவன் அடிக்கடி கூறுவான். இந்த ஞானம் அவன் உயிருடன் இருக்கும்மட்டும் வரவில்லை. இப்போது வந்தும் பயனில்லை. அவனிடமே அந்த ஆத்மா பற்றி கேட்க வேண்டும். அதற்காகத்தான் இங்கே அடிக்கடி வந்து போகிறேன் என்றான்.

பி. ஜெலிங்டன் யூலியன், அடம்பன் ம.ம.வி

தொடர் கட்டுரை ~6

# கட்டிளமையும் காதலும

- ஈழத்து ஜெகா -



## முடிவுரை - 02

நுகர்வுக் கலாச்சார நூலில் வாழ்க்கை வண்டியை இழுக்க முற்படும் இளம் தலைமுறை அனுபவிப்பதையே அடித்தளமாக் கொண்டு பெண்களுக்கு தூண்டில் போடுகிறது. புழுவிற்கு ஆசைப்பட்டுப் போகும் மீன்போல் தூண்டிலில் மாட்டிய பிறகுதான் சோகம். பெரும்பான்மை பெண்களுக்கு ஆண்களுடன் காதல் என்பது எதிர்காலத் துணைவன் என்ற மனநிலைதான். ஆண்களுக்கு தாரம் என்பது பொருளை ஆதாரமாய்க் கொண்டது: கற்கும் வயதில் கட்டிளமையினர் காதல் உறவுக்கு கல்யாணத்திற்கு அவசரப்பட்டு எடுக்கும் முடிவால் இளம் வயது மண முறிவு சாதாரணமாகி விட்டது. நமது தமிழ் நாட்டில் ஆண்டிற்கு 2500 மணமுறிவுகளாம்! இது ஆய்வுகளின் முடிவு. இறுதியில் மடியில் மழலை - மனதில் கவலை.

ஆசை நடத்தும் அறுபது நாள் நாடகத்திலும் மோகம் ஆடும் முப்பது நாள் இன்ப இரகசியத் தொடரின் முடிவில்தான் வாழ்க்கையின் கனம் தெரியும். அப்போதுதான் ஆணும் பெண்ணும் காலம் முழுவதும் கசப்பிலும் இனிப்பிலும் கசங்காது வாழ்வதன் கஸ்ரம் புரியும். துறவியாகச் சொல்லவில்லை! இளமையின் இரகசியத்தை அறியும்படி சொல்கின்றேன். பக்குவப்படாத அனுபவமற்ற வயதில் வரம்பு மீறிய வாழ்க்கை வாழ முற்படும் போது இறுதியில் இருவருக்குமிடையே ரணிலின் இடைக்கால யோசனை மாதிரி இழுபறிதான் மிஞ்சும்.

நமது பண்பாட்டில் பாலுணர்ச்சி என்பது ஒரு பாவம் என்பதாக கடந்து வரவேண்டியுள்ளது. அதை நெறிப்படுத்துவதற்கான கல்வியும் முறைப்படுத்துவதற்கான சூழலும் நம் கிராம வாழ்வு முறையில் இல்லை - அல்லது குறைவாக இருக்கின்றது. காதலர்களுக்கு கடைசியாய் வழங்கும் தண்டணை குடும்பத்தின் [illegible] கட்டிப்பார் கல்யாணத்தைக் கட்டிப்பார் என்று விட்டு விடுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் இந்த எண்ணம் அவமானகரமானது என்று கருதி மனதுக்குள் அடக்கிவிட நினைக்கின்றார்கள் அந்த எண்ணம் எவ்வாறாவது ஒருநாள் ஒசாமா பின்லாடன் போல உருவெடுக்கும். அமெரிக்காபோல் அடக்க முயல்வதால் ஏதாவது மாறுவேஷம் போட்டுக்கொண்டு அது வெளிப்படுகின்றது. இதற்குள்தான் அனைவரும் அடங்குகின்றோம் என்பதை மறந்தாலும் அதுதான் உண்மை. உணர்ச்சியில் ஓடும் பகுத்தறிவு வாகனம் மனிதன். இறக்கி வைத்த பின்தான் சுமையின் கனம் என்னவென்று சொல்ல முடிகிறதுபோல் பருவ வயதில் வாழ்க்கையின் நிஜங்கள் இயல்பாய் வருவதில்லை.

இத்தனை வரையும் பேசினேன் இதுதான் இறுதிக் கேள்வி கட்டிளமையில் காதல் செய்வது சரியா? கற்பனையில் விடை சொல்லும் பொது அறிவு அம்சமல்ல. கற்பனைகளின் வரம்புகளில் உட்கார்ந்து கொண்டிருப்பவனே(ளே) எதார்த்த சேற்றில் எளிதாய் இறங்கி விடாதே. பருவம் வருவதற்கு முன்னே பிரசவ வேதனை வந்த ஒரு பெண்ணின் நிலைபோல் முரண்பட்ட உணர்ச்சிதான் நீ நிஜம் என நினைப்பவை எல்லாம். மலர்கின்ற மொட்டினை நாம் விரல்களால் தொட்டு திறந்துவிட முடியும். ஆனால் அது மலர்ந்ததாய் ஆகாது. கட்டிளமையில் காதல் ஒருவனை சிதைக்கும். இல்லையேல் செதுக்கும். பல வேளை புதைக்கும். ஆயிரத்தில் ஒன்று விதைக்கும். அதுவும் சிலவேளை முளைக்கும். மலரத்துடிக்கும் நிமிஷங்களில் அரும்பிய அவஸ்தைகளின் இளமை ஒளி அணையும். காதலி என்று சொல்வதைவிட வாழ்க்கையில் கையாள்பவர் நாமே. ஆகவே முடிவெடுக்க வேண்டியவர்களும், செயல்ப்படுத்த வேண்டியவர்களும் நாமேதான். காதல் என்பது ஆலோசனைக்கோ விவாதத்திற்கோ உரிய விஷய்மல்ல. மணம் என்பது மனம் சம்மந்தப்பட்டதுபோல் நேசத்தின் நிஜத்தை உணர்வதென்பது சம்மந்தப்பட்ட இருவருக்கும் தவிர வேறொருவருக்கும் சாத்தியமில்லை. இதுதான் முன்கட்டிளமை கடந்த என் அனுபவ நரைகள். இதில் இன்னும் மனிதத் தனத்தை புரிந்து கொள்ளவில்லை என்பதே எனக்குப் பெருமை.

முற்றும்

# பெரியப்பா பதில்கள்

கே. மனித வாழ்க்கையில் பணத்திற்கா குணத்திற்கா முதலிடம் கொடுக்க வேண்டும்?

*செல்வி. சீ. ஜெயானி, வஞ்சியன் குளம்.*

ப. உண்மையைச் சொல்லுங்கள். இந்தக் கேள்விக்கு உங்களுக்கு பதில் தெரியாதா?

கே. பெரியப்பா, கடவுளுக்காக எத்தனை மணி நேரம் செலவிடலாம்?

*டெ. செல்வி பாய்வா, 8ம் வட்டாரம், பேசாலை.*

ப. அது ஒவ்வொருவரையும் பொறுத்தது. கடவுள் நமக்குத் தந்த வாழ்வையும் - நேரத்தையும் அவருடைய அன்பையும் எந்தளவிற்கு நாம் உணருகிறோமோ அந்தளவிற்கு நாம் கடவுளுக்காக செலவிடும் நேரத்தின் அளவும் அமையும்.

கே. நீங்கள் செக்சியான கேள்விகளை மறைமுகமாக கேட்டால் பதில் அளித்து விடுவீர்களா?

*ஆர். ராதா, மன்னார்.*

ப. சக்கரை டப்பா மீது 'மிளகாய்த் தூள்' என்று எழுதினால் எறும்புக்குத் தெரியாமலா போய்விடும்.

கே. மௌனம் என்பது என்ன?

*முகுந்தன் ராஜ், நானாட்டான்.*

ப. சில சமயங்களில் கடுமையான விமர்சனம்.



▣ கே. எதையும் படிப்பது எந்த விதத்தில் பயன் தருகிறது?

*கோகிலா வதனி, முருங்கன்.*

ப. மேலும் மேலும் படிக்க படிக்க மேலும் மேலும் நமது அறியாமையைக் கண்டு கொள்ள முடியும்.

கே. வயதுதானே வாழ்க்கையின் உரைகல்?

*மாலா, செட்டிகுளம்.*

ப. அப்படிச் சொல்ல முடியாது. வாழ்க்கை எந்த அளவுக்கு மதிப்பு வாய்ந்தது என்பதைத் தீர்மானிப்பது செயல்கள். வருடங்கள் அல்ல.

கே. துன்பம் வரும்போது சிரிங்க என்கிறீர்கள் தூக்கம் வரும் போது என்ன செய்ய வேண்டும்?

*ம. சர்மினி, ஆட்காட்டிவெளி, அடம்பன்.*

ப. பேசாமல் போய் தூங்க வேண்டும்.

கே. கிறிஸ்தவ விழுமியங்களுக்கு எதிராக சமூகத்தில் செயல்பட்டுக்கொண்டு பைபிள் வகுப்புகளுக்கும், வழிபாட்டுக் குழுவிலும் இடம்பெறும் உத்தம கிறிஸ்தவர்களைப் பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

*S.J.S. குலாஸ், பேசாலை.*

ப. அப்படிப்பட்டவர்களை நீதி மன்றத்திற்கா இழுக்க முடியும்? வாழ்வும் வழிபாடும் ஒன்றாயிருக்க முயற்சிக்க வேண்டும். அது ஒரு புறமிருக்க, ஆலயப் பணிகளில் தம்மை ஈடுபடுத்துவோரைப் பற்றி விமர்சிக்கும் உங்களைப் பற்றியும் சிந்திப்பது நல்லது...? வெளியில் நின்று விமர்சிக்காமல் உள்ளே வாருங்கள். இன்றைய திருச்சபைக்கு பார்வையாளர்கள் வேண்டாம் பங்காளிகளே வேண்டும்.

கே. மோட்சம் நரகம் இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?

*அ. சாள்ஸ் மொறாய்ஸ், அரிப்புத்துறை.*

ப. ஒரு பக்தன் மோட்சம், நரகம் எப்படி இருக்கும் என்று தனக்கு காட்டும்படி ஊக்கமாக செபித்தாராம். கடவுளின் தூதன் அவரை அழைத்துக கொண்டு போனாராம். முதலில் நரகத்தைப் போய் பார்த்தார். அங்கே இருந்தவர்களின் கைகள் மடக்க முடியாதவாறு கட்டப்பட்டிருந்தன. அங்கே எல்லா வகையான உணவு வகைகளும், பழங்கள், இனிப்புப் பண்டங்கள் என்று நிறைய இருந்தன. ஆனால் அங்கே இருந்தவர்கள் மெலிந்து வாடி வதங்கி பசியில் களைத்துப் போய் இருந்தார்கள். பின்னர் அவர் மோட்சத்திற்குப் போனார் அங்கேயும் நரகத்தைப் போலவே அங்கே இருந்தவர்களின் கைகள் மடக்க முடியாதவாறு கட்டப்பட்டிருந்தது. அங்கேயும் எல்லா வகையான உணவுகளும் இருந்தன. ஆனால் மோட்சத்தில் இருந்தவர்கள் நல்ல திடகாத்திரமாக - ஆரோக்கியமாக இருந்தார்கள். பக்தனுக்கு ஒரே ஆச்சரியம். அது எப்படி நரகத்திலும் மோட்சத்திலும் உணவு வகைகள் தேவையான அளவிற்கு உள்ளன. இரண்டு இடங்களிலும் கைகள் மடக்க முடியாதவாறு கட்டப்பட்டிருக்கிறது ஆனால் மோட்சத்தில் மகிழ்ச்சியாக இருக்கின்றனர், திடகாத்திரமாக இருக்கின்றனர் நரகத்தில் அழுகையோடும் பசியும் பட்டினியுமாக இருக்கின்றார்கள்? ஆம் அவன் புரிந்து கொண்டான் மோட்சத்தில் உள்ளவர்கள் பரந்த - பகிர்வு மனப்பான்பை கொண்டவர்கள். அங்கே தமது கையை மடக்கி தாம் சாப்பிட முடியாவிட்டாலும் ஒருவர் ஒருவருக்கு ஊட்டிவிட்டு மகிழ்ச்சியாக இருந்தார்கள். ஆனால் நரகத்தில் உள்ளவர்கள் சுயநலவாதிகள். மற்றவர்களுக்கு ஊட்டிவிட மனதில்லாதிருந்தார்கள். இதுதான் மோட்சம் நரகம் இரண்டிற்குமுள்ள வேறுபாடு

கே. கடவுளுக்கு அருகில் இருப்பது யார்?

*சாளினி, நல்லூர், யாழ்ப்பாணம்.*

ப. சூரியனுக்கு அருகே கிரகங்கள் இருக்கின்றன. கடவுளுக்கு அருகே குழந்தைகள் இருக்கிறார்கள்.

▣ இந்த அடையாளமிடப்பட்ட கேள்வி பாராட்டுக்குரியதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

# பிறந்த நாள் வாழ்த்துக்கள்

## 1வது பிறந்த நாள் வாழ்த்து




லுயின்ரன் பிரதீஸ்

ஜீத்தான்குளம் வட்டக்கண்டலைப் பிறப்பிடமாகவும் தோட்டவெளியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. திருமதி டொணி லூயிஸ் ஜொய்சி தம்பதியினரின் செல்வப் புதல்வன் லுயின்ரன் பிரதீஷ் தனது முதலாவது பிறந்த நாளை 11.08.2003 அன்று பருத்திப்பண்ணையிலுள்ள தனது சின்ன அப்பம்மா வீட்டில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மாமார், தாத்தாமார், அப்பப்பாமார், அம்மம்மாமார், மாமிமார், சித்தப்பாமார், மாமி - நித்தியா, சித்தப்பா – நிரோஷன், பெரியப்பா, பெரியம்மா, அக்கா விதுஷா, அண்ணன் றொஷான், அத்தை, மாமா, மச்சாள் - திவ்யா, குட்டி மச்சாள் - துஷிக்கா, பூட்டமார், பெரிய மாமா, சின்னமாமா, சீனிமாமா, குட்டி சித்தி, ஆகியோர் குழந்தை இயேசுவின் அருள் பெற்று பல கலைகளும் கற்று பல்லாண்டுகள் சீரும் சிறப்புடனும் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- சீனி மாமா,
பி. பெனில்டஸ் தற்குரூஸ், கொழும்பு - 08

## 1வது பிறந்த நாள் வாழ்த்து




செல்வி. நி. நிலுக்ஷிகா

தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்த நித்தியானந்தன் டென்சி தம்பதிகளின் செல்வப் புதல்வி நிலுக்ஷிகா 16. 08. 2003 அன்று தனது முதலாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, தாத்தா, மாமாமார் (டொனால்ட், டிலைக்ஷன், டனிஸ்ரன்), சித்தி (டிலறின்) மற்றும் அப்பமமா, அப்பப்பா, மாமாமார், சித்திமார், சித்தப்பா, அத்தை, தொட்டம்மா, தொட்டப்பா, மற்றும் உற்றார் உறவினர் இறையாசீர் பெற்று பலலாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:-
டொனால்ட் பெனான்டோ, தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.

# நீங்காத நினைவுகள்

## 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 19 - 10 - 1938 உதிர்வு 17 - 07 - 2001



### பி. மொணிக்கா கூஞ்ஞ

(இளைப்பாறிய ஆசிரியர்)

வங்காலை

அன்புள்ள அம்மா, அன்புள்ள மாமி, அன்புள்ள அம்மம்மா, அப்பம்மா, ஆண்டுகள் இரண்டு ஆனாலும் எம்மனமோ ஆறுதில்லை. உம் அன்பு மொழி, அமைதியான வாழ்வு, எம்மில் கொண்ட பாசம், அத்தனையும் நினைந்து நினைந்து ஏங்குகின்றோம். 38 ஆண்டுகள் நல் ஆசிரியையாய் பணியாற்றி காலம் நிறைவுற்றபோது இளைப்பாறச் சென்றீர்கள். ஆனாலும், எம் மனம் உம் நினைவால் நெகிழ்கின்றது. உம் ஆன்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 27 - 03 - 1938 உதிர்வு 07 - 08 - 2002



### அ. யோசவ் அன்ரனி

குருமன்காடு,

வவுனியா

அதிகாலை துயில் எழுவீர்
ஆலயம் சென்றிடும் நோக்கோடு
ஆர்வமாய் சென்றிடுவீர்
ஆண்டவனின் பாதமதில் பணிசெய்ய
மண்ணிலே உம் பணி போதும் என்று
விண்ணிலே பணிபுரிய இறைவன்
உம்மை அழைத்தாரோ ஐயா,
ஆண்டு ஒன்று மறைந்தபோதும்
உம் நினைவு எம்மைவிட்டு
மறையவில்லை
உமக்கு நாம் காட்டும் அன்பு
உமக்காக செபிப்பதுதான் என்றும்.
ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கும
அன்பு மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர், மாமி, மைத்துனர், உறவினர்.

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 25 - 07 - 1925 உதிர்வு 22 - 08 - 2002



### இராசகன்னி - திரேசம்மா

(விடத்தல் தீவு

ஆண்டு ஒன்று சென்றாலும் எங்கள் உள்ளத்திலே இன்றும் அணையாத தீபமாய் ஒளிர்விட்டுப் பிரகாசிக்கும் எங்கள் அன்புத்தாயே, உமது பிரிவால் கலங்கித் துயர் அடையும் அன்புக் கணவர் அன்பு மக்கள், மருமக்கள், சகோதரியர், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சுற்றத்தார், வடிக்கும் கண்ணீர் அஞ்சலி இதுவாகும். இவருடைய ஆத்தும இளைப் பாற்றிக்காக 22.08.2003 வெள்ளி காலையில் மன்னார் பேராலயத்திலும் தோட்டவெளி, விடத்தல் தீவு, இரணை நகர், தேவாலயங்களிலும் நடைபெறும் திருப்பலியில் இணைந்து மன்றாடும்படி அன்பினால் கேட்கும் உங்கள் நண்பன் சு. சந்தியாப்பிள்ளை, இளைப்பாறிய அதிபர்.

## 31ம் நாள் நினைவு

மலர்வு 07 - 11 - 1947 உதிர்வு 15 - 07 - 2003



### வர்ணகுலசிங்கம் திருச்செல்வம் கிருபாநிதி

உயிர்த்தராசன்குளம், முருங்கன்


இறைபக்தி மிகுந்தவரே இரக்கத்தின் இருப்பிடமே, மண்ணிலே நீர் மறைந்தாலும் - ஐயா எம் கண்ணிலே மறையவில்லை. அன்போடு எமை வளர்த்த நாட்கள் எம் மனத்திரையில் விழுகுதே. வசந்தம் கமழும் பூக்களாய் அமைதி கொண்ட சுபாவம்! கோபமது கொள்ளா நேயம்! பாவமது எண்ணா நல் இதயம்! எதையும் தாங்கும் நல் இதயமாய் வாழ்ந்தீர். எம்மால் தாங்க முடியவில்லையே உம் பிரிவை. ஐயா கற்றவரும் மற்றவரும் மறைந்திடுவர் கணப்பொழுதில். காலத்தின் முடிவுரையில் இறைவனடி சேர்ந்து விட்டீர். விண்ணிலே இறைவனோடு வாழ நித்தமும் வேண்டுகிறோம். உம் பிரிவால் துயருறும் அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், உற்றார் உறவினர். (இரங்கல் திருப்பலி 16. 08. 2003 அன்று மாலை 5.30 மணிக்கு முதலைகுத்தி லூர்து அன்னை கெபியில் ஒப்புக்கொடுக்கப்படும்)

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்


## மன்னா சந்தாதாரர்களே!


உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா
உள்நாடு - இலங்கை ரூபா 200
வெளிநாடு - இலங்கை ரூபா 1000 (10 யூரோ)



## அனைத்துத் தொடர்புகளுக்கும்





பதிப்பாசிரியர்,
மன்னா
திருமறைப்பணி நிலையம்,
புனித செபஸ்ரியார் வீதி
மன்னார்.

The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's Street
Mannar,
Sri Lanka.

தொலைபேசி : 023 - 2232377

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல-15

## திமொத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் திருமுகம்

உங்கள் விடைகளை 20. 8. 2003 க்கு முன் எமக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | * | 03 | | | | | | | | |
| | | 04 | | 05 | | | | | | |
| | | | | | * | | | | 06 | |
| | | | 07 | | | | | | * | |
| | | | 08 | | | | 09 | | | 10 |
| | 11 | | 12 | | | | | | | |
| | | | | | | * | | | | |
| | | | | | | | | 13 | | |
| 14 | | 15 | | | | * | | | 16 | |
| 17 | | | | 18 | 19 | | | | | 20 |

### இடமிருந்து வலம்

1. அவர்----------எனக்கு மிகவும் பயனுள்ளவர்.
3. ஆனால் கடவுளின் வார்த்தையைச் -----முடியாது
5. கிறிஸ்து இயேசுவிடம் இணைந்து ---------------டன் வாழ விரும்புவோர் அனைவரும் இன்னலுறுவர்.
7. நீ குழந்தைப் பருவம் முதல் ------------------க் கற்று அறிந்திருக்கிறாய்.
8. ---------அந்த நடுவர் எனக்கு மட்டுமல்ல அவர் தோன்றுவார் என விரும்பிக் காத்திருக்கும் அனைவருக்குமே தருவார்.
9. கண்டித்துப் -------------------- கடிந்து கொள். மிகுந்த பொறுமையோடு கற்றுக்கொடு.
12. கடவுள் நமக்குக் கோழையுள்ளத்தினை அல்ல வல்லமையும் ----------- கட்டுப்பாடும் கொண்ட உள்ளத்தையே வழங்கியுள்ளார்.
14. ஒரு பெரிய வீட்டில் பொன், வெள்ளிக்கலன்கள், மட்டுமல்ல ----------- மற்றும் மரத்தாலான கலன்களும் உள்ளன.
17. உண்மையின் வார்த்தையை -----.....-யாகப் பகுத்துக் கூறும் பணியாளாகிய நீ வெட்கமுற வேண்டியதில்லை.

### மேலிருந்து கீழ்

1. உன்மீது என் கைகளை வைத்துத் ----------------- அமர்த்தியபோது உனக்குள் எழுந்த கடவுளின் அருள்கொடையினைத் தூண்டி எழுப்புமாறு, நினைவுறுத்துகிறேன்.
2. இதன் பொருட்டே நான் இவ்வாறு ------------------- வருகிறேன்.
4. ஆண்டவர் உனக்கு அனைத்தையும் புரிந்து கொள்ளும் --------------யைத் தருவாராக.
5. வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் ------------------ச் செய்வதில் நீ கருத்தாயிரு.
9. உலகப் போக்கிலான வீண் -------------------களை விலக்கு.
10. எனவே நம் ஆண்டவருக்கு நீ --------------- பகர்வதைக் குறித்தோ அவர் பொருட்டு நான் கைதியாக இருப்பதைக் குறித்தோ வெட்கமடையத் தேவை இல்லை. (இறுதி எழுத்து முதலாவதாக நிற்கிறது)
11. என் மகனே நீ கிறிஸ்து இயேசுவின் அருளால் ---------------------- பெறு.
12. நான் ---------------------- செய்தி நிறைவுற்று, அனைத்து நாட்டவரும் அதனைக் கேட்க வேண்டுமென்று ஆண்டவர் என் பக்கம் நின்று எனக்கு வலுவூட்டினார்.

### வலமிருந்து இடம்

2. நற்செய்தியின் பொருட்டுத் ------------------ என்னுடன் பங்குகொள். (இறுதி எழுத்துக்கு முன்னுள்ள எழுத்து விடப்பட்டுள்ளது)
5. --------------------- நாளில் ஆண்டவரிடம் இரக்கத்தைக் கண்டுகொள்ள அவருக்கு ஆண்டவர் அருள்வாராக.
6. வீரர் எவரும் விதிமுறைகளுக்குட்பட்டு விளையாடினால் மட்டுமே ---------------------- சூட முடியும் (இரண்டாவது எழுத்து முதலாவதாய் நிற்கிறது)
8. ------------------- அனைத்திலும் அறிவுத் தெளிவோடிரு.
12. படைவீரர் எவரும் பிழைப்புக்காகப் பிற -------------களில் ஈடுபட மாட்டார்.
13. நமக்குள் குடிகொள்ளும் தூய ஆவியால் ஒப்படைக்கப்பட்ட --------போதனையைக் காத்துக்கொள்.
16. கடவுள் ---------------------- அடித்தளம் உறுதியாய் நிலைத்து நிற்கிறது.
20. ஆண்டவரின் ------------------- சண்டையிடாதவராய் இருக்க வேண்டும்.

### கீழிருந்து மேல்

6. ---------------- சொற்களைப் பற்றிச் சண்டையிடுவது பயனற்றது.
11. அவர் என்னிடம் ஒப்படைத்ததை இறுதி நாள்வரை காத்திட ------------- என்கிற உறுதியான நம்பிக்கை எனக்கு உண்டு.
12. "ஆண்டவரின் பெயரை அறிக்கையிடுவோர் ------------------ விட்டுவிட வேண்டும் என்றும் பொறிக்கப்பட்டுள்ளது."
13. நாம் அவரை மறுதலித்தால் அவர் ------------------ மறுதலிப்பார்.
14. -------------------- அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது.
15. கிறிஸ்து இயேசுவின் நல்ல படைவீரனைப் போன்று துன்பங்களில் ------------- கொள்.
16. நாம் அவரோடு ---------------------- அவரோடு வாழ்வோம்.
18. ஏனெனில் ஒருவேளை அவர்கள் .............. அறிந்துணர்ந்து மனம்மாறக் கடவுள் அருள்கூரலாம்.
19. தாவீதின் ------------- வந்த இயேசுக்கிறிஸ்து இறந்து உயிர்பெற்று எழுந்தார் என்பதே என் நற்செய்தி.
20. நான் இப்போதே என்னைப் ----------------------கப் படைக்கிறேன்.

விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 14ற்கான முடிவுகளை ஓகஸ்ட் மாத மன்னாவில் எதிர்பாருங்கள.

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி இல. 13ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்

*முதலாம் பரிசு*
அ. வெ. றஜீவன்,
ஆலங்குளம்,
வட்டக்கண்டல்.

*இரண்டாம் பரிசு*
ஜெ. நித்தியா,
நொச்சிக்குளம்,
உயிலங்குளம்.

*மூன்றாம் பரிசு*
பி. சுரேந்தினி குரூஸ்,
ஒல்லிமோட்டை சாவற்கட்டு,
மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 155 பேர்
சரியான விடைகளை எழுதியோர் 145 பேர்

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 13ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

## பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. B. பெசில்லா ஜெனிலா கூஞ்ஞ, தாழ்வுபாடு, மன்னார்.
2. V. சுமலதா றோச், 5ம் வட்டாரம், பள்ளிமுனை, மன்னார்.
3. சிலுவைராசா றோமி, சாளம்பன், ஆட்காட்டிவெளி,
4. ஆ. மரியதிரேசா டயஸ், 8ம் வட்டாரம், லூர்துவீதி, பேசாலை.
5. ம. பத்திநாதன் வீணா தம்பதிகள், பள்ளிமுனை, மன்னார்.
6. பெ. லெற்றிசியா பீரிஸ், 7ம் வட்டாரம், பேசாலை.
7. பி. கஸ்தூரி, இறம்பைக்குளம், வவுனியா.
8. ம. வியாகுலராணி லம்பட், அன்புக்கன்னியர் இல்லம், முருங்கன்
9. அ. அஸ்வினி, மாவிலங்கேணி, முருங்கன்.
10. நா. அனோதா, இல.11,புதிய வீட்டுத்திட்டம், முதலியார் குளம்.
11. யோ. மதிலா கட்ஷணி குரூஸ், 4ம் வட்டாரம், வங்காலை.
12. அ. ஸிறோமி, பெரிய கோமரசன்குளம், வவுனியா.
13. S. அனுஷா, நொச்சிகுளம், உயிலங்குளம்.
14. கொ. திரேசா பீரிஸ், 7ம் வட்டாரம், யூட்வீதி, பேசாலை.
15. C.T. மாசிலா, நாவற்காடு, மாம்புரி, புத்தளம்.
16. M.B. றோச், இலங்.போ.வரத்துச்சபை காப்பாளர்,மன்னார்சாலை
17. அ. வெனிற்றா குரூஸ், தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
18. ஞா.பிறக்ஷன் மடுத்தீன், தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
19. வி. சியாமளா பெற்றோளி,ஆலடி ஒழுங்கை, கோவில்குளம்.
20. பற்றிக் நேசம், நாவற்காடு, மாம்புரி, புத்தளம்.
21. திருமதி. மனோறஞ்சன் யசிந்தா, மொன்சிறோன், பிரான்ஸ்
22. P. துஷ்யந்தி, திருக்குடும்பக் கன்னியர் மடம், மன்னார்.
23. எஸ். சுகந்தி, பரிகாரிகண்டல், முருங்கன்.
24. எல். றோகினி, எமில்நகர், மன்னார்.
25. F. கஜேந்திரன், கன்னாட்டி, அடம்பன்.
26. A. யூட் பற்றிசியா, கன்னாட்டி, அடம்பன்.
27. வே. அலன் றோஜ், இசைமாலைத் தாழ்வு, கற்கடந்தகுளம்.
28. மனோகரி, 27.செனு் பீற்றர்ஸ் லேன், நிந்தனி, புத்தளம்.
29. ரவிராஜ் - தனுறாஜ் 53/16 கற்குழி, வவுனியா.
30. அ. அன்ரனிஸ் பீரிஸ், அரிப்பு, முருங்கன்.
31. ஜெயந்தி, இல.27, சென்பீற்றர் லேன், நித்தனி, புத்தளம்.
32. ஜெ. மேரியோசவின், கடைவீதி, நானாட்டன்.
33. யே. சுவர்ணா, வஞ்சியன் குளம், வங்காலை.
34. K.A. அலைக்ஸ் பிவீசன், மடுமாதா சிறிய குருமடம், மன்னார்.
35. செ. கிளான்சி, தலைமன்னார் பியர், தலைமன்னார்.
36. அருட்செல்வி பெனாண்டோ, பெ.ப.விரிச்சான், மடு.
37. செ. விஜிதா, மாதாகிராமம், முருங்கன்.
38. யோ. ருபினா குரூஸ், தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
39. ஜெ. ஜெறோம், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
40. க. மேரி டிவோட்டா, பள்ளக்கமம், முருங்கன்.
41. சீ. யசிந்தா, சென்மேரிஸ் றோட், 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
42. ஜெயந்தினி பொன்ராஜ்குமார், 1001லவுசான், சுவிர்சலாந்து.
43. கி. அன்ரனீற்றா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
44. இ. றியான், மணற்குளம், உயிலங்குளம், மன்னார்.
45. யோ. மேரி டினோஜினி,'NO. 16, குருநகர், யாழ்ப்பாணம்.
46. பெ. மெர்லின் டயஸ், 7ம் வட்டாரம், பேசாலை.
47. க. பேனாட்லூக், மாவிலங்கேணி, முருங்கன்.
48. அ. பவியோலா பீரிஸ், அரிப்பு, முருங்கன்.
49. H.L. டிலக்சன், சிறுத்தோப்பு, பேசாலை.
50. M. டயானா, அளவக்கை, முருங்கன்

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல 13

*(புனித பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய 1ம், 2ம் திருமுகம்)*

### சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. துன்புறுகிறீர்கள் (2தெச.1:5)
4. மனந்தளர (தெச.3:13)
7. பெருமகிழ்ச்சி (1தெச.3:9)
9. சுமை (2தெச.3:8)
10. புகழ் (2தெச.3:1)
12. கலங்கி (2தெச.1:2)
19. உழைப்பு (1தெச.3:5)
20. கருதி (1தெச.2:4)
21. உங்களை (1தெச.5:12)
22. முத்தம் (1தெச.5:26)

**வலமிருந்து இடம்**

3. அவர்கள் (2தெச.2:10)
6 திண்ணமாய் (1தெச.5:2)
8. நம்பி (2தெச.2:12)
11. பெறுவோம் (1தெச.5:8)
13. முழங்க (1தெச.4:10)
14. அலல (1தெச.1:8)
15. வார்த்தை (2தெச.3:1)
18. தெய்வம் (2தெச.2:4)

**மேலிருந்து கீழ்**

1. துயருற (1தெச.4:13)
2. கனிவுடன் (1தெச.2:7)
3. அன்பையும் (1தெச.3:6)
5. பெருமையாகப் (2தெச.1:4)
8. நம்பிக்கை (1தெச.1:3)
9. கூடாது (1தெச.4:13)
14. அவரையே (1தெச.1:10)
17. கைம்மா (2 தெச.1:6)
18. தெரியும் (1தெச.2:2)

**கீழிலிருந்து மேல்**

11. பெறுவீர்கள் (1தெச.4:12)
13. முந்திவிட (1தெச.4:15)
16. வல்ல (2தெச.2:9)
18. தெளிவோடும் (1தெச.5:6)
19. உழைக்க (2தெச.3:10)
21. உழைத்து (1தெச.4:11)
22. முகத்தை (1தெச.5:27)



## ஓர் ஆத்மா விருந்துக்கு அழைக்கப்படுகின்றது....!

### (6ம் பக்கச் சிறுகதையின் தொடர்ச்சி)

ஐயோ என்ர ராசா கிடக்கிற கோலத்தை என்னால சகிக்க முடியாமக் கிடக்கே.. ஆண்டவனே உன்ர சோதனை இப்பிடியா?" மேரி தொண்டை கிழிய ஒப்பாரி வைத்தாள். துடித்தெழுந்த யோசேப்பு கலங்கிய உணர்வு நிலையில் மடிப்பிச்சைபோல கெஞ்சி ஆரிட்டையாவது காசு கேட்டுப் பார்ப்பம் என்ற நம்பிக்கையுடன் ஊருக்குள் வீடு வீடாகப் போனான். "இல்லை இருந்தா தராமலா விடுவன்" "வச்சுக்கிண்டா இல்லண்டு சொல்லுறன்" "சத்தியமா ஒரு சதம்கூட இல்லை" "என்ன துணிச்சலிலிடா நீங்க புள்ளைப் பெறுறியள்... நாய் குட்டி போடுறமாதிரி பெத்துப்போட்டு இப்ப வளர்க்கத் தெரியாம வீடுவீடாக் கெஞ்சி பிச்சை கேட்டுத் திரியறது தூ...." நம்பிப்போன ஓட்டு வீடுகளில் கிடைத்த கைவிரிப்புக்கள். ஏமாற்றத்துடன் நடந்தான் யோசேப்பு – எதிரே - மூச்சிறைக்க ஓடிவந்த பக்கத்து வீட்டு சிறுவன் "அண்ணன் உங்கட பயல் செத்து பொயித்தான். சுறுக்கா ஓடி வாங்கோ" இளைக்க இளைக்க சொல்லிவிட்டு வழி விலத்தி நின்றான். வானத்தில் இருந்து தலையில் பாறாங்கல்லொன்று விழுந்தது போன்ற கலக்கத்தில் யோசேப்பு தரித்து நின்றான். தூரத்தில் கிராமத்தின் எல்லையில் மணல் மேட்டில் அமைந்திருந்த சவக்காலையில் - புதைக்கப்பட்டிருக்கும் அவனுடைய தாய் அன்னம்மாக் கிழவியின் ஞாபகம் ஏனோ சட்டென்று மனத்திரையில் தோன்றி மறைந்தது.

யோசேப்பு கிழவிக்கு ஒரே மகன் "என்ர அம்மா இருந்திருந்தால் எனக்கு இந்தக் கஷ்டம் வந்திருக்குமா சின்ன வயதில அப்பாவைப் பறிகொடுத்த என்னை அம்மாதானே கஷ்டப்பட்டு அப்பம் சுட்டு வித்து வளர்தாக இப்ப ஒரு ஆண் குட்டியை காப்பாத்திக்க முடியாம ஐயோ" அவன் மனம் அழுதது. அவன் நடந்தான் வீட்டில் ஊர்ச்சனங்கள் 'குய்' யென மொய்த்திருந்தனர். வீட்டின் கன்னிமூலையில் தாயின் மடியில் பசிக் கடியால் வலிப்பெடுத்து மரணித்துப்போன பாலகனின் உடல் விறைத்துக் கிடந்தது.

விடிகிறது - சங்கக் கடையில் இருந்து வாங்கிவரப்பட்ட சவர்க்காரம் அடைக்கப்பட்டு வரும் இரண்டு வெற்றுப் 'பக்கீசுப்' பெட்டியில் ஒரு சவப்பெட்டி மூட்டப்பட்டு பகல் பொழுது உச்சிக்கு வருமுன்னே இறுதியாக சா வீட்டில் தரித்து நின்ற முப்பது பேரில் அரைவாசிப் பேருடன் - மரண ஊர்வலம் சவக்காலையை நோக்கி நகர்ந்தது.

ஊர்வலத்தில் கலந்துகொண்ட கிராமத்து தலைமிதந்த புள்ளியான சந்தியோகுக் கமக்காரர் அழுதுகொண்டு தள்ளாடியபடி நடந்த யோசேப்பின் தோளில் மெதுவாகததட்டி "யோசேப்பு அழாதேடாப்பா போன மகன் திரும்பி வரப்போறானே? நடந்தது நடந்து போச்சு... பேசாமல் விட்டுப்போட்டு பொடியன்ட ஆத்துமத்துக்கு எந்த ஒரு குறையும் இல்லாம ஒரு பெரிய 'பிச்சைச்சோறு' காய்ச்சிக் குடு குறை தீர்ந்த மாதிரிப் பொயிடும்... காசு வேணுமெண்டால் கேளு நான் தாறன். சாச்செலவுக்கு ஐஞ்நூறு ரூபா தந்திருக்கிறன். ஆத்துமத்துக்கு சோறு காய்ச்சிறதெண்டாலும் ரெண்டாயிரமெண்டாலும் வேணும்... ஒண்டுக்கும் யோசிக்காத... நான் உதவி செய்யிறன்... உன்ர ரெண்டு ஏக்கருக்கான காணி 'உறுதி' என்னட்டத்தானே அடைவு கிடக்கு. உறுதி அன்னம்மா கிழவியின்ர பேரில இருக்குது என்ன? தன்ர கண்ணுக்குப் பிறகு உனக்கெண்டுதானே எழுதியிருக்குது... அதை உன்ர பெயரில மாத்தி எழுதி... பிறகு என்ர பெயரில மாத்தி எழுதிறதுதானே... வசதியான நேரத்தில காசை தந்திற்று உன்ர பேரில திருப்பி எழுதிக்கொள்ளன்... அப்பிடி இல்லாட்டி 'அறுதியா' எனக்கு எழுதித்தாறதெண்டாலும் தா சந்தியோகு கமக்காரர் போட்ட தூண்டிலில் அகப்பட்ட மீனாக யோசேப்பு மெதுவாக நடந்தான்.

யோசேப்பு பாலகனை பறிகொடுத்து எட்டு நாட்களுக்கு மேலாகியும் -ஆத்துமத்துக்கு எந்த வித முயற்சியும் செய்யாமல் சோர்ந்துபோய் இருந்தான். சந்தியோகு கமக்காரர் ஒரு மாலை வேளை யோசேப்பின் வீட்டுக்கு வந்து என்ன யோசேப்பு பொடியனுக்கு 'ஒண்டும்' செய்யாம இருக்கிறாய்...ஆத்துமத்திற்கு செய்ய வேண்டிய கடமையை அந்த அந்த நேரத்தில செய்து போடனும் கண்டியோ. செத்து எட்டாம் நாளிலேயே செய்ய வேண்டிய கடமையை.....நீ கவனிக்காமல் விட்டிட்டு சும்மா இருக்கிறாய்... பொடியனுக்கு ஒரு வயசுக்கு மேலதானே.... சோறு தின்னக்கூடிய பருவம்... செய்யிறதெண்டால் ஒரு மாதத்திற்குள்ள செய்து முடி.... நான் உதவி செய்யிறன் என்று சொன்னனான்தானே.." இப்படி உசார்படுத்தினார்

ஓம் ஐயா, இந்த மாத முடிவில செய்யலாமென்று யோசிச்சிருக்கிறன். " என்று யோசேப்பு அமைதியாகச் சொன்னான்.

••• ••• •••

செபமாலை மணிகள் உருண்டு ஓய்வு கண்டன. தொடர்ந்து பல வேண்டுதல்கள். பல்வேறு புனிதர்களின் ஊடாக.... இறைவனிடம். மேசை ஓதுதலின் இறுதிக்கட்டம். சட்டியில் இருந்த ஆசி நீர் விருந்துப் படையலின்மேல் தெளிக்கப்படுகிறது. வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருந்த 'படையல்' திறந்துவிடப்படுகிறது. ஆத்துமம் விருந்தை சுவைக்க வருகை தரும் வேளை-

"எங்கள் மத்தியில் இருந்து பிரிந்து விட்ட - மரித்த கிறிஸ்தவன் சிலுவைதாசனின் ஆத்துமமத்திற்காகப் படைக்கப்பட்டிருக்கும் இந்த விருந்த் ஏதேனும் றகள் இருந்தால் பொறுத்தருளி ... சிலுவைதாசனின் ஆத்துமம் இந்த விருந்தை ஏற்றருளுமாறு வேண்டிவாமாக." அந்தோனிக்கிழவன் செபம் சொல்லி களைத் நிலை. - குரலில் உணரந்முடிந்தது.

எந்த விதமான குறைகளும் இல்லாத விருந்து... ஆத்துமத்தின் திருப்திக்கு கரைத்து வைக்கப்பட்டிருக்கும் பால் மட்டுமே போதுமானது... ஆனால் அந்த தேவைக்கும் மேலாக விதம் விதமான பலகாரங்கள், விசுக்கோத்துக்கள், பழங்கள், சோறு, இறைச்சிக்கறி... எத்தனை விதமான பண்டங்கள். இறந்துபோன பாலகன் உண்டறியாத... உண்பதற்கான பருவம் வராத... வயதுவந்த பண்டங்கள் இவை எல்லாம் ஏன்?... ஏன்? ஒரு சொட்டுப் பாலுக்காக தொண்டை வரண்டு குடல் காய்ந்து - கருகி வலியெடுத்து மரணித்த பாலகனுக்கு... கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் செய்வது போன்ற... அர்த்தம் இல்லாத விருந்துக் குவியல் இவையெல்லாம் ஏன்? உடலைவிட்டு அகன்றுபோன ஆன்மாவுக்கு - உயிருடன் இருப்பவர்களால் செயயபபடும இந்த விருந்து வெறும சமபிரதாயநதானா? உண்மையில் இறந்துபோன ஒரு மனிதனின் ஆன்மா பூமியில் உடற் கூட்டில் தங்கியிருந்த காலத்தில் உண்ட... உ ண்ண விரும்பிய உணவுப்பதார்த்தங்களை ஒரே பார்வையில் உண்டுருசிக்க திரும்பவும் வருவதுண்டா, செபமாலை உச்சாடனங்களில் இருந்து கவனத்தை அறுத்த நிலையில் சுய சிந்தனையில் ஆழ்ந்திருந்த யோசேப்பு இப்படியெல்லாம் சிந்தித்துப்பார்த்தான். கோர்வையாக வந்து குவிந்த கஷ்டங்களை பின்னோக்கி அசைபோட்டுப் பார்த்த அவனது சிந்தனை ஓட்டம் கூர்மையடைந்து இப்படியான கேள்விக்குறியில் தரித்து நின்றது. செபம் முடிவடைகிறது. சிறுதலைகள் சலசலக்கின்றன. "சின்ன ஆட்கள் எல்லாரும் இருந்த இடத்திலேயே இருங்க... இருக்கிற 'சாமான்களை' எல்லாருக்கும் புறிச்சுத்தருவம்... இருங்கோ..." 'பெரிய தலை' ஒன்று கட்டளை பிறப்பித்தது. 'இந்தா யோசேப்பு கிளாசில இருக்கிற பாலை நீதான் குடிக்கவேணும்" அந்தோனக் கிழவன் பால் கிளாசுடன் யோசேப்புக்கு முன்னால் நின்றார்."எனக்கு வேணாம் ஐயா... புண்ணியம் கிடைக்கும் குழந்தைப்பிள்ளை இங்க ஆராவது இருந்தா அதுக்கு குடுங்க... என்ர மகன்ர பேரால பசி ஆறட்டும் ஊ... ஊ... என்ர ராசா... ஒரு சொட்டு பாலுக்கு வழியில்லாம தொண்டை வரண்டு குடல் கருகி... ஐயோ" வேதனையின் வெக்கை வெடித்துச் சிதறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

அமைதியின் கருவிகளாக

# ஊடகங்கள் திகழட்டும்

## பாப்பரசர் வேண்டுகோள்

திருச்சபை யூன் 1ம் நாள் அன்று சர்வதேச சமூகத்தொடர்பு நாளைக் கொண்டாடியது. திருத்தந்தை 23ம் அருளப்பரின் "அவனியில் அமைதி" மடலின் ஒளியில் "நீடித்த நிலையான அமைதிக்காக சமூகத் தொடர்பு நிறுவனங்கள் உறுதுணையாக இருக்கட்டும்" என்ற பொருளில் கொண்டாடப்பட்ட சமூகத் தொடர்பு மூவேளை செபஉரையில் திருத்தந்தை அமைதியின் கருவிகளாக ஊடகங்கள் திகழட்டும் என்றார். மேலும் உண்மையின் நீதியின் அன்பின் விடுதலையின் சமூகத்தைக் கட்டியெழுப்ப ஊடகங்கள் ஒத்துழைக்க வேண்டும். அதுவே தலையான பணியாகக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். ஊடகப்பணியாளர்கள் சமாதானத்தின் கருவிகள் என்பதையும் நினைவுபடுத்தினார்.

அன்பியங்களின் ஆரம்பம் பற்றிய தேடல்கள்.......

# ஆபிரிக்கா கண்டத்தில் அன்பியங்கள்



1971ம் ஆண்டு உரோமை நகரில் நடைபெற்ற ஆபிரிக்க ஆயர்களின் மகா நாட்டின்போது, ஆபிரிக்க நாட்டு ஆயர்கள் தங்கள் மறைமாவட்டங்களில் அன்பியங்கள் தோன்றியிருப்பதாகத் தெரிவித்தனர். இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அன்பியங்கள் தோன்றிய அதே காலகட்டத்தில், அந்நாடுகளோடு எவ்விதத் தொடர்பும் இன்றி அன்பியங்கள் இயல்பாகவே, ஆபிரிக்க நாடுகளிலும் தோன்றின. இது தூய ஆவியின் தூண்டுதலால் எழுந்தவை எனக் கருதலாம்.

இலத்தீன் அமெரிக்க நாடுகளில், அன்பிய வரலாற்றின் தொடக்கத்தில் ஒரே நேரத்தில் அனைத்து ஆயர்களிடமிருந்தும் அதற்கு ஆதரவு கிடைக்கவில்லை. ஆனால், ஆபிரிக்க நாடுகளில் அன்பியங்கள் திருச்சபைத் தலைவர்களின் ஆதரவைப் பெற்றிருந்தன. இதிலிருந்து அன்பியங்களை ஆயர்கள் உற்சாகப்படுத்தி, ஆதரவு கொடுத்து, வளர்த்து வந்தது தெளிவாகின்றது.

ஆபிரிக்காவில் அன்பியங்கள் பல ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபட்டிருக்கின்றன.

1980ம் ஆண்டு அளவில், பல ஆபிரிக்க நாடுகள் விடுதலை பெற்றன. விடுதலை பெற்ற மக்கள் முதலில் சுதந்திரக் காற்றை சுவாசித்தனர். ஒரு சில ஆண்டுகளில் தங்களை அடிமைப்படுத்துகிறவர்கள் அந்நிய நாட்டு காலனி ஆட்சியாளர்கள் வழியாக அன்பியங்களை உருவாக்கி இருக்கின்றன.

கென்யா நாட்டு ஆயர்கள், அங்கு நிலவிய ஒடுக்கு முறைகளை வன்மையாய் எதிர்த்தபோது, அன்பியங்கள் சிறப்பான பங்கு ஆற்றியிருக்கின்றன. மேலும் 1993ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சாதாரண மக்கள்கூட அரசியல் விழிப்புணர்வோடு நடந்துகொண்டது வெளிப்பட்டது. பொதுவாக அரசியல்வாதிகளுக்கும் மக்களுக்குமிடையே குருக்கள் இடைநிலையாளர்களாய் இருப்பார்கள். ஆனால் 1993ம் ஆண்டு, பாமர மக்கள் தங்கள் அன்றாடப் பிரச்சினைகளை அரசியல்வாதிகளோடு நேருக்கு நேராக விவாதிக்கும் திறமையைப் பெற்றிருந்தார்கள் அதற்குக் காரணம் அன்பியங்களில் அவர்கள் பெற்ற பயிற்சி ஆகும்.

## மன்னார் நலன்புரிவாழ் மக்களுக்கு வாழ்வுதயத்தின் உதவிகள்

மன்னார் மாவட்டத்தின் கற்கிடந்தகுளம், ஜீவநகர், கூழிமோட்டை, பேசால்ல போன்ற நலன்புரி நிலையங்களில் உள்ள இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளை அறிந்து வாழ்வுதயம் உதவிகளை செய்துவருகிறது. தேவையை அறிந்து உதவியை வளங்குவதற்கு ஏற்றாற்போல சென்ற வாரம் கறகிடந்த குளம் பகுதியில் 58 குடும்பங்களுக்கும், ஜீவநகரில் 336 குடும்பங்களுக்கும், களிமோட்டையில் 162 குடும்பங்களுக்கும் இன்னும் பேசாலையில் 525 குடும்பங்களுக்கும் வாழ்வுதயத்தினால் பல வகையான ஆடைகள் வளங்கப்பட்டன. இந்நிறுவனமானது முன்னைய போர்ச்சூழலில்கூட புலம் பெயர்ந்து வாழும் மக்களின் உடனடித்தேவைகள் மற்றும் இல்லிட வசதிகள் போன்றவற்றை அப்பிரதேசங்களுக்கு சென்று வழங்கி வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாழ்வுதய நிறுவனம் தற்பொழுது பல செயற்றிட்ட பிரிவுகளாக பிரிக்கப்பட்டு மக்களின் முன்னேற்றகரமான வாழ்வுக்கு அயராது தம்பணியை ஆற்றி வருகிறது. இன்னும் குறிப்பாக் கிராம மக்களின் விழிப்புணர்வுக்கும் சமூக மேம்பாட்டுக்கும் மக்களை கிராமம் தோறும் குழுக்களாக கட்டியெழுப்பி அவர்களிடையே ஒற்றுமை என்னும் அரிய பண்பையும் சேமிப்பு நடைமுறைகளையும் உருவாக்கிக்கொடுத்து வாழ்வில் மக்கள் வளம்பெற வாழ்வுதயம் ஓர் பயனுள்ள நிறுவனமாக இயங்கி வருகின்றது. இச்செயற்றிட்டங்களை எல்லாம் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை S.யேசுராஜா அடிகளார் செயல் வடிவம் கொடுத்து செயற்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## மதுரைக்கு புதிய பேராயா

ஏப்ரல் 24ல் ஆயர் பீற்றர் பர்னாந்து அவர்கள் தென்னிந்திய மதுரை மறைமாவட்டத்தின் புதிய பேராயராக திருத்தந்தையால் நியமனம் பெற்று தமது பணியினைப் பொறுப்பேற்றார். அன்று மதுரை டீ நொபிலி நடுநிலையத்தில் நடைபெற்ற புதிய பேராயரின் வரவேற்பு விழாவில் இதுவரை பேராயராக பணியாற்றிய பேராயர் மேன்மைமிகு மரியானுஸ் ஆரோக்கியசாமிக்கு பிரியாவிடையும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வின்போது 400க்கு மேற்பட்ட அருட்பணியாளர்களும் 800க்கும் மேற்பட்ட அருட்சகோதரிகளும் தமிழ்நாட்டின் அனைத்து ஆயர்களும் பங்கேற்றிருந்தனர். பேராயர் நியமனத்திற்காக உத்தியோகபூர்வ கடிதத்தினை துணைஆயர் அன்ரனி பாப்புசாமி தமிழிலும் ஆங்கிலத்திலும் வாசித்து அளித்தார்.

# அமெரிக்காவும் பாவமும்

## ஓர் கருத்துக் கணிப்பு


அண்மையில் 1007 அமெரிக்கர்களிடையே மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு ஒன்று 84 விழுக்காட்டினர் 'பாவம்' என்பது பற்றி விசுவசிக்கின்றனர் என்றும், 14 விழுக்காட்டினர் அதை நம்பவில்லை என்று அறியவைத்தது. இக்கணிப்பீடு பற்றிய விமர்சனத்தில் பல பார்வையாளர்கள் அமெரிக்க நாடு நவகால நாகரீகத்தின் முதல் நிலையில் இருக்கிறது என்றும் மறையியல் பண்பாட்டு விதிகள் கூறுபடும் காலகட்டம் ஒன்றில் உள்ளது என்றும் கூறும் இக்காலகட்டத்தில் பெரும்பான்மையினர் பாவம் தொடர்பான கோட்பாட்டில் விசுவாசம் கொண்டுள்ளனர் என்பது இரசனைக்குறிய ஒன்று ஆகும்.

இருப்பினும் 1955ல் கணக்கீட்டிலும் பார்க்க தொகை குறைந்துள்ளது. அன்று தொண்ணூறு விழுக்காட்டினர் அப்படி விசுவசித்தனர். கடந்த 22 வருடகால கணிப்பீடுகளில் 14 விழுக்காரே அதனை விசுவசிக்காத ஆகக் கூடுதலான தொகையாகும். பதினெட்டு வயதினரும் அவர்களிலும் வயதில் முதிர்ந்தோரும் எதேச்சையான ஒரு கணிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டனர்.

பாவத்தில் நம்பிக்கை இல்லை என தம்மை அடையாளங் காட்டியோரின் 25 விழுக்காட்டினர் சுதந்திர அரசியல் கோட்பாடுடையவர்கள். 21 விழுக்காட்டினர் முதுமாணி பட்டக் கல்வியை மேற்கொண்டவர்கள் 22 விழுக்காட்டினர் மிகவும் அருமையாக ஏதாவது மறைவழிபாடுளில் கலந்து கொண்டவர்கள் அல்லது என்றுமே மறைவழிபாடுகளில் பங்கெடுக்காதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

திருத்தந்தையினுடைய ஆளுகையின் வெள்ளிவிழா ஆரம்பமும்

# திருத்தந்தையின் பணிபற்றிய மதிப்பீடுகளும்



மலர்களால் அழகு செய்யப்பட்ட உரோம பல்கலைக்கழக மேடை ஒன்றில் மே 9ல் இவ்வாண்டுக்கான திருஅவை ஆளுகையின் முக்கிய நிகழ்வு ஒன்றினை வத்திக்கான் பேராளர்கள் தொடக்கி வைத்தனர். அது இன்றைய திருத்தந்தை இரண்டாம் அருள்சின்னப்பர் பாப்பிறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட யூபிலி நிறைவாகும். வழமையாக திருஅவையின் ஆண்டு நிறைவு கொண்டாட்டங்கள் ஒக்டோபர் நடுப்பகுதியில் தான் வருமெனினும் மே மாதத் தொடக்கத்திலிருந்து உரைகள் பொழியப்பட, ஆட்சி பற்றிய ஆய்வுகள் உருப்பெற தொடங்கிவிட்டன. இலத்தறன் பல்கலைக்கழகத்தில் நடந்தேறவுள்ள ஒன்று கூடல்கள் மாநாடுகள், வட்ட மேசைகள், புத்தக வெளியீடுகள் என்பவற்றுக்கு இது ஒரு தொடக்க நிகழ்வாகும். ஒருபோதும் தமது ஆண்டு நிறைவுகளைப் பெரிதுபடுத்த விரும்பாத திருத்தந்தை இம்முறை ஒக்டோபர் 9ல் அன்னைத் திரேசாவைப் புனிதராக பிரகடனப்படுத்தி; தம் பணியாண்டு யூபிலியை சிறப்புச் செய்யவுள்ளார். ஆயினும் மற்றையோர் பெரிய ஆண்டு நிறைவு விழாவொன்றினை எதிர்பார்க்கின்றனர். உலக கருதினால் ஆண்டகைகள் அழைக்கப்பட்டு விட்டனர். திருத்தந்தையின் தாயகமான போலந்திலிருந்து பல்லாயிரக்கணக்கானோர் எதிர்பார்க்கப்படுகின்றனர். இத்தாலி, முழு உலக நாடுகளிலும் உள்ள 25 மாநகரங்களில் விழா எடுத்து தங்கள் தத்துப்பிள்ளையென கருதும் போலந்து பாப்பிறைக்கும் - இத்தாலிய பண்பாட்டிற்கும் இடையேயான இணைப்பினைப் பல தொடர் நிகழ்வுகள் வழியாக கொண்டாடவுள்ளது. இலத்தறன் பல்கலைக்கழக நிகழ்வு அனைத்து விழா நிகழ்வுகளையும் முடுக்கி விட்டுள்ளது. முன்னாள் ஆளுகைப் பணி வகுத்தோரும் இந் நாள் ஆளுகையிலுள்ளோருமான 12க்கும் அதிகமான கருதினால்கள் மேடை ஏறித் தங்கள் ஒன்று சேர்ந்த ஆளுகை நலம் மதித்தலை மேற்கொண்டுள்ளனர்.

தம் ஆளுகை பற்றிய மதிப்பீடுகள் பலவற்றைத் தொடர்ந்தும் வர இருக்கும் மாதங்களில் திருத்தந்தை சந்திக்கவுள்ளார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மதிப்பீடு வழங்க முயல்கின்றதாயினும் இப்பாப்பிறை ஆளுகை பற்றிய ஒரு நிறைவான மதிப்பீடு இலகுவானதொன்றல்ல என்பது பலரின் கூற்று. ஒரு கருதினாலுக்கு திருத்தந்தையின் மறைத்தூது வேட்கை திறவுகோலகத தெரிகிறது. ஒரு போலந்து ஆயருக்கு அவரது போலந்து வேதசாட்சியான புனித ஸ்ரனிஸ்லாஸ் உடனான தொடர்பு பெரிதாகத் தெரிகிறது. வேறுசிலர் அவரது மரியாள் பக்தியைக் குறிப்பிட, சிலர் அவர் புனிதர்களை அடையாளங்கண்டு அவர்களைத் திருநிலைப்படுத்தியதை குறிப்பிடுவர். மற்றும் பலர் அவரது முழுக் கத்தோலிக்க உலகுக்குமான 14 வழிகாட்டும் நிருபங்களை முதன்மைப்படுத்துவர். ஒரு செய்தியாளர் இப்பாப்பிறை ஆளுகையின் மையப்பொருள், தகவல் பரிமாற்றம் என்றார். ஒரு மறையியலாளர் தம்மூடாக வெளிப்பட்டு அன்பிலும் சுதந்திரத்திலும் உருப்பெறும் நெகிழ்ச்சியின் தத்துவம் என்றார்.

இலத்தறன் பல்கலைக்கழக அதிபரும் விருந்தளிப்பு நடத்தியவருமான ஆயர் றீனோ விஸ்ஸேல்லா பொது உடமை, வெறுப்பு என்னும் கண்ணாடி ஊடாக கடந்த 25 ஆண்டுகளையும் எடை போட விரும்புவோர் திருத்தந்தையை தப்பாகவே கண்டுகொள்வர் என்கிறார்.

இப்பாப்பிறை யூதர்கள் செபக்கூடங்களையும், மொகமதியர் பள்ளிவாசல்களையும் சந்தித்து கிறிஸ்துவே ஒரே மீட்பர் எனும் நிலைப்பாட்டினை அழுத்தியவர். ஆண்டாண்டு காலமாகத் திரு அவை வரலாற்றில் விட்ட தவறுகளை ஏற்று அவற்றுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்ட அவர், திரு அவைக்கு ஒழுக்கம் சார்ந்த போதனையை இக்காலச் சூழலில் அழுத்தி நிலை நிறுத்தும் அசைக்க முடியாத எண்ணம் கொண்டவர். ஓர் அறிஞர் கூறுவதுபோல் இந்த 25 வருட ஆளுகையை விளக்கக்கூடிய சிறந்த தலைப்பு "தலைப்பிட முடியாதது" என்பதே.

விற்றோறியோ மெசோதி எனும் இத்தாலிய எழுத்தாளர், வத்திக்கான் அலுவல்கள் தொடர்பில் அடிக்கடி விமர்சனங்களை எழுதுபவர். பாப்பிறை ஆளுகை தொடர்பான இத்தாலியின் ஏகபோக உரிமையைப் பாப்பிறை எப்படி உடைத்துள்ளார் என்பது பற்றிய விபரங்கள் பலவற்றைத் தந்துள்ளார். பாப்பிறை தெளிவானதும் அப்பதவிக்கு இத்தாலியருக்கு உள்ள சிறப்பான ஆன்மீகத் தன்மை பேதுருவின் கதிரைக்கு அவர்களே ஏற்றவர்கள் என்ற அந்த எண்ணம் தொடர்பாக பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன என்பதை குறிப்பிட்டுள்ள அவர் அதனை உடைத்த வண்மை, சமரச ஆற்றல் அல்ல என்றும் அனைவருக்கும் மீட்புக் கொண்டுவரும் ஒரு வினாவின் இரண்டு பக்கங்களையும் ஏற்கும் ஆற்றல் என்றும் காலப்போக்கில் இத்தாலியின் திறந்த மனதோடு எல்லோரையும் அணுகும் மனப்பாங்கிற்கு சிறந்த ஓர் எடுத்துக் காட்டாக பாப்பிறைத் தோன்றினார் என்றும் அதேவேளை தம் மறைக் கோட்பாடுகளை பிடிவாதமாக பாதுகாத்து மறையின் முக்கிய அம்சங்களை வளர்க்க முயன்றுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை மன்னாரில் மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு கொட்டாஞ்சேனை அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.